# தமிழரசு

1-6-1989 ரூ. 1






*மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், மாநிலத் திட்டக் குழுவின் பணிகளை, சென்னையில் 15.5.89 அன்று தொடங்கி வைத்தார்.*

# 'கடும் உழைப்பால் உயர்ந்த கருணாநிதி'



''தண்டவாளத்திலே தலைவைத்துப் படு என்று சொன்னாலும், அமைச்சராகப் பணியாற்று என்று சொன்னாலும் இரண்டையும் ஒரேவிதமான ஆணை என்று ஏற்றுக்கொண்டு, திறமையை முழுஅளவிலும் பயன்படுத்திக் கொடுப்பவர் என்ற முறையில் தம்பி கருணாநிதியிடத்தில் எனக்கு மிகுந்த பாசமும் மிகுந்த மரியாதையும் நிச்சயமாக உண்டு என்பதை நாடறியும்.

''கடுமையான உழைப்பால் உயர்ந்த கருணாநிதி இவ்வாறு செய்திடுகின்ற காரியங்களைப்போல் பலமடங்கு அதிகமான காரியங்கள் அவரது திறமையின் மூலம் நாட்டுக்குக் கிடைக்க வேண்டியதிருக்கிறது. அவர்மூலமாக நானும் நாடும் நிரம்ப எதிர்பார்க்கிறோம்.

-பேரறிஞர் அண்ணா


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2020

சுக்ல-வைகாசி 18

மலர் 19 1-6-1989 இதழ் 22



# எதையும் தாங்கும் இதயம் எந்நாளும் வாழ்க

**மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்**

மனிதர் எவராயினும் அவர்தம் வாழ்வில் நிகழ்க்கூடிய இன்பதுன்ப நிகழ்ச்சிகளில் - துன்ப உணர்வு ஓங்கிடுமெனில் - அவர் செயலற்று விடலாம். துன்பமே இல்லாத வாழ்வே இல்லை. இன்பமயமான வாழ்வு என்று எந்த நிலையையும் குறித்திட இயலாது. எனவே மனித வாழ்வில் கடமைகளைச் செய்திடும் வல்லமையைப் பெற எதையும் தாங்கிக் கொள்ளும் திறனால் துன்ப உணர்வை ஒதுக்கி வைத்துச் செயற்பட இதயத்திற்கு - துன்பத்தைத் தாங்கும் வலிமை வேண்டும்!

சமுதாயத்தில் உள்ள பழைய எண்ணங்கள் - ஐயறவுக்கும் கேள்விக்கும் இடந்தராத நம்பிக்கைகளாக உரம்பெற்று, சமுதாயத்தைச் சீரழிக்கும் மூடநம்பிக்கைகளாக நிலைத்து விடுகிறபோது, சமுதாய முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டைகளாக ஆகிவிடுகின்றன. சமுதாய முன்னேற்றம் - பழைய நம்பிக்கைகளையும் - அதனால் அமைந்துவிட்ட மனப்போக்கையும், பழக்கமான வழக்கங்களையும் அந்த மக்கள் ஆய்வு செய்திடும் மனப்பாங்கைப் பெறுவதிலேதான் இருக்கிறது.

அறிவியல்துறை முன்னேற்றம் உருவாகி அதன் பயன்கொள்ளும் நிலையில் வளர்ந்த நாடுகளிலே வாழும் மக்கள் - பெரும்பாலும் மூடநம்பிக்கைகளின் பிடியிலிருந்து விடுபடும் வாய்ப்புடையவராகின்றனர். கல்வி அறிவு பெரிய அளவில் பரவுதலும், வளர்தலும் அதற்குத் துணையாவதால் பெரும்பாலோர் மூடநம்பிக்கைகளினின்றும் முற்றிலும் விடுபடவில்லை எனினும், மூடநம்பிக்கையின் அழுத்தமும் பிடிப்பும் குறைகின்றன. அதன் பிடி தளர்கிறது. புதிய சிந்தனை மலர்கிறது. முன்னேற்றம் உருவாகிறது.

நம்முடைய நாட்டிலோ - பழமையின் பிடிப்பு - நீண்ட கொடிய பழமையினால் அழுத்தமுடையதாக நிலவுகிறது. நம்முடைய மக்களின் மனம் - பல கால கட்டத்தில் பெற்றிருக்க வேண்டிய பலப்பல புதிய கட்ட சிந்தனைகளைப் பெறும் வாய்ப்பினைப் பெறாமலே மூடப்பட்டதாக இருந்து வந்துள்ளது. சமுதாயம் கல்வி அறிவு பெறுவதில் ஏற்படும் போது கால நீட்டத்தால் அவர்தம் உள்ளத்தில் ஊறிவிட்ட பழமையின் பிடிப்பு எளிதில் தளரவில்லை.

மக்களிடையே நிலவிய சில பல, வழக்கங்களையும், நம்பிக்கைகளையும் சிலபல நம்பிக்கைகளை மாற்றும் நோக்குடன் மறுக்கும் கொள்கை விளக்கம் தந்த மதங்களும் பின்னர் காலப் போக்கில் அழுத்தமான சில நம்பிக்கைக்கு ஆட்பட்டவர்களாகவே அவர்களைச் செய்து விட்டன. எனவே சாதி, சமய மத வேற்றுமைகளை நிலை நிறுத்தும் பழக்க வழக்கங்களாக நடைமுறையில் நிலவும் பலவற்றைக் குறித்து மக்கள் சிந்திக்கின்ற நிலையோ - மறு ஆய்வு செய்கின்ற திறனோ பெற்றவர்களாக இல்லை. பெறுவதும் எளிதல்ல. மக்களிடையே நிலவும் பழமை வழி, பழக்க வழக்கங்களால் நிலை நிறுத்தப்படுகிறது. புதிய வழி எதுவாயினும் வேர்கொள்ளாமல் மறைகின்றது. ஏனெனில் பழைய வழி நம்பிக்கைகளுடன் பின்னிப் பிணைந்துள்ளது. புதிய வழி-அறிவு விளக்கத்தாலன்றி நம்பிக்கையுடன் பிணைக்கும் வழியாக அமைய முடிவதில்லை.

இந்நிலையில்தான் - சமுதாயச் சீர்திருத்த நோக்குடன் சுயமரியாதை இயக்கம் பிறந்தது. மக்கள் தன்மான உணர்வு கொண்டு தலை நிமிரப் பகுத்தறிவு வாதம் தொடர்ந்தது. வைதீக மத வழி எண்ணங்கள் மறுக்கப்பட்டன. சாதியற்ற சமுதாயம் காணவே இன உணர்வு துணையாகக் கொள்ளப்பட்டது. ''திராவிடர் கழகம்'' என்னும் பெயரே அதன் விளைவுதான்.

''தமிழர்களாகிய நாம் திராவிட இனத்தவர் - சாதிக் கொள்கையை ஏற்காதவர், வைதீக முறைகளை ஒப்பாதவர் திருவள்ளுவர் நெறியை ஏற்பவர்'' என்னும் வழியில் விளக்கங்கள் தரப்பட்டன. ஆனாலும் மக்கள் - இவற்றை யெல்லாம் காதாரக்கேட்கப்பழகி, ஏற்பதாக உரைப்பினும் அவர்தம் நடைமுறையில் மாற்றம் - குறிப்பிடத்தக்க வகையில் உருவாகவில்லை. அப்படிப்பட்ட மக்களை - அவர்தம் வாழ்க்கையில் முன்னேற்றப்பாதையில் நடைபோடச் செய்ய வேண்டுமெனில் - அது ஒருதலைமுறையில் நிறைவேறிவிடாது என்பதைக் கண்டறிந்தார் அண்ணா. அதனால்தான் - ஆட்சியில் இருந்தாலும் - இல்லாவிட்டாலும் இன்னும் ஐம்பது ஆண்டுக்காலப் பணி நமது இயக்கத்திற்கு இருக்கிறது என்றார் அவர். உண்மையில், தமிழ்நாட்டில் இடை இடையே ஏற்பட்டு வரும் - அரசியல் கட்சி அடியாக வளர்க்கப்படும் குழப்பங்களால் தமிழ் மக்களைத் தெளிவடையச் செய்யும் பணி குறைந்தது நூறாண்டுகளாவது நீடித்தாகவேண்டும் என்று தோன்றுகிறது.



**சுடு நெருப்பில் புடம் போடப் போடத்தான் நல்ல தங்கம் கிடைக்கும். அதுபோல, பொது வாழ்க்கையில் இடையூறுகளுக்கு ஈடுகொடுத்தால்தான் நாட்டிற்கும் மொழிக்கும் இனத்திற்கும் நல்ல பணிகளை ஆற்றிடமுடியும்.**

**- முதல்வர் கலைஞர்**

முயற்சியின் வெற்றி - தள்ளிப்போகும் போதும் - சமுதாய மாற்றம் எளிதாக உருவாகாத போதும் - எப்படிப்பட்ட இலட்சியவாதியும் மனந்தளர்வர். அதுவும் அரசியல் பணியையும் ஏற்றுள்ள சமுதாய இயக்கம் - மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெறவியலாத நிலையில் தோல்வியைச் சந்திக்கும் போதும், மாறுபட்ட நோக்குடையார் ஆதிக்கத்தாலும் சூழ்ச்சியாலும் வீழ்த்தப்படும் போதும் - அறியாமைக்கு ஆட்பட்டு எடுப்பார் கைப்பிள்ளையாகவோ, கொடுப்பார் கூலிக்கு வாய்ப்பளிப்பவராகவோ, ஏவுகின்றவர்களின் எடுபிடியாவதையே பெரும் பதவியாகக் கருதுபவராகவோ உள்ளவர்களினால் ஏச்சுக்கும் பழிமொழிக்கும் ஆளாகும் போதும் - மனம் சலித்தலும், செயலிழத்தலும், ஒதுங்கி நிற்றலும், உலகத்தியற்கை. அதனால்தான் அண்ணா அவர்கள், ''நமது இயக்கம் ஏற்றுக் கொண்டுள்ள குறிக்கோள் ஜனநாயக முறையில் நிலைபெறச் செய்யும் பொறுப்பை ஏற்றவர்க்கு மனத்தளர்ச்சி கூடாது என வலியுறுத்த, எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'' என்றார்.

கருமமே கண்ணாயினார், பசிநோக்கார், கண் துஞ்சார், எவ்வெவர் தீமையும் பொருட்படுத்தார் என்னும் மொழிக்கேற்ப செயற்படுபவர் - எதையும் தாங்கும் இதயமும் பெற்றவராக வேண்டுமன்றோ! அப்படிப்பட்ட இதயமாகத்தான் அறிஞர் அண்ணா தம் இதயத்தைப் பக்குவப்படுத்தி இருந்தார். அண்ணா மறைந்த போது அந்த இதயத்தையே - மறவாது இரவலாகக் கேட்டதன் மூலம் - தன் பொறுப்பை உணர்ந்து கொண்டவராக உயர்ந்து நின்றார் கலைஞர்.

அண்ணாவின் தலைமையில் அவரது இலட்சியப் பணிக்குத் தோள் கொடுத்துத் தாங்கி நின்று, அவரது கட்டளையைத் தலைமேற்கொண்டு பணியாற்றி - அவர் வெட்டிவா - என்றால் - கட்டி வரும் தம்பியாகி - பாளையங்கோட்டையில் தனிமைக் கொட்டடியில் அவரது மனந்திறந்த பாராட்டைப் பெற்ற சிறைப் பறவையாகி, அவரது அணிந்துரையில் - ''என் தம்பியின் எழுத்து ஒரு தனிச் சிறப்புடையது அவன் இன்னும் பல ஏடுகளைப் படைக்க வேண்டும்'' என்ற அவாவினை வெளியிடும் தகுதியுடையவராகி, ''இந்த இயக்கத்தின் வரலாற்றின் முதற் பகுதியை நான் எழுதுகிறேன். என் தம்பி கருணாநிதி அதை நிறைவுசெய்வான்'' என்று குறிப்பிட்டவாறு, அவரது நம்பிக்கையைப் பெற்றவராகி, அவர் வழி நின்று அனைத்துத் துறையிலும் அண்ணாவின் அடியொற்றிச் செயற்படும் - தனிச் சிறப்பும் தன்னிகரற்ற ஆற்றலும் - எதையும் நுணுகிக் காணும் திறனும் - திட்டமிட்டு நிறைவேற்றும் - மதியும் வாய்ந்தவராக விளங்குபவர் கலைஞர் என்பதை மறுப்பதற்கு எவருமிலர். மறுப்பவர் நற்றமிழர் நலம் நாடும் நோக்குடையவர் ஆகார்.

இளமை முதல் கலைஞர் கண்ட களங்கள் பல. சிறைப்பட்டிருந்த மாதங்கள் பல. கொடியவரின் தாக்குதலுக்கு ஆட்பட்டதும் உண்டு. உயிர்தப்பி வந்த இடங்களும் உண்டு. திராவிட முன்னேற்றக்கழகத்தை வீழ்த்த நினைப்போர் - வீசும் கடுஞ்சொற்கள் - சுமத்தும் பழிகள் - எழுதும் இழிமொழிகள் - அளவிட்டுரைக்கவொண்ணா - நாள் தவறினும் இவர்கள் ''ஓலம்'' கேட்கத் தவறாது.

என்றாலும், பெரியார் - அண்ணா பாதையில் அண்ணா வகுத்துத்தந்த அளவுகோல் ஏந்தி, இலட்சியப்பயணத்தைத் தொடர்ந்து வருபவர் கலைஞர் - தமிழர்களைக் காக்கும் கழகத்தின் படைவரிசையில் முதலிடத்தில் நின்று எதிர்ப்பாளர் வீசும் கணைகளையும் வேல்களையும் தமது நெஞ்சுரங்கொண்டு தாங்கியவாறே - ஆற்றல் நடைபோட்டுவரும் மறவர் அவர்!

அவர்கண்ட துன்பங்களையும் கொடுமைகளையும் பிறிதொருவர் கண்டால் அவர் தமது இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்திட மாட்டார். 'எதுவரினும் வரட்டும்! எமது உடல் பொருள் ஆவி அனைத்தும் எமது இலட்சியத் திற்கே!' என்னும் எண்ணம் ஆட்டிப்படைப்பதால்தான்-ஏழாண்டுக்காலம் முதலமைச்சராய் விளங்கியவர் மறுபடியும் எதிர்க்கட்சித் தொண்டனாய்ச் சிறையும் ஏகினார். நெருக்கடிக் காலக் கொடுமைகளைத் தன் குடும்பத்தாரே ஏற்றிட நேரிட்ட போதும் தலை தாழாது நிமிர்ந்தார். கழகத்தை நிமிர்த்தத் தலையும் கொடுத்தார். எனவேதான் - தமிழர்க்கு வாழ்வளித்திடுதற்கு வேண்டும் 'எதையும் தாங்கும் இதயம்' பெற்ற கலைஞர் என்றென்றும் வாழ்க என்று வாழ்த்துகிறேன்.! வாழ்த்துவதில் மகிழ்கிறேன்!

க.அன்பழகன்

# மனித நேய அடிப்படையில் உதவி தொடர நிதி குவிப்பீர்!

## மாண்புமிகு முதல்வர் கலைஞர் வேண்டுகோள்



''1971 ஆம் ஆண்டிலிருந்து என் பிறந்தநாளில் பல்வேறு நலவாழ்வுத் திட்டங்களை அமல்படுத்தியது போல் இந்த ஆண்டிலும் அமல்படுத்த, மனித நேய அடிப்படையிலான அந்த உதவிகள் தொடர நிதி வழங்குமாறு கருணை உள்ளம் படைத்த அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்'' என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 29.5.89 அன்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

★ 1971 ஆம் ஆண்டில் முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்

★ 1972-ல் கண்ணொளி வழங்கும் திட்டம்

★ 1973-ல் கைரிக்ஷாக்கள் அகற்றப்பட்டு இலவச சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கும் திட்டம்

★ 1974-ல் ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம்

★ 1975-ல் ஆதரவற்ற சிறார்களுக்கு கருணை இல்லங்கள் அமைக்கும் திட்டம்

ஆகியவை நிறைவேற்றப்பட்டன.

1989-ல் கடந்த 3 மாதங்களில் மறைவெய்திய விவசாயத் தொழிலாளர்கள் - சிறு விவசாயிகள்- கைவினைஞர்கள் ஆகியோரது குடும்பங்கள், விபத்தில் மாண்ட பனை ஏறுவோர் குடும்பங்கள், வெடி விபத்தில் மாண்டவர் குடும்பங்கள் என 93 குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி அளிக்கப்பட்டுள்ளது.

இதய அறுவைச்சிகிச்சைக்காகவும் சிறுநீரக அறுவைச் சிகிச்சைக்காகவும் மனுச் செய்தோருக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

சென்னை பொதுமருத்துவ மனையில் இலவச இருதய அறுவைச் சிகிச்சை செய்வதற்காக ரூ 1 கோடி வழங்கப்பட்டுள்ளது. சிறுநீரக சிகிச்சைக்காக ரூ 1¼ கோடி வழங்கப்பட உள்ளது.

மூடப்பட்டுள்ள ஆலைகளில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நலநிதியிலிருந்து தரப்பட்டது தவிர முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ 26 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற மனித நேய அடிப்படையில் உதவிகளைச் செய்ய நிதி வழங்க விரும்புவோர்,

**முதலமைச்சர் பொதுநிவாரணநிதி,**
**நிதித்துறை**
**தமிழக அரசு தலைமைச்செயலகம்**
**சென்னை-600 009**

என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



# சரித்திர நாயகன்

## மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்

## திரு நாஞ்சில் கி. மனோகரன்

முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் 66வது பிறந்தநாள் விழாவில் என் நெஞ்சார்ந்த வாழத்துக்களைத் தெரிவிப்பதோடு, அவரது இயல்பிற்கும், பண்பிற்கும் ஏற்புடைத்தான வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு சரித்திர நாயகனின் பேச்சின் ஒரு பகுதியைக் காணிக்கையாக்குகிறேன்.

"Fourscore and seven years ago our fathers brought forth on this continent a new nation conceived in liberty, and dedicated to the preposition that all men are created equal. Now we are engaged in a great civil war, testing whether that nation or any nation so conceived and so dedicated can long endure. We are put on a great battle field of that war. We have come to dedicate a portion of that field as a final resting place for those who here gave their lives that nation might live. It is altogether fitting and proper that we should do this.

"But in a larger sense, we cannot dedicate - we cannot consecrate - we cannot hollow - this ground. The bravemen, living and dead, who struggled here, have consecrated it, far above our poor power to add or detract. This world will little note nor long remember, what we say here, but it can never forget what they did here.

"It is for us the living, rather, to be dedicated here to the unfinished work which they who fought here have thus far so nobly advanced. It is rather for us to be here dedicated to the great task remaining before us - that from this honoured dead we take increased devotion to that cause for which they gave the last full measure of devotion - that we here highly resolve that these dead shall not have died in vain - that this nation under God, shall have a new birth of freedom - and that Government of the people, by the people, for the poeple shall not perish from the earth."

வார்த்தைக்கு வார்த்தை, வரிக்கு வரி, கலைஞரை எதிரொலிக்கும் இந்தச் சொற்பொழிவிற்குச் சொந்தக்காரன், அடிமைகளின், ஆதிக்கக்காரர்களின் நாய்களாகக் கருதப்பட்டவர்களின் உன்னதமான வாழ்விற்காகத் தன்னை ஒப்படைத்துக் கொண்ட ஜனநாயகத்தின் திருஉருவம் ஆபிரகாம்லிங்கன்.
உரையாற்றிய இடம் நினைவினை விட்டு அகலாத கெட்டிஸ் பெர்க் (Gettys Burg) .

மொத்தத்தில் குடியாட்சி முறையை நம்பி, அதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் கலைஞர், அவர் தம் ஆட்சி, எந்த மதத்திற்கோ, இனத்திற்கோ, மொழிக்கோ, மாறுபட்ட அரசியல் கட்சிகளுக்கோ எதிரின்றி, செயல்பட்டுவரும் ஆட்சி.

"புழுதி வாரி தூற்றுவோர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்; புதுமைகளை, புரட்சிகளை எதிர்ப்போருக்குப் புயலாவேன், அடிபணியேன்; அடக்கம் காப்பேன்! அமைதியினை, அடக்கத்தை அண்ணா தந்த அறநெறியைக் காக்கின்ற அரசுக்கிங்கே, தடைக்கற்கள் தந்திட முயல்வோர் தம்மை தமிழ்த்தாயின் காலடியை முத்தமிட்டு, தரணிக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன், "தடந்தோள் உண்டெனச் சிரிப்பேன்" என்பதுதான்.

இறுதியாக, என்னை மிகவும் கவர்ந்த ராபர்ட் பிராஸ்ட் (Robert Frost) அவர்களின் கவிதை வரிகளை, கலைஞரின் உரிமை பெற்று, அவர் கூறுவதாகக் கணித்துக் கீழே தருகிறேன்:

"The wood is lovely, dark and deep.
I have promises to keep.
And miles to go before I sleep
And miles to go before I sleep"

இவர்தான் கலைஞர் - இந்த இளைஞனுக்குத்தான் வயது 66ஐ நெருங்குகிறது.

நூற்றாண்டுக் காலம் வாழ்க!
வழக்கம்போல் சுறுசுறுப்பாக வாழ்க!
மக்களின் அனுமதியை, அங்கீகாரத்தைப் பெற்று நீங்கள் நிம்மதியோடு வாழ்க'



# தன்னேரில்லாத் தலைவர்

**த**மிழ்த்தாயின் தவப்புதல்வன், தமிழ் மக்களின் கலங்கரை விளக்கமாம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 66-வது பிறந்த நாள் காணும் இந்த நேரத்தில் சில எண்ணங்களை எடுத்துக்கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அன்று-தமிழக முதல்வராகக் கலைஞர் பணியாற்றுங்காலம்; நான் ஸ்ரீரங்கம் நகராட்சியின் தலைவராக இருந்தேன். அந்த நகராட்சியின் நூற்றாண்டுவிழா எடுக்க வேண்டியிருந்தது. நான் ஸ்தாபனக்காங்கிரஸில் இருந்தாலும் கலைஞரைச் சந்தித்த போது அன்புடன் என்னை வரவேற்று மாற்றுக்கருத்துக்களை மறந்து நகராட்சியின் நூற்றாண்டு விழாவில் சிறப்புறக் கலந்து கொண்டதுடன் அதற்கு வேண்டிய எல்லாவித ஆக்கப்பணிகளையும் நிறைவேறச் செய்த அவர்தம் மாண்பு இன்றும் நினைவு கொள்ளுதற்குரியது.

நான் மேல் சபை உறுப்பினராக இருந்த சமயம், சபையில் வயதில் பெரிய உறுப்பினர் என்ற முறையில் என்னை நடத்திய பாங்கையும் ஆக்கப் பணிகளில் அவ்வப்போது எனது கருத்துக்களுக்கு அவர் அளித்த மதிப்பையும் பார்க்கும்போது அவர் சிறந்த பண்பாளர் என்பது தெளிவாகும்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண' விரும்பிய இவரது காலத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டம் (1969) அமலாகியது. நில உச்சவரம்பினை ஏற்படுத்தி, அதற்கு மேற்பட்ட நிலத்தைப் பறிமுதல் செய்து அரசு கையகப்படுத்தும் அருமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியவர் இவரே!

அரிசன மக்கள் வீட்டு வசதித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தி ஏழைகளுக்கு இருப்பிடம் ஈந்த ஏந்தல்தான் கலைஞர்; மனித வாழ்க்கைக்குக் கண் எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து, கண்ணொளி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்து தமிழகத்தின் கண்ணாகக் கலைஞர் விளங்கினார் என்பதில் சந்தேகமேயில்லை.

மற்றவர் மன உணர்வு புண்படாமல் நடப்பதிலே கலைஞர் கவனமாக இருப்பார். மதக்கருத்துக்களில் மாறுபாடு இருந்தாலும், மனக்கருத்துக்களில் வேறுபாடின்றி, ஆன்மீக மக்களின் மன உணர்வைப் போற்றும் வகையில் 1967-இல் திருவாரூர் ஆழித் தேரோட்ட விழாவினை நடத்தி, மக்களின் நன்மதிப்பினைப் பெற்றார். மக்கள் மனங்களிக்க இவரது ஆட்சியில் பல்வேறு கோயில் திருக்குடமுழு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தகுந்தது.

வானத்து மீனை வளைத்துப் போடுவோம் என வாய்ச்சாலம் பேசாமல் - செய்ய முடிந்ததையே சொல்லி, செய்ய நினைத்ததையே பேசி, செய்ய முடிந்ததைச் செய்து முடித்துக்கொண்டிருக்கும் ஒரு சாதனையாளர் டாக்டர் கலைஞர்.

திருவானைக்கோவில் திருக்குடமுழுக்கு விழா டாக்டர் கலைஞர் ஆட்சியில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

ஆட்சிப் பொறுப்பில் ஏறிய குறுகிய நாளில், அவரது சாதனைகள், எண்ணிப் பார்த்தற்குரியன. ஆட்சியின் நிதி நிலை அலங்கோலமாக இருந்ததைப் பெருமுயற்சியுடன் சரி செய்தார்.

ஏழை மக்கள் பயன்பெற, இலவசமாக 5 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்த ஏழை பங்காளர் டாக்டர் கலைஞர்.

சத்துணவை உண்மையில் சத்தான உணவாக மாற்றிய சாதனையும் இவருடையதே! முதியோர் பலரும் வயிறார வாழ்த்துவார்கள் இந்த நாளில் என்பதில, சந்தேகமேயில்லை.

ஏழைப் பெண்களின் திருமண உதவித்திட்டம், ஆட்டோ ரிக்ஷா இலவசமாகப் பெறும் திட்டம் ஆகியவை மக்கள் வாழ்க்கையில் மகத்தான இடத்தைப் பெற்றுள்ளன.

கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கென 30 சதவீதத்தை ஒதுக்கி, தாய்க்குலத்தின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்த தன்னேரில்லாத் தலைவர்தான் டாக்டர் கலைஞர். பெண்களுக்குச் சொத்துரிமையும் வாரிசுரிமையும் அளித்துப் பெரும்புகழ் பெற்றார் அவர்.

தங்கள் மேலான பணியை மக்களிடத்தில் ஆற்ற, மேல்சபையை மீண்டும் கொண்டு வர ஏற்பாடு செய்த மேதைதான் டாக்டர் கலைஞர்.

மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்ற அறிஞர் அண்ணாவின் வழியை அயராது கடைப்பிடித்து, கட்சியின் மதமாச்சரியங்களைக் கடந்து, மக்கள் நலனுக்காக நன்மை தருங்கருத்துக்களைத் தயங்காமல் ஏற்றுக்கொள்ளும் டாக்டர் கலைஞர் தொண்டு சிறக்க வேண்டும்.

தமிழர்கள் நலனுக்காகத் தன்னையே தந்தவர் தலைவர் கலைஞர். நம் நாட்டில் மட்டுமல்ல, தமிழர்கள் உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் தமிழர் நலனுக்காக அன்றும் இன்றும் என்றும் பாடுபடும் ஒரே தலைவர் - உயர்ந்த தலைவர் டாக்டர் கலைஞர் தான். அவர் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து மக்களுக்குத் தொண்டாற்ற இறைவனை வேண்டுகிறேன்.

**ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்**
தலைவர், சட்டமன்ற ஜனதா தளம்



# அண்ணாவின் தம்பி

தமிழாய் வாழ்ந்து காட்டி, இளைய சமுதாயத்திற்கு தமிழ்மொழிப் பற்றை, பேச்சாற்றலை, எழுத்தாற்றலைக்கற்றுக் கொடுத்து 66-ஆம் ஆண்டு பிறந்த நாளைக் காணும் தமிழக முதல்வர் ''டாக்டர் கலைஞர்'' அவர்களுக்கு எனது இதயங்கனிந்த பிறந்தநாள் நல் வாழ்த்துக்கள்.

என்னை வளர்த்த-மறைந்த தமிழக முதல்வர் டாக்டர் ''புரட்சித் தலைவரின்'' நாற்பது ஆண்டுக்கால நண்பரும், பொதுவாழ்வில் ''பொன்விழா'' கண்டு, பொன்விழா கண்ட தமிழக சட்டமன்றத்தில் ஏழுமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு - அரசியலில் எத்தனையோ சோதனைகள், தோல்விகள், எதிர்ப்புகள் ஆகியவற்றைச் சந்தித்த போதிலும், கொண்ட கொள்கையில் இருந்து மாறாமல் மன உறுதியோடு, அவர் தொண்டாற்றியதை யாரும் மறுக்க முடியாது.

எத்தனையோ தலைவர்கள் தோல்வி கண்டு, துவண்டு, கொண்ட கொள்கையிலிருந்தும் விலகி, கட்சியையும் காட்டிக் கொடுத்து, வேறொரு கொள்கையைப் பதவிக்காக ஏற்றுக் கொள்கின்ற இந்தக் காலகட்டத்தில் - இறுதி மூச்சுள்ளவரை தமிழ், தமிழ்ச்சமுதாயம், தமிழ்நாடு என்பதைப் பறைசாற்றி, பேரறிஞர் அண்ணாவின் தம்பியாய் வாழ்ந்து வரும் ''கலைஞரை'' பாராட்டி அவர் எந்தக் குறைவுமில்லாமல் வாழ்க ''பல்லாண்டு'' என மனதார, நெஞ்சார வாழ்த்துகிறேன்.

அன்புடன்,



**பி. எச். பாண்டியன்**
சட்டமன்ற உறுப்பினர்,
சேரன்மாதேவி தொகுதி



# பெருமைதரும் இலட்சியம்

அஞ்சா நெஞ்சமும், அயராது உழைக்கும் தன்மையும் கொண்டவர் நம் முதல்வர் அவர்கள். பொது வாழ்வில் எத்தனையோ இடர்ப்பாடுகள் வரலாம். அவைகளைத் தைரியமாக எதிர்நோக்கிப்போவதுதான் தமக்குப் பெருமை என்ற அவர் லட்சியத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஓய்ந்து, சோம்பி உறங்காமல், உழைத்து முன்னேற்றமடைய, கைத்தொழில்களை ஆரம்பித்து, அதில் மனமகிழ்ச்சி அடைவார் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது.

துவேஷமற்ற நிலையையும், நேர்மையையும் கடைப்பிடித்து, நெஞ்சில் கருணையுடனும், பொறுமையுடனும், அன்புடனும், மக்கள் பணி ஆற்ற, இன்னும் பல ஆண்டுகள் நலமுடன் வாழ ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

உண்மையுள்ள



**ஏ.எஸ். பொன்னம்மாள்**
சட்டமன்ற உறுப்பினர்,
நிலக்கோட்டைத் தொகுதி



சென்னைக்கு 24.5.89 அன்று வருகை தந்த
மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர்
திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களை, சென்னை
விமான நிலையத்தில்
மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்
மாலை அணிவித்து வரவேற்றார்கள்.



சென்னைக்கு 23.5.89 அன்று வருகைதந்த மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களை, மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர், மாண்புமிகு முதல்வர் கலைஞர், மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு தலைமைச்செயலர் திரு. எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப. ஆகியோர் சென்னை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

வடஆர்க்காடு மாவட்டத்தில் நடைபெற்றுவரும் வறட்சி நிவாரணப்பணிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 25.5.89 அன்று பார்வையிட்டார். மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் ஆற்காடு திரு. வீராசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் ஆகியோர் உடன் உள்ளனர்.





# உடல் ஊனமுற்றவருக்கு உடனடிச் சிகிச்சை முதல்வர் செய்த உதவி

புதுக்கோட்டையைச் சேர்ந்த சாந்தாபுரம் 1-ம் வீதியில் வசித்து வருகிறார், இலங்கை அகதி திரு. எஸ். இராமச்சந்திரன். இவர் இலங்கையில் இருந்தபோது இடது காலில் அடிபட்டு, குணமடையாத நிலையில் 1975-ஆம் ஆண்டு தமிழகம் திரும்பி, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களிடம் விண்ணப்பம் கொடுத்து, முதல்வர் அவர்களின் ஆணைப்படி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். புதுக்கோட்டை திரும்பி நல்வாழ்வு வாழ்ந்து வந்தார். தற்போது சுமார் 2 மாதத்திற்கு முன்னர் மீண்டும் அவரது இடது காலில் அடிபட்டது. பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றும் பலனளிக்காததுடன், கால் அழுகிய நிலைக்கு ஆளானார். கடந்த 20-3-89 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்தித்து உடனடிச் சிகிச்சை கோரி விண்ணப்பம் அளித்தார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், அவருக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்கவும், இலவசமாகச் செயற்கைக்கால் பொருத்திடவும், இலவசக் காலணிகள் வழங்கவும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆணையிட்டார். அதன்படி, அன்றைய தினமே (20-3-89) சென்னை கே. கே. நகர் மறுவாழ்வு செயற்கை உறுப்புப் பொருத்தும் நிலையத்தில் திரு. எஸ் இராமச்சந்திரன் அனுமதிக்கப்பட்டார். அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. இலவசமாகச் செயற்கைக்கால் பொருத்தியதுடன் இலவச ஊன்றுகோல் கருவிகளும் இலவசக் காலணிகளும் அவருக்கு வழங்கப்பட்டன.

சிகிச்சை பெற்றுத் திரும்பிய திரு. எஸ். இராமச்சந்திரன், ''காலதாமதமின்றி இவ்வுதவியைச் செய்து கொடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கும் அரசு அலுவலர்களுக்கும் மறுவாழ்வு பெற்றுள்ள நான் இருகரம் கூப்பி எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று மனமகிழ்ச்சியுடன் 19-5-89 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.



# ஓவியருக்கு, முதல்வர் அளித்த நிதி



திருவள்ளுவர் உருவத்தை ஓவியமாக வரைந்து தமிழகத்திற்கு அளித்துள்ள ஓவியர் திரு. வேணுகோபால் சர்மா அவர்கள் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டுள்ளார்.

ஓவியரின் புதல்வர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை 24.5.89 அன்று சந்தித்து, இதுவிவரத்தைத்தெரிவித்த போது, அந்தச் செய்தியைப் பரிவுடன் கேட்டுக்கொண்ட முதல்வர் அவர்கள் உடனடியாக முதலமைச்சர் நிதியிலிருந்து 10 ஆயிர ரூபாயை ஓவியருக்கு வழங்க ஆணையிட்டார். அதன்படி மேற்படி தொகைக்குரிய காசோலை வேணுகோபால் சர்மாவுக்கு வழங்கப்பட்டது.

முதல்வர் கலைஞர் அவர்கள், தமது குறளோவியம் நூல் வெளியீட்டின் மூலம் கிடைத்த தொகையை ஏற்கெனவே, ஓவியர் வேணுகோபால் சர்மாவுக்கு அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க செய்தி.



# கலையாய் ஒளிரும் கலைஞர்

**- கவியரசு முடியரசன்**

**கோ**ட்டைக்குள் புகுந்திருக்கும் இந்தத் தும்பி
குணக்குன்றாம் அண்ணாவின் நல்ல தம்பி
நாட்டுக்கு நலம்பயக்கும் கல்வி கற்க
நாளெல்லாம் ஈரோட்டுப் பள்ளி சென்றான்
நாட்டத்தைக் காஞ்சிபுரக் கல்லூரிக்குள்
நாடவிட்டான்; கலைகற்றான் தெளியக் கற்றான்
கோட்டுக்குள் நிலைநின்றான் காஞ்சி வேந்தன்
கொடுத்தமுது கலைஞனெனும் பட்டம் பெற்றான்.

நண்பரென்று நடிகரென்று மறவர் என்று
நாடாளும் அமைச்சரென்று கவிஞர் என்று
பண்புடைய பேச்சாளர் என்றி வர்க்குப்
பலப்பலப்பேர் இட்டுள்ளார்; ஆனால் அப்பேர்
கண்ணெதிரில் பலருருவைக் காட்டி நிற்கும்;
கலைஞர்எனும் அழகொழுகும் சொல்லை நெஞ்சில்
எண்ணுமுனம் எவருருவம் கண்முன் தோன்றும்?
எம்கருணா நிதியுருவம் ஒன்றே தோன்றும்!

பெரியவர்கள் எண்ணிலராய் இருந்த போதும்
பெரியாரென் றுரைத்துவிடின் ஈவே ராதான்;
அறிவுடையார் பற்பலபேர் இருந்தும் இங்கே
அறிஞரெனின் அண்ணாதான் கண்முன் நிற்பார்;
கருநிறையும் கவிபுனைவோர் பலரி ருந்தும்
கவிஞரெனின் பாவேந்தர் உருவந் தோன்றும்;
பரிவுடனே கலைஞரெனும் பெயரைச் சொன்னால்
பாராளும் கருணாநிதி உருவே தோன்றும்!

பழகுகின்ற முறையினிலே கலையி ருக்கும்
பழகியவர் தவறுசெயின் கடிந்த போதும்
அழகொழுகச் சொலுமுறையில் கலையி ருக்கும்
அவ்வைசொல்லும் 'நப்'போல நின்று சுற்றம்
தழுவுவதில் கலையிருக்கும்; துறைகள் தோறும்
தனக்கென்று வழிவகுத்தும் திட்ட மிட்டும்
ஒழுகுவதில் கலையிருக்கும் அவன்றன் வாழ்வில்
ஒவ்வொன்றும் கலையழகே விஞ்சி நிற்கும்!

பல்கலைசேர் கழகமெனச் சான்றோர் கூறும்
பாங்குடைய மாளிகையில் புகுந்தா னல்லன்;
பல்கலையின் கழகமெனத் தோன்றும் அண்ணன்
பார்வையிலே அத்தனையும் கற்று விட்டான்;
வெல்கலையில் இவனறிவுத் திறத்தைக் கண்டு
வியக்கின்றார் கல்லூரிப் பட்டம் பெற்றோர்;
வெல்கதமிழ்க் கலைஞனிவன் வெல்க என்றே
வீறுகொண்ட தமிழ்ப்பாவால் வாழ்த்து கின்றேன்!



# நல்லமைச்சன்

— கவியரசு கண்ணதாசன்



நிதானபுத்தி நேரிய பார்வை
நின்றுகண் டறிந்து நெடுவழி செல்லல்
சதாவ தானத் தனிப்பெருந் திறமை
தன்னை யறிந்து பிறர்உளம் நோக்கல்
நதியென ஓடி நாளெல்லாம் உழைத்தல்
நாடும் மக்களும் நலம்பெற நினைத்தல்
அதிசயச் சொற்றிறன் ஆய்வுறு கூர்மதி
அன்பர் நலத்திலும் அக்கறை செலுத்தல்
மதியுறு மாண்தகை மந்திரிக் கிவையே
இலக்கண மென்றால் இலக்கியம் இவரே!
கருணா நிதியின் கனித்தமிழ் அரசு
பலநாள் நிலைக்கப் பக்குவம் பெற்றது
வாழிய நண்பர்! வாழிய அமைச்சர்!
வாழிய கலைஞர்! வாழிய தமிழர்!

(1970)

# உலகாளும் உத்தமன்

— திருவாசகமணி
கே.எம்.பாலசுப்பிரமணியம்

திருவார்ந்த தண்டமிழர் திகழார்வம் தொண்டுதழை
சிவமார்ந்த நாட்டின் அர சாம்
திடமார் அமைச்சரவை யிடமார்ந்து மெச்சவரும்
சிலமா பெருஞ்செயல் களை
உருவார்ந் திடச்செய்தஉனைத் தெருவார்ந்த மக்களவர்
உலகாளும் உத்தமன் எனும்
உரையால் மதித்திடவும் உளமே புகுந்தவரை
உணர்வோ டுரைத்தடிமை கொள்.

தருவார்ந்த தத்துவரின் தகையாய நற்குணமும்
தரமார்ந்த அறிவின் ஒளியும்
தமிழ்நா டதற்குரிய அமிழ்தா யுனைப்பெரிய
தலைவன் எனச்செய் தவே!
கருவார்ந்த நாட்கள்முதல் திருவார்ந்த வாய்ப்பினொடு
கவிவார்ந்த தோற்றமுறு வோய்!
கவியாளர் கட்டோர்இறை புவியாள் அமைச்சுநிறை
கருணா நிதிக்கலைஞ ரே!

(1970 ஜூன்)



# துயர்நீக்கும் துணைவன்



அன்புடையான் அறனுடையான்
பண்புடையான் ஆற்றல்மிக்கான்
துன்புடையார் துயர்நீக்கும்
துணைவனாவான் தெம்புடனே
நல்லாட்சி நடத்துகின்ற நமது கருணாநிதியை
எல்லோரும் வாழ்த்துவோ மே.

— நாமக்கல் வெ. இராமலிங்கனார்



எனது அன்புக்குரிய அமைச்சர் பெருமக்களே, மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, ஆலோசகர் அவர்களே, பல்வேறு துறைச் செயலாளர்களே, நண்பர்களே.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக, மாநிலத் திட்டக் குழுவை தி.மு.க. அரசு அமைத்து மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருந்தது. 1971-இல் மாநிலத் திட்டக் குழு துவக்கப்பட்டபோது, அம்முயற்சி பல்லோராலும் பாராட்டப் பெற்றது. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் திட்டக் குழுவில் ஆற்றல் மிகுந்த வல்லுநர்களின் பங்கு குறைந்துவிட்டது. திட்டக் குழுவும் சரிவரச் செயல்படாமல் முடங்கிப் போயிருந்தது. தி.மு.கழகம் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றபின் பல்வேறு துறையைச் சார்ந்த மக்களைச் சந்திக்கும் வகையில் நான் தொழிலதிபர்களுடன் சென்ற மார்ச் 6-ஆம் தேதி கலந்து உரையாடும்போது சிறந்த அறிஞர்களைக் கொண்ட சிந்தனை ஊற்றாக (Think Tank)- மாநிலத் திட்டக் குழு விரைவில் அமைக்கப்படும் என்றும், நானே அதனுடைய தலைமைப் பொறுப்பை ஏற்க எண்ணியுள்ளேன் என்றும் அறிவித்தது உங்களுக்கெல்லாம் நினைவிருக்கலாம். அந்த அடிப்படையில், அனுபவம், ஆர்வம் ஆகிய அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற வல்லுநர்களை உள்ளடக்கிய ஒரு குழுவாக இந்தத் திட்டக்குழு உருவாக்கப் பட்டுள்ளது. பல்வேறு பணிகளுக்கிடையேயும் சிரமத்தைப் பொருட்படுத்தாது இந்தக் குழுவில் பொறுப்பேற்க முன்வந்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# வளமான எதிர்காலத்திற்கு வழிவகுப்போம்



## முதல்வர் கலைஞர்

சட்டப் பேரவையில், வரவு செலவுத் திட்ட விவாதத்தின் இறுதியில் உரையாற்றும் பொழுது நான், திட்டக்குழு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிப்பதைத் தனது முதற்கடமையாகக் கொள்ளும் என்று குறிப்பிட்டுள்ளேன். இக்காலத்தில் நாம் எந்தச் செயலை மேற்கொண்டாலும் அதில் வெற்றி பெறுவதற்குத் திட்டமிடுதல் இன்றியமையாததாகும். அந்தத் திட்டம் தொலைநோக்குத் திட்டமாக அமைந்தால்தான் அன்றாட வாழ்வில் ஏற்படக் கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயே நமது அனைத்து சக்தியையும், கவனத்தையும் செலவழிக்காமல், ஒரு நீண்ட காலக்குறிக்கோளுடன் இயங்க முடியும். முக்கியமாக, இன்றைய ஆரவார, அவசர அரசியல் நிலையில், ஒரு அரசு அவ்வப்போது ஏற்படுகின்ற சங்கடங்களுக்குத் தீர்வு காண்பதிலேயே தனது சக்தியையும், காலத்தையும் செலவிட்டு விட்டு வளமான எதிர்காலத்திற்கென வழி வகையொன்றும் செய்யாதிருப்பின், அது, அந்த அரசின் மேல் நம்பிக்கை வைத்து, அரசுப் பொறுப்பை அளித்த மக்களுக்கு இழைக்கக்கூடிய மாபெரும் அநீதியாக அமைந்துவிடும். அதனைத் தவிர்க்க, இம்மாநில மக்களின் வளர்ச்சியினைக் குறிக்கோளாகக் கொண்ட ஒரு தொலைநோக்குத் திட்டத்தைக் கைக்கொள்வது இன்றியமையாதது.

மேற்கூறியபடி, முறையாக ஒருதிட்டம் தீட்ட அதனைச் சார்ந்த வேறுசில பணிகளையும் மேற்கொள்வது மிக அவசியமாகிறது. எதிர் காலத்திற்காக திட்டம் தீட்ட, நிகழ்கால நிலையை முதலில் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு முதலில் இன்றைய நிலைபற்றிய புள்ளி விவரங்கள் தேவை. எனவே, புள்ளி விவரங்களை முன்கூட்டியே சேகரித்துத் தயாராக வைத்துக் கொள்ளுவது திட்டமிடுவதற்கு இன்றியமையாதது. தவிரவும், திட்டப் பணிகளின் முன்னேற்றத்தைக் காலக்கெடு வைத்து ஆய்வு செய்யவேண்டும். மேலும், பல்வேறு துறைகளில் பலவிதமான திட்டப்பணிகள் மேற்கொள்ளப் படும்போது அவை நடைமுறையில் எவ்விதம் செயல்படுத்தப்படுகின்றன, நாம் விரும்பிய இலக்கை, விரும்பியவண்ணம் அடையும் முறையில் உள்ளனவா, நடைமுறையில் மாறுதல்கள் தேவையா, என்பனவற்றையெல்லாம் அறிந்து கொள்ளத் தக்க வகையில் பணிகளின் செயலாக்கம் மதிப்பீடு (Evaluation) செய்யப்படவேண்டும். இதையெல்லாம் கருத்தில் கொண்டு, திட்டம் வகுக்கும் திட்டக் குழுவே, இப்பணிகளை மேற்கொள்ளுவது ஏற்புடையதாக இருக்கும் என்று எண்ணி, இதுகாறும், அரசு பொறுப்பேற்றுக் கொண்டிருந்த புள்ளி விவரச் சேகரிப்பு (Data collection), திட்ட மதிப்பீடு (Evaluation), திட்ட ஆய்வுரை (Plan Review) போன்றவைகள் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதுவன்றி, திட்டமிடுதலையும், நிறைவேற்றுவதையும் பரவலாக்கும் முயற்சியாக, மாவட்ட, ஊராட்சி ஒன்றியத் திட்டங்களையும், மாநிலத்

திட்டத்துடன் இணைப்பதைப் பரிசீலிக்கும் பொறுப்பும், திட்டக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்தே எந்த அளவுக்குத் திட்டக்குழுவிடம் இந்த அரசு நம்பிக்கை வைத்திருக்கிறது என்பது உங்களுக்கு விளங்கும்.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரிப்பதில் நாம் ஈடுபடும் இத் தருணத்தில் மாநிலத்தின் தற்சமய வளர்ச்சி நிலையையும், இருக்கின்ற சில பிரச்சினைகளையும், சுட்டிக் காட்டுவது ஏற்புடையதாக இருக்கும் என்று எண்ணுகின்றேன்.

இந்தியத் துணைக்கண்டத்தின் மொத்த மக்கட்தொகையில் ஏழு சதவீத மக்கள் தமிழகத்தில் உள்ளனர். ஆனால், நிலப் பரப்பில் தமிழகம் 4 சதவீதம்தான் உள்ளது. எனவே, தனி நபருக்குக் கிடைக்கும் சாகுபடி நிலப்பரப்பு இங்கு அகில இந்திய சராசரியைவிடக் குறைவு.

தமிழ்நாட்டில் உள்ள இயற்கை ஆதார வளம் (Natural Resources) பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது உயரிய நிலையில் இல்லை. கனிவளத்தைப் பொறுத்தமட்டில் பழுப்பு நிலக்கரியையும், தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள எண்ணெய் வளத்தையும் தவிர வேறு குறிப்பிடுகிற கனிவளம் இல்லை. மேலும், அனல் மின்சக்திக்குத் தேவையான நிலக்கரி கிடைக்கும் இடங்களிலிருந்தும் தமிழகம் வெகு தொலைவில் உள்ளது. நீர் வளத்தைப் பொறுத்தமட்டில், ஆறுகளானாலும், குளங்களானாலும், அல்லது பிற நிலத்தடி நீராக இருந்தாலும், இவையெல்லாம் பருவமழையையே நம்பியுள்ள நிலையில் இருக்கின்றன. பருவமழை பொய்த்தாலோ அல்லது மிகுந்தாலோ வறட்சி அல்லது வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படக்கூடிய நிலையில் உள்ளன. நீர்ப்பாசன ஆதாரங்கள் ஏறக்குறைய முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு விட்டன. காட்டு வளமும் நம்மிடம் அதிகம் இல்லை. மேலும், கணிசமான அளவுக்கு மக்கள் நகர்ப்புறத்தில் வசிப்பதால், நகர்ப்புற வசதிகளாகிய வீட்டுவசதி, குடிநீர், துப்புரவு, போக்குவரத்து, சாலை போன்ற இனங்களில் பெரும் முதலீடு செய்ய வேண்டியுள்ளது.

மேற்கண்ட இடர்ப்பாடுகளுக்கிடையிலும், சென்ற நாற்பது ஆண்டுகளில், தமிழ்நாடு வளம்படைத்த மாநிலங்களுக்கு இணையாகப் பல்வேறு இனங்களில் முன்னேற்றம் பெற்றுள்ளது. குறிப்பாக, கிராமப்புற மின்வசதி, கிராமப்புற குடிநீர் வசதி, மின்விசை பெற்ற பம்புசெட்டுகள், பயணிப் போக்குவரத்து போன்ற வகைகளில் தமிழகம் இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது. தவிரவும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் பெறப்படும் கடன்களுக்கும், அவ்வங்கிகளில் உள்ள வைப்புத் தொகைக்கும் உள்ள விகிதாச்சாரத்திலும், (Credit-Deposit Ratio) தமிழகம் முன்னணியில் உள்ளது. மேலும், இருக்கின்ற பாசன வசதிகளைப் பயன்படுத்தும் அளவு, நெல், கரும்பு, கடலை, பஞ்சு போன்ற பயிர்களின் எக்டேருக்கான உற்பத்தித்திறன் (per hectare productivity) எக்டேருக்கான இரசாயன உரம் நுகர்வு, வளர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ள சாலை, தகவல் தொடர்பு போன்ற வசதிகள் (Infrastructure Facilities), கல்வி அறிவு (Literacy) போன்ற பல்வேறு வகைகளிலும் தமிழகம் உயர்ந்த நிலையில் உள்ளது. மேற்கண்ட இனங்களில் நாம் அடைந்துள்ள முன்னேற்றம் பிற மாநிலங்களுடன் ஒப்புநோக்கும் பொழுது உயரிய நிலையில் இருக்கின்றது என்ற காரணத்தால், நாம் அனைத்தையும் சாதித்து விட்டோம் என்று மெத்தனமாக இருத்தலாகாது. இந்த இனங்களில் இன்னும் நாம் சாதிக்க வேண்டியது ஏராளம் இருக்கின்றது. நமது சாதனையை உலக சராசரி சாதனையுடன் ஒப்பிட்டால் இது நன்கு புலனாகும். நாம் இது வரை சாதித்தது, இன்னும் எஞ்சி இருப்பதையும் சாதிக்க நமக்குத் துணையிருக்கும் ஒரு தூண்டுகோல் என்ற அளவில் எடுத்துக் கொண்டு நம் முயற்சிகளை மேலும் தீவிரமாக்க வேண்டும்.

பல்வேறு இனங்களில் மேற்கண்டவாறு வளர்ச்சி யடைந்திருந்தபோதிலும், வளர்ச்சிக்கு உரைகல்லான வறுமை ஒழிப்பு, தனி நபர் வருமான உயர்வு, வேலைவாய்ப்பு என்ற இனங்களில் நம்முடைய மாநிலம் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. இத்தகைய நிலை, வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் முன்னுள்ள ஒரு முக்கிய பிரச்சினையைச் சுட்டிக் காட்டுவதாய் அமைந்துள்ளது. பொருளாதார வளர்ச்சிக்குச் சேமிப்பும் அந்தச் சேமிப்பைத் தொலைநோக்குடன், வளர்ச்சிக்கு இன்றியமையாத இனங்களில் முதலீடு செய்வதும் அவசியம். இம்முதலீட்டின் பயன், பல ஆண்டுகள் சென்ற பின்னேதான் கிடைக்கலாம். இடைப்பட்ட காலத்தில், பொருளாதார நிலையில் கீழுள்ள ஏழை எளிய மக்களின் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் போன்றவைகளையும் தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. இத்தகைய தேவைகளைத் தீர்வு செய்வது காலவரையின்றித் தள்ளிப் போட இயலாது; மக்களையும் அவ்விதம் காத்திருக்கச் சொல்வது இயலாது; முறையானதுமாகாது. ஆனால், இவற்றைத் தீர்க்க தீவிர முயற்சி எடுத்தால் வளர்ச்சிக்குத் தேவையான முதலீடு குறையலாம். எதிர்கால வளர்ச்சிக்கான முதலீடா, அல்லது இன்றைய அடிப்படைத் தேவைக்கான தீர்வா என்ற கேள்விகள் ஒவ்வொரு முறையும் வரவு செலவுத் திட்டம் தீட்டும்பொழுது எழுகின்றன. இவ்விரண்டுமே முக்கியமானவை. சில வகைகளில் ஒன்றையொன்று சார்ந்துள்ளவை. நாம் இனி வகுக்கின்ற திட்டங்கள், இந்தப் பிரச்சினையையும், கேள்விகளையும் கருத்தில் கொண்டதாக அமையவேண்டும்.



**எட்டு ரொட்டித் துண்டு, இரண்டு குழந்தைகள் என்றால், வாங்குபவர்க்கும் மகிழ்ச்சி-பெறுகிற குழந்தைகளுக்கும் மகிழ்ச்சி. ரொட்டித்துண்டு எட்டுதான். குழந்தைகள் ஆறு என்றால் ரொட்டியும் எட்டியாகி விடும்.**

பல்வேறு இனங்களில் தீட்டுகின்ற திட்டங்கள் இயற்கை வளங்களையும், சுற்றுப்புறச் சூழ்நிலையையும் பாதிக்காமல் அதற்கேற்ற தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்பட வேண்டும். இன்றைக்குப் பயன் கிடைக்கும் என்பதற்காக, எதிர்காலத்தில் ஈடுசெய்ய இயலாத நிலைத்த இழப்பை ஏற்படுத்தும் முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாகாது.

பல்வேறு திட்டங்கள் தீட்டி மக்கள் வாழ்வு மலரச் செய்வதற்கு நமக்கு விருப்பம் இருந்தும், நிதி ஆதாரம் பெருகினால் தான் இந்தத் திட்டங்களைத் தீட்ட முடியும். தமிழ்நாட்டிலே, வரிகள் மூலம் பெரும்பாலும் நிதி திரட்டியுள்ளோம். இதைத் தவிர சிறு சேமிப்பு, அரசுச் செலவுகளில் விரயம் ஏற்படாமல் தடுத்தல், சிக்கன முறைகளைக் கண்டிப்புடன் கடைப்பிடித்தல், அரசு நிறுவனங்களின் செயல்பாட்டை மேம்படுத்துதல், அரசு வழங்குகின்ற பல்வேறு வகையான மானியங்கள், அவை உண்மையிலேயே தகுதி படைத்த-உரிய மக்களுக்குப் போகின்றனவா என்பதைப் பரிசீலனை செய்து, தேவையான

மாற்றங்கள் செய்தல், அரசு செய்து தருகின்ற பல்வேறு வசதிகளில், ஆகின்ற இன்றியமையாத செலவினங்களையாவது ஈடு செய்யும் வழிவகைகள் மேற்கொள்ளுதல், போன்ற பல்வேறு முயற்சிகள் மூலமும் நிதி ஆதாரங்களைப் பெருக்க வேண்டும்.

எவ்வளவுதான் செம்மையான முறையில் அரசு திட்டம் தீட்டினாலும், மக்களுடைய ஆதரவு முழு அளவில் இருந்தாலன்றி அந்தத் திட்டங்கள் மன நிறைவு அளிக்கின்ற வகையில் நிறைவேற்றப்படமாட்டா. மக்களின் ஆர்வத்தையும், ஒத்துழைப்பையும் பெறுவதற்கு மக்களாட்சி முறையிலுள்ள பல்வேறு மாவட்ட, ஊராட்சி ஒன்றிய, ஊராட்சி அமைப்புகள் திட்டப் பணியில் ஈடுபட வேண்டும். அதிகாரங்கள் அரசிடம் குவிந்துவிடக் கூடாது;பரவலாக்கப் படவேண்டும் என்ற அடிப்படையில், இந்த அரசு ஊராட்சி ஒன்றியங்களை மீண்டும் உயிர்ப்பித்துள்ளது. கிராமப்புற மக்களாட்சி அமைப்புகள் திட்டப் பணிகளில் முழு அளவில் ஆர்வத்துடன் ஈடுபட நாம் வழிவகை செய்ய வேண்டும். இதைத் தவிர அரசைச் சார்ந்திராத, விருப்புறுப் பணி மேற்கொள்ளும் தொண்டு நிறுவனங்களின் ஆற்றலையும், ஆர்வத்தையும் நாம் திட்டப்பணிகளை நிறைவேற்றுவதில் முழு அளவில் பயன்படுத்த வேண்டும். இத்தகைய நிறுவனங்களில் சில குடிநீர் வசதி, வீட்டுவசதி, மருத்துவம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற இனங்களில் நல்ல தேர்ச்சியும், ஈடுபாடும் கொண்டு சீரிய முறையில் தொண்டாற்றி வருகின்றன. அத்தகைய நிறுவனங்களை நாம் உற்சாகப்படுத்தித் துணைக் கொள்ளவேண்டும்.

★ வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தால் ஒவ்வொரு சாதாரண மனிதனுக்கும் ஒரு வரலாறு உண்டு. கடந்த கால வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தால்தான் எதிர் கால முன்னேற்றத்திற்கு வழிகள் கிடைக்கும்.

— முதல்வர் கலைஞர்

திட்டம் தீட்டுவதில் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு சில பிரச்சினைகளையே நான் சுட்டிக் காட்டியுள்ளேன். இதற்கு மேலும் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றையெல்லாம் நல்ல முறையில் ஆராய்ந்து பயனுள்ள ஒரு திட்டத்தை நீங்கள் தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயம் இருக்கின்றது. மாதம் ஒரு முறையாவது இக்குழுவினைக் கூட்டி அதில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் விரும்புகிறேன்.

திட்டக் குழு பல்வேறு சமூகப் பொருளாதாரத் துறைகளில் உள்ள அறிவாளிகளைக் கலந்து கொண்டு அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்றுத் திட்டமிட வேண்டும். அவ்வாறு செயல்பட்டால்தான் நல்ல ஆலோசனைகளைப் பெற்று நடைமுறைக்கு ஒத்த திட்டங்களைத் தீட்ட இயலும். ஆகவே, இந்த விழாவுக்குப் பல்வேறு துறை வல்லுநர்கள், தொழில் அதிபர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள், பத்திரிகை ஆசிரியர்கள் போன்ற பலர் நமது அழைப்பிற்கு இணங்கி வருகை தந்திருக்கிறார்கள். எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்து அவர்களையெல்லாம் திட்டக்குழுவின் பணியில் முழுமையாக ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திட்டக் குழுவின் நடவடிக்கைகளில் அரசும் தீவிர ஈடுபாடு கொள்ளும் என்றும், குழுவின் பணி சீரிய முறையில் நடைபெற அமைச்சர்கள், பலதுறைச் செயலாளர்கள், அலுவலர்கள் அனைவரது உதவியும், ஒத்துழைப்பும் முழு அளவில் கிட்டும் என்றும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் குழுவில் பணியாற்ற இசைந்து, குழுவிற்குப் பெருமை தேடித் தந்துள்ள உறுப்பினர்களுக்கு மீண்டும் ஒருமுறை என் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

வணக்கம்

(15-5-89 அன்று சென்னையில் மாநிலத் திட்டக் குழுவைத் தொடக்கி வைத்து ஆற்றிய உரை).



★ வரலாறு என்பது ஒரு நாட்டின் சரித்திரமல்ல. மக்கள் சமுதாயம் முழுமைக்குமான பொது நிகழ்ச்சியாக இன்றைய வரலாறு மாறியிருக்கிறது. ஏன் எனில் இன்றைய உலகம் ஒரு பொது நியதிக்கு உட்பட்டே இயங்குகிறது.

★ சமாதானமும், சகிப்புத் தன்மையுமே நமது இலட்சியங்கள். நம்மோடு ஒத்துப்போக முடியாதவர்களையும் அனுசரித்துக் கொண்டு போக நாம் விரும்புகிறோம். அதுதான் நம்முடைய மகத்தான போதனை. இது நமக்கு மட்டுமல்ல. உலகிலுள்ள மற்றவர்களுக்கும் தான்.

★ எத்தனையோ போராட்டம், தியாகம் இவற்றிற்குப் பிறகு நாம் அருமையாகப் பெற்ற சுதந்திரத்தைப் போற்றி மகிழும் இந்த வேளையில், உலக நாடுகளிடையே இந்தியா உயர்ந்து விளங்குவதற்காகவும், உலக மக்களின் நல்வாழ்வுக்காக உழைப்பதற்காகவும், நான் என்னைப் பெருமையோடு அர்ப்பணித்துக் கொள்கிறேன்.

★ சுதந்திரமும், சமாதானமும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதவை. எங்கே சுதந்திரம் தட்டிப்பறிக்கப்படுகிறதோ, அங்கே சமாதானத்துக்கு நிச்சயமாக ஆபத்து ஏற்படுகிறது.

தமிழகத் திட்டக் குழுவின் தொடக்க விழா மே 15-ஆம் நாளன்று ராஜாஜி மண்டப வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவுக்கு, பல்துறைப் பெருமக்களும் பெருமளவில் வந்து சிறப்பித்தனர்.

அனைவரையும் வரவேற்றுப் பேசிய தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு. எம்.எம். ராஜேந்திரன், இ.ஆ.ப. குறிப்பிட்டதாவது:

''இன்று தமிழ்நாட்டில் சரித்திரம் படைக்கும் ஒரு நாளாக அமைந்திருக்கிறது.

''நமது முதல்வர் அவர்கள் திட்டக் குழுவிற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்று முனைப்பாக இருக்கிறார். பல துறைகளிலும் தலைசிறந்து விளங்குபவர்களைத் திட்டக்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

''திட்டக்குழுவுக்கு உள்ள பொறுப்பு மிகப்பெரிதாக உள்ளது. திட்டக்குழு தீட்டும் திட்டத்திற்குரிய பணிகளை நிறைவேற்றுவது அரசின் கடமையாக இருக்கும்.''

மாண்புமிகு முதல்வர் அவர்கள், திட்டக் குழுவைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். (உரை பிறிதோரிடத்தில்). டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா, டாக்டர் வி.சி. குழந்தைசாமி, டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், திரு. எம். சிவஞானம், டாக்டர் ரமணி சிவராமன், திரு. ஜி. சிதம்பரம், திரு. திருமலை ஆகியோர் திட்டக் குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள்.

திட்டக்குழு உறுப்பினர் திரு. மால்கம் ஆதிசேஷய்யா தமது உரையில் தெரிவித்தார்:

''மத்திய அரசுத் திட்டக்குழுவின் அணுகுமுறையை மாநிலத் திட்டக்குழு பின்பற்றக் கூடாது. நமது மாநில மக்களுக்குச் சில பிரச்சினைகள் உண்டு. அவற்றைக் கண்டுபிடித்து, அவற்றிற்குத் தீர்வுகாண ஆவன செய்யவேண்டும்.

''வேலை செய்ய விரும்பும் மக்களில் 20 சதவிகிதத்தினர் வேலை இல்லாது தவிக்கிறார்கள். இது, 15 சதவிகிதம் அல்லது 14 சதவிகிதம் என்னும் அளவுக்குக் குறைக்கப்பட வேண்டும்.

''நமது மாநிலத்தில் 14 அல்லது 15 கோடி குடும்பங்கள் உள்ளன. அவர்களில் 40 சதவிகிதக் குடும்பத்தினர் வறுமையில் வாடுகிறார்கள். இந்த அளவையும் 30 சதவிகிதத்திற்குக் குறைக்க வேண்டும் என்பதில் நமது முயற்சி இருக்க வேண்டும்''.

அடுத்த உரையாற்றிய டாக்டர் திரு. வி.சி. குழந்தைசாமி அவர்கள் குறிப்பிட்டதாவது:

''2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர்,

''தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்''

என்று குறிப்பிட்டுள்ளார்.

தெரிந்த இனம் என்றால், அமைச்சர், புரோகிதர் என்று பரிமேலழகர் உரை எழுதியுள்ளார்.

அந்தத் தொழில் குறித்துத் தெரிந்துள்ளவர்கள்தான் தெரிந்த இனம் என்று சொல்லப்படுகிறார்கள்.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அரசுப் பொறுப்பை ஏற்றவுடன் மருத்துவத் துறையைச் சீரமைக்க ஒரு குழுவை அமைத்தார். தொழில் அதிபர்களைக் கூட்டி, தொழில் வளர்ச்சி பற்றி விவாதித்தார். மேம்பாட்டிற்காக விவசாயக் குழுவை அமைத்தார். ஆலய நிர்வாகம் சரிவர நடப்பதற்குரிய ஆலோசனைகளை வழங்குவதற்கு ஆலய ஆலோசனைக் குழுவை நியமித்தார். இப்படி, தெரிந்த இனத்தோடு சேர்ந்தெண்ணிச் செய்யும் பணியை மேற்கொண்டுள்ளார்

முதல்வர் அவர்களே, தமிழகம் உங்களை கட்சித் தலைவராக மட்டுமல்ல-முதல்வராக மட்டுமல்ல-மூத்த தலைவராகப் பார்க்கிறது.

''தேசிய திட்டத்தின் பலன் ஏழை எளிய மக்களுக்குச் சிறு அளவில்தான் கிடைக்கிறது. செயல்படும் முறையில் உள்ள முறைகேடுகள் தான் இதற்குக் காரணம். அணுகுமுறையில் அடிப்படையாக உள்ள தவறுகளும் காரணங்களாகும்.

அடுத்து உரையாற்றிய திருமதி ரமணி சிவராமன் தெரிவித்தார்.

''நமது அண்டை மாநிலமான கேரள மாநிலம், பிறப்பு விகிதத்தையும், இறப்பு விகிதத்தையும் குறைத்து விட்டோம் என மார்தட்டிப் பேசுகிறது. ஆனால் நாம் குழந்தை இறப்பு விகிதத்தை இன்னும் குறைக்கவில்லை.

''நமது மாநிலத்தில் இன்றும் சில கிராமங்களில், பெண் குழந்தை பிறந்தால் அதனைக் கொன்றுவிடும் கண்மூடித்தனமான வழக்கம் நிலவி வருகிறது. இந்தக் கொடுமையைக் களைவதில் அரசு அரும்பணி ஆற்றவேண்டும். தனியார் தொண்டு நிறுவனங்களும், இந்தத் தீமையைக் களைய உதவி செய்யலாம்.,

அடுத்து உரையாற்றிய திரு. ஜி. சிதம்பரம் குறிப்பிட்டார்.

''மாநில அரசுகளின் நிதி ஆதரவு மைய அரசின் நிதி உதவி கொண்டே இயங்குகிறது. மாநிலத் திட்டங்களின் முதலீட்டை

# வளர்ச்சிப் பணிகளுக்கு வாயில் திறந்தது

''உங்களுக்கு இன்றும் முக்கியம், நாளையும் முக்கியம். அடுத்த ஆண்டும் முக்கியம். 20-ஆம் நூற்றாண்டும் முக்கியம். 21-ஆம் நூற்றாண்டும் முக்கியம்.

''அறிவியல், தொழில் நுட்பங்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்''.

அடுத்து உரையாற்றிய திரு. எம்.எஸ். சுவாமிநாதன் குறிப்பிட்டார்:

''நமது நாட்டில் தொழில் நுணுக்கங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

''தமிழ்நாடு இளைஞர்கள் நிறைந்த கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. படித்த இளைஞர்கள் கிராமங்களில் தங்குவது சிரமமான பணியாக உள்ளது.

திறம் பெற்ற தொழிலாளர்களை உருவாக்கும் முயற்சியில் நாம் ஈடுபடவேண்டும். பெண்டிர்க்கும் இந்த வாய்ப்புத் தர வேண்டும். இந்தத் திறமையை அவர்கள் பெறுவதற்கு நாம் பல்வேறு நுணுக்கங்களைக் கடைபிடிக்க வேண்டும்.

அடுத்து உரையாற்றிய திரு. எம். சிவஞானம் தெரிவித்தார்:

''1930-இல் நம் நாட்டு மக்கள் தொகை 40 கோடி. பெண்களில் 75 சதவிகிதம் பேர் படிப்பறிவு இல்லாதவர்கள். அதனால்தான் குடும்பநலத் திட்டங்கள் பூரண வெற்றியைத் தரமுடியவில்லை.

மைய அரசு தரும் நிதி உதவியைக் கொண்டே நிர்ணயிக்க வேண்டியுள்ளது.

''குறித்த காலக் கெடுவிற்குள்-சீரிய முறையில் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மாநிலத்திட்டக்குழுவிற்கு இருக்கிறது.

''கிடைக்கும் சாதனங்கள் ஒருபுறம்; பொருளாதார வாய்ப்புகள் மற்றொரு புறம். கிடைக்கும் சாதனங்கள் குறைவு. ஆனால் வாய்ப்புக்கு எல்லை இல்லை. அது பெருகிக் கொண்டே போகும்.

''கடந்த காலத்தில் செய்த திட்டங்களின் மதிப்பீடு-செய்யவேண்டிய திட்டங்கள்-ஆகியவை குறித்து ஆய்வு செய்து-முன்பு ஏற்பட்ட குறைபாடுகள் மீண்டும் தலைகாட்ட முடியாதபடி பணியாற்ற வேண்டும்.''

திட்டக்குழு உறுப்பினர்களின் உரைகளுக்குப் பின்னர்-மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்-செயலர் திரு. அ.கி. வெங்கட சுப்பிரமணியன் இ.ஆ.ப. நன்றி நவின்றார்.

தமிழகம் வளர்ச்சிப் பாதையில் நடைபோடப் புதிய பாதை உருவாகி விட்டது என்பதைத் திட்டக்குழுத் தொடக்க விழா உறுதி செய்தது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
-தமிழ்ப்பித்தன்

## நிர்வாக ஆலோசனைக் குழு

கிராம நிர்வாகத்தைச் சீர்திருத்தி அமைக்க - தக்க வழி வகைகளைக் கண்டறிய ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு கே. லட்சுமிகாந்தன் பாரதி தலைமையில் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவில் மேலும் இரண்டு உறுப்பினர்களாக வருவாய்த்துறைச் செயலரும், வருவாய்த்துறை நிர்வாகத்தின் இணை ஆணையரும் செயல்படுகிறார்கள்.

## ஆலய நிர்வாக ஆலோசனைக்குழு

ஆலய நிர்வாகம் மேம்படவும், இந்து சமய ஆலயங்களுக்குரிய சொத்துக்களைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும், இந்து சமயச் சான்றோர்களை அழைத்து அவர்களுடன் கலந்துரையாடிக் கருத்துக்கள் பெறப்பட்டன. அவர்கள் கூறிய கருத்துக்களுக்கிணங்க ஆலய நிர்வாகத்தைத் திறம்பட நடத்தவும், ஆலோசனைகளைக் கூறிடவும் ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது.

# தமிழக அரசின் பொற்காலப் பணிகளில் சில





தவத்திரு குன்றக்குடி அடிகளார், நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார், திருவரங்கம் திரு. திருமலை அய்யங்கார், திரு. செந்தில்நாதன், திருமதி ராதா தியாகராஜன், இந்து அறநிலையத்துறையின் செயலர் ஆகியோர் அக்குழுவில் செயல்படுகிறார்கள். அந்த உயர்நிலைக்குழு அதன் அறிக்கையை மூன்று மாத காலத்திற்குள் அரசிடம் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## மருத்துவக்கல்வி, மருத்துவமனை வளர்ச்சி ஆலோசனைக்குழு

மருத்துவக் கல்வி வளர்ச்சி குறித்தும், மருத்துவ மனைகளின் வளர்ச்சி, செயல்பாடுகள் பற்றியும் ஆலோசனை கூற நரம்பியல் நிபுணர் டாக்டர் பி. ராமமூர்த்தி தலைமையில் ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் உறுப்பினர்களாக டாக்டர் ஏ. வேணுகோபால், டாக்டர் சாம் மோசஸ், நல்வாழ்வுத் துறையின் செயலாளர் ஆகியோர் செயல்படுகிறார்கள். மூன்று மாத காலத்திற்குள் அறிக்கை தருமாறு இக்குழுவை அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

## பாசன மேம்பாடு ஆலோசனைக்குழு

பாசன மேம்பாட்டுக்கும், தண்ணீர் வளத்துக்குமாக ஒரு நிலையான உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியான திரு. ஆர். திருமலையின் தலைமையிலான இக்குழுவில் ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர்கள் எஸ்.பி. நமசிவாயம், ஏ. மோகனகிருஷ்ணன், எஸ். நாகேஸ்வரன், எஸ். பஞ்சநாதன் ஆகியோரும், தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் வி. ராஜகோபாலன், பாசனத்துறைத் தலைமைப் பொறியாளர் ஆகியோரும் உறுப்பினர்களாக உள்ளனர். ஒவ்வொரு ஆற்றுப்படுகையின் நிலையையும் ஒட்டி தமிழகம் முழுவதும் எப்படிப்பட்ட நீர்நிர்வாகமும், பாசனமுறையும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது குறித்து இக்குழு அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.

## திட்டக்குழு

இந்தியத் துணைக் கண்டத்திலேயே மாநில அளவில் திட்டக்குழுவை அமைத்த பெருமை தி.மு. கழக அரசுக்குரியதாகும். 1971-இல் திட்டக்குழு அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டிற்கான ஒரு தொலைநோக்கு வளர்ச்சித் திட்டத்தை அது உருவாக்கியது.

ஆனால் கடந்த சில ஆண்டுகளில் திட்டக்குழுவின் உறுப்பினர்கள் அடிக்கடி மாற்றப்பட்டார்கள். ஆற்றல் மிகுந்த வல்லுநர்களின் பங்கு குறைந்துவிட்டது. திட்டக்குழு சரிவர செயல்படாமல் முடங்கிப் போயிருந்தது.

திட்டக்குழுவிற்குப் புத்துயிர் அளிக்கும் விதத்தில் தற்போது திட்டக்குழு முதலமைச்சரைத் தலைவராகக்கொண்டு சீரமைக்கப்பட்டுள்ளது. தலைசிறந்த அறிஞர்களான அண்ணா பல்கலைக் கழகத்துணை வேந்தர் டாக்டர் வா.செ. குழந்தைசாமி, விவசாய விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா, குஜராத் மாநிலத்தின் முன்னாள் தலைமைச் செயலர் திரு. எம். சிவஞானம், முன்னாள் மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் ரமணி சிவராமன், மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆய்வுத்துறையின் முன்னாள் இயக்குநர் திரு. ஜி. சிதம்பரம் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

## தொழில் வளர்ச்சி காண

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கவும், புதிய முதலீடுகளை ஊக்குவிக்கவும், பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் முக்கிய தொழிலதிபர்களைக் கூட்டி வைத்து, தொழில் வளர்ச்சி குறித்து முதலமைச்சர் விவாதித்தார். பல்வேறு

வர்த்தக சங்கத்தினருடனும் விவாதங்கள் நடத்தினார். மாநில அரசு அனுமதிபெற வேண்டிய தொழில்திட்டங்களை விரைவாகப் பரிசீலித்து முடிவு எடுக்கவும், மத்திய அரசு அனுமதிக்கானவற்றை வற்புறுத்திப் பெறவும் அரசு உதவுமென்று முதலமைச்சர் உறுதியளித்தார். பொதுத்துறையிலும், கூட்டுத் துறையிலும் புதிய திட்டங்களை விரைந்து நடத்தவும், தொழிற் கொள்கை பற்றிய முடிவுகளை விரைந்துஎடுக்கவும் முதல் அமைச்சர் தலைமையில் அதிகாரிகள் குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

## முதலமைச்சர்கள் மாநாடு.

புதிய அரசு பதவியேற்றது முதல், மாநில மத்திய உறவு பற்றிய தன்நிலையை வலியுறுத்தவும், தமிழ்நாட்டின் நியாயமான கோரிக்கைகளை அழுத்தந் திருத்தமாகத் தெரிவிக்கவும். எந்த வாய்ப்பையும் விட்டுவிடாமல், பயன்படுத்திவந்துள்ளது.

பிப்ரவரி 1989-இல் டெல்லியில் நடைபெற்ற முதல்வர்கள் மாநாட்டில் பங்கேற்ற தமிழக முதலமைச்சர் விற்பனை வரிக்குப் பதிலாகக் கூடுதல் தீர்வை விதிப்பதை ஏற்க இயலாதென்றும், சரக்குகள் அனுப்புகை வரியை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறினார்.

நிர்வாகத்தில், பொருளாதாரத்துறையில், சட்டம் இயற்றும் அதிகாரத்தில் மத்திய மாநில உறவுகள் பற்றி ஒட்டு மொத்தமான விவாதம் நடத்தப்பட வேண்டுமென அவர் கூறினார். அரசியல் சட்டத்தின் 263-ஆம் பிரிவின்கீழ் மாநிலக்குழு விரைவில் ஏற்படுத்தப்படவேண்டுமென அவர் வற்புறுத்தினார். அத்தகைய குழு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது பற்றி மாநில முதல்வர்களுடன் பிரதமர் விவாதித்து முடிவு செய்ய வேண்டும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

பிப்ரவரி, மார்ச் மாதங்களில் முதல்வர் டெல்லிக்குச் சென்று, பிரதமர், மத்திய அமைச்சர்களைச் சந்தித்தபோது, பல்வேறு தமிழ்நாட்டுத் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்து விரைவாக அவற்றினைச் செயல் படுத்தும்படி வற்புறுத்தினார். குறிப்பாக, கீழ்க்கண்ட திட்டங்கள் பற்றி அவர் விவாதித்தார்.

நெய்வேலியில் மூன்றாவது அரங்கம் வெட்டும் திட்டம், காவிரி ஆற்றுப்படுகை நவீன மயமாக்குதல், கரூர்-திண்டுக்கல் அகலரயில் பாதைத் திட்டத்தை விரிவுபடுத்துதல், சென்னை நகர விரைவு ரயில், போக்குவரத்துத் திட்டத்துக்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்தல், கடலூர் - கன்னியாகுமரி நெடுஞ்சாலையை மேம்படுத்துதல், நெய்வேலி லிக்னைட் நிறுவனத்தின் லாபத்தில் பங்கையும் நிலக்கரிக்கான ராயல்டியையும், தமிழகத்துக்குப் பெறுதல்.

## ஒன்பதாவது நிதிக்குழு

பிப்ரவரி 1989-இல் ஒன்பதாவது நிதிக்குழுவுடன் விரிவான விவாதம் தமிழக அரசால் நடத்தப்பட்டது. அப்போது, மத்திய அரசு மாநில அரசுகளுடன் நிதி ஆதாரங்களைப் பகிரிந்திடும் முறை, அவற்றை மாநில அரசுகள் பகிர்ந்து கொள்ளும் விதம் பற்றியெல்லாம் தமிழ்நாடு அரசின் நிலையை முதலமைச்சர் விளக்கினார்.

தமிழ்நாட்டின் சிறப்புப் பிரச்சினைகளான நகர்ப்புற மேம்பாடு, பள்ளிக் கட்டடத் தேவைகள், நீதித்துறை நிர்வாகத்தை மேம்படுத்துதல், முதலியவற்றிற்குப் போதுமான நிதிஉதவி அளிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

1989-90-ஆம் ஆண்டில் கல்கத்தாவுக்கும் பம்பாய்க்கும் தலா 50 கோடி ரூபாய் குடிசைப்பகுதி மேம்பாட்டுக்குத் தருகிற அதே வேளையில், சென்னை நகரத்தின் கோரிக்கையை ஒன்பதாவது நிதிக்குழு புறக்கணித்தது பற்றிய தமிழக அரசின் வேதனையை அவர் குறிப்பாக எடுத்துரைத்தார். இறுதி அறிக்கை வரும்போதாவது சென்னை நகருக்கும் நிதி தரப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்.



## உலகமே வாழ்த்தும்!

திங்கள் பிறப்பினுக்கோ-இருள்
தேசங்கள் வாழ்த்துரைக்கும்
கங்குல் பிறப்பினுக்கோ-இளங்
காதலர் வாழ்த்துரைப்பார்!
மங்குல் பிறப்பினுக்கோ-பயிர்
வயல்கள் புகழுரைக்கும்!
உங்கள் பிறப்பினுக்கோ-தமிழ்
உலகமே வாழ்த்துரைக்கும்!

பிறந்தநாள்
வாழ்த்துரைத்தேன்-நாட்டுப்
பெருந்தொண்டில் தன்னலத்தைத்
துறந்தநாள் வாழ்த்துரைத்தேன்-தமிழ்த்
துறைதோறும் நற்கலைப்பால்
கறந்தநாள் வாழ்த்துரைத்தேன்-புவி
கவிபாடும் ஆட்சி செய்து
சிறந்தநாள்
வாழ்த்துரைத்தேன்-என்றும்
சீருற வாழியவே!

**கவிஞர் அப்துர் ரகுமான்**

# சென்னை நகர மேம்பாட்டுக்குப் புதிய திட்டங்கள்

''சென்னை மாநகராட்சி மற்றும் குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம், சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் போன்ற பல்வேறு துறைகள், சென்னை நகருக்குத் தேவையான பணிகளைச் செய்வதில் ஈடுபட்டுள்ளன.

''இந்தப் பல்வேறு துறைகளின் பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவது குறித்தும், இதற்காக மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரி ஒருவரைத் தனி அலுவலராக நியமிப்பது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

''1989-90 ஆம் ஆண்டில் வருவாய் தலைப்பின்கீழ் சென்னை மாநகராட்சியின் வருமானம் ரூ. 58.09 கோடியாகவும், செலவு 68.85 கோடியாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1988-89 ஆம் ஆண்டில் இத்தலைப்பின் கீழ் மாநகராட்சியின் வருமானம் ரூ. 53.63 கோடியாகவும், செலவு ரூ. 65.54 கோடியாகவும் இருந்தது. ரூ. 13.63 கோடி செலவில் மூலதனப் பணிகளை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

''துவக்கக் கல்வி விதிகளின்படி, துவக்கக் கல்விக்காகத் தனி வரவு செலவுத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்தலைப்பின் கீழ் வரவு ரூ. 10.91 கோடியாகவும், செலவு ரூ. 14.96 கோடியாகவும் இருக்கும்.

''சொத்துவரி மற்றும் மாநகராட்சியின் பங்காக அரசு வசூல் செய்து தரும் தொகை ஆகிய இவைகளே மாநகராட்சியின் பெரும் வருவாய் இனங்களாகும். நடப்பு ஆண்டில் சொத்து வரி வருவாய் ரூ. 19.74 கோடியாகவும், அரசு வசூல் செய்து தரும் தொகை ரூ. 23.81 கோடியாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

''மாநகராட்சியின் நிதி ஆதாரங்கள் போதுமானவைகளாக இராதபடியினால் மூலதனப் பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்காகும் செலவுகளுக்காக அரசின் உதவியைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. அரசும், கடன் மற்றும் மானியம் மூலமாக மாநகராட்சிக்கு நிதி உதவி அளித்து வருகின்றது.''

அரசு, பின்வரும் மூலதனப் பணிகளை நிறைவேற்றுவதற்காக 1-ஆம் பகுதித் திட்டத்தின் கீழ், மாநகராட்சிக்கு ரூ. 3.83 கோடி நிதி உதவி அளித்துள்ளது.

(1) சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் தெருவிளக்குகளுக்காக ரூ. 3.00 கோடி, (2) ஆண்டர்சன் மற்றும் கெல்லிஸ் பாலங்களைப் புதுப்பித்துக் கட்டுவதற்காக ரூ. 0.55 கோடி, (3) கடைகள் மற்றும் அங்காடிகள் கட்டுவதற்காக ரூ. 0.20 கோடி, (4) காம்பாக்டர் வாங்குவதற்காக ரூ. 0.08 கோடி, ஆக மொத்தம் ரூ. 3.83 கோடியில் இப்பணிகள் நிறைவேற்றப்படும்.

''இவை தவிர, தனியார் தெருக்கள், குடிசைப் பகுதிகள், மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பஞ்சயத்துப் பகுதிகளிலுள்ள, தெரு விளக்குகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காகவும், 50 முக்கியமான சாலைச் சந்திப்புகளில் சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதற்காகவும் ரூ. 12.00 கோடி செலவில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. 2-ஆம் பகுதித் திட்டத்தின் கீழ் அரசும், இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்காக அரசு ரூ. 1.05 கோடி நிதி உதவி அளிக்கும்.

''சென்னை மாநகரில் ரூ. 20.00 கோடி செலவில் சில சிறப்பு வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள அரசு நிதி உதவி அளிக்க உள்ளது. சாலைகள், தனியார் தெருக்கள், குடிசைப் பகுதிகள், தெரு விளக்குகள், துப்புரவு, பொது நலம், பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள், பொதுக் கழிப்பிடங்கள் ஆகியவற்றுக்காக நடப்பு ஆண்டில் அரசு ரூ. 6.00 கோடி நிதி உதவி சென்னை மாநகராட்சிக்கு அளித்துள்ளது.

''மூர் அங்காடி தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வியாபாரிகளைக் குடியமர்த்துவதற்காக, அல்லிக் குளம் பகுதியில் கடைகள் வேகமாகக் கட்டப்பட்டு வருகின்றன. ஆண்டர்சன் மற்றும் கெல்லிஸ் பாலங்களை அகலப்படுத்தும் பணி துரிதமாக வளர்ந்து வருகிறது. இப்பணிகள் இவ்வாண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.''

(மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள், 12.5.89 அன்று தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த தகவல்)





## “குடல் புழுக்களை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசீயிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பான்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!”

கறவைப் பிராணி உலகுக்கு நல்ல சேதி!



தன்னிகரற்ற

# பான்மின்த்*

(மொரண்ட்டல் ஸிட்ரேட்)

### குடற் புழுக்களை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

''பாழும் குடல் புழுக்களால் — அம்மம்ம, நான் பட்ட பாடு : பலவீனம், பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பான்மின்த் தான் பலிச்சுது — அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!''

**பால் இழப்பே இல்லை.**

''அருமையான சேதி — எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும் சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பான்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பான்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால் மனிதருக்குக் கெடுதலே இல்லை — நூற்றுக்கு 100 பத்திரமானது.''

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

''என் தங்கச்சி — பிள்ளைத் தாய்ச்சி — அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பான்மின்த் சினைக்காலம் முழுக்க எந்த கெடுதலும் செய்யலை; ஏன் பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆ! ஆறுதலான சுகம்!''

**வசதி மிக்கதும் கூட.**

சாப்பிட வெகு இலகு பான்மின்த். சுண்டி விடுங்க ஒரு போலஸ் (பெரிய மாத்திரை) — எங்கமாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு, உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு சின்ன மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!''

பால் இழப்பே இராது
பான்மின்த்*
இணையை ஈடு செய்வது!

**கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் : சிறந்த மருந்து**

# பான்மின்த்*

குடற் புழுக்களைக் கொல்லும், ஆரோக்கியத்தை வெல்லும்!

LINTAS BMT 4 2217 TM

*யு.எஸ்.ஏ. ஃபைஸர் நிறுவன டிரேடு மார்க்

pfizer

மேலும் விவரமறிய எழுதுவீர் இம் முகவரிக்கு :
ஃபைஸர் லிட்., பி.ஓ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400 021.

தமிழ்நாட்டில், பல் மருத்துவக்கல்வி 1953 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அப்போது இளநிலைப் பட்டப் படிப்பு வகுப்புதான் செயல்பட்டது.

அப்போது 15 மாணவர்கள்தான் அனுமதிக்கப்பட்டனர். இன்றோ 45 மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், மருத்துவத்துறையில் ஒவ்வொரு சிறப்புப் பிரிவிலும் முதுநிலைப்பட்டப் படிப்பும் போதிக்கப்படுகிறது.

இன்றைக்கு இந்தியாவில் அரசுச் சார்பிலும், தனியார் துறையிலும் மொத்தம் பல்மருத்துவக் கல்லூரிகள் 46 இயங்கிவருகின்றன.

தமிழ்நாட்டில், அரசு பல்மருத்துவக் கல்லூரி ஒன்றும், தனியார் பல்மருத்து

ஏற்ப, நமது நாடும், தனது நலத்திட்டத்தில் ஆவன செய்துள்ளது.

பொது மருத்துவம் என்ற போதிலும் 'பல் மருத்துவம்' மிகவும் முக்கியமானதாகவும், அத்தியாவசியமானதாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆக, இந்தியாவில் ஐந்தாவதாக, சென்னைப் பல் மருத்துவக் கல்வி 1953 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இன்றோ 35 ஆண்டுகளுக்குப் பின்னர், ''பல் மருத்துவம்'' தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக முன்னேறியுள்ளது.

இளநிலை மற்றும் முதுநிலைப் படிப்பிலும், சென்னைப் பல் மருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெற வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆகையினால், பட்டம் பெற்ற, பயிற்சி பெற்ற, அனு பவம் நிறைந்த பல்மருத்துவர்களின் எண்ணிக்கை

இன்றைய நாளில், அறிவியல் மற்றும் பொறியியல் துறையினர் பல நூதனப் புதுமைகளைக் கண்டுபிடித்து வருகிறார்கள். வெகுவேகமாக முன்னேறி வரும் இந்தப் புதுமைகள் மிகவும் வியக்கத்தக்கவை. அவைகளைப் பல துறைகளிலும் உபயோகித்து வருகிறார்கள். இந்த நூதனக் கண்டுபிடிப்பு, பல்மருத்துவத் துறையிலும், ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பல் மருத்துவத்திற்கு ஏற்பக் கருவிகளையும், சாதனங்களையும் செய்து, பல்மருத்துவம் எளிமையாகவும், நலமாகவும் எவ்விதத் துன்பம் இல்லாமலும் கிடைக்க வழிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதமான சாதனங்கள் ஜப்பானிலும், ஜெர்மனியிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. எல்லா நாட்டினரும் இந்தச் சாதனங்களை வாங்கி, நிறுவி, பல்மருத்துவம் செய்து வருகிறார்கள்.

# பல் மருத்துவம் ஒரு கண்ணோட்டம்




**பேராசிரியர் ஜே.ஜி. கண்ணப்பன்**

துணை முதல்வர்

சென்னை பல்மருத்துவக் கல்லூரி


வக்கல்லூரிகள் ஐந்தும் உள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பல் மருத்துவக்கல்லூரி உண்டு.

நமது நாடு சுதந்திரம் அடைந்தபின், பல ஐந்தாண்டுத் திட்டங்களினால், பிணி நீக்குதல், பிணி தடுத்தல் போன்ற மிகத் தேவையான, முதன்மையான பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது.

வள்ளுவர் கூறிய

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

என்ற குறளுக்கு ஏற்றபடி வேண்டிய முறையில் உடல் பிணியில்லாத சமூகத்தை ஏற்படுத்த அரசு ஆர்வம் கொண்டுள்ளது.

மேலும், ''கி.பி. 2000 ஆண்டில் ''பூரண உடல்நலம்'' உலக மக்கள் எல்லாம் பெறவேண்டும் என்று 'உலக நலச்சங்கம்' (WHO) விரும்பியதற்கு

நாளாவட்டத்தில் உயர் கிறது. அதனால், அவர்கள் நாடு முழுவதும் பரவி, திறமையுடன் பணிபுரிகிறார்கள். மேலும் இன்று நமது வெளிநாட்டுக் கொள்கைகளின்படி, நமது பல் மருத்துவர்கள் மத்திய அரசின் மூலம், கீழை நாடுகளுக்கும் மேலை நாடுகளுக்கும் சென்று பணிபுரிந்து ஊதியம் பெற்று நமது நாட்டுக்குப் பெருமை தேடித்தருகிறார்கள். மேலும், அவர்களின் திறமை, தக்கவகையில் வெளிப்படுவதால் இந்தியப் பல் மருத்துவர்களுக்கும், வெளிநாட்டில் மதிப்பு ஏற்படுவது மட்டுமின்றி, இந்தியாவிற்கும் பெரும்புகழ் கிடைக்கின்றது.

முன்னேற்றமடைந்த நாடுகளில் பல் மருத்துவம் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளது. மேலும், முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளில் எல்லா முயற்சிகளையும் அரசுகள் எடுத்து, மக்கள் சிறந்த பல் மருத்துவம் பெற ஆவன செய்கின்றன. நமது நாட்டு நிபுணர்களையும் வரவேற்று, பணியில் அமர்த்திச் செயல்படுகிறார்கள்.

இந்தியாவில், மிகவும் நுணுக்கமான சாதனங்களை உற்பத்தி செய்ய முடியவில்லை. எனினும், சாதாரணமாக இயங்கும் சாதனங்களை உற்பத்தி செய்து, மற்ற நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நூதன சாதனங்களையும் இணைத்து நமது பல் மருத்துவர்களுக்கு அளிக்கிறார்கள்.

நமது நாட்டிலேயே, இவற்றை உண்டாக்கமுடியும் என்பதைப் பெருமையுடன் கூறலாம். நம் நாட்டுக் கருவிகளின் திறன் மற்றும் விலை மலிவு காரணமாக, பல வெளிநாட்டினரும் அவற்றை வாங்கிப் பலனடைகிறார்கள். கூறப்போனோமேயானால், பல வகையில் இயங்கும் பல் மருத்துவ உட்காரும் சாதனம் (Dental Chair), பல் மருத்துவச் சுழல்கள், ஒளி மற்றும் இணைப்புச் சாதனக் கருவி, (Dental Unit), கையகல வெட்டும் சுழல் கருவி (Dental Hand Piece) போன்றவை நம்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.

மிகச்சமீப காலத்து நவீன கருவிகள் மட்டுமே வெளிநாட்டிலிருந்து தருவிக்

கப்படுகின்றன என்ற சூழ்நிலை இன்று உள்ளது. இதுவும் நாளாவட்டத்தில், நமது நாட்டிலேயே உருவாக்கப்பட வாய்ப்பு உள்ளது என்று திட்டவட்ட மாகக் கூறலாம்.

போதிக்குமுறை வெகுவாக ஆராயப் படவேண்டும். முற்காலத்தில் தொடர்ந்த சொற்பொழிவு முறையில் போதிக்கப் பட்டது. மேலும், புத்தகங்கள் மூலம் படித்தறியும் நிலையும் இருந்தது.

இன்றோ ஆடியோ விசுவல் (Audio-Visual) முறை வந்துள்ளது. எல்லா ஆசிரியர்களும் இந்த 'ஒலி ஒளி' போதிக்கு முறையைக் கையாண்டு வருகிறார்கள். ஒளிப்பட ஸ்லைடுகள் சர்வசாதாரணமாக, ஏற்படுத்தப்படுவ தால், இந்த முறைதான் இலகுவான முறையாகும். மேலும் வீடியோ முறையை அனுசரிக்க, துரித ஆயத்தங்கள் நடந்து வருகின்றன. அதாவது மாணவர் ஆசிரியர்கள் இன்றி, அறிவு வளர்க்க வீடியோ முறைகள் செயல்பட்டு வரு கின்றன. மிகச்சிறந்த நாடுகளில்கூட இந்த முறையினை அதிக அளவில் கடைப்பிடிப்பதில்லை. காரணம் அத னைச் செயல்படுத்துவதில் சில சிக் கல்கள் உள்ளன.

எனினும், இந்தியாவில், வீடியோ முறைகளையும் திறம்படச் செயல் படுத்த விழைகின்றோம். ஒரு சிறு அளவில் இந்த முறை செயல்பட்டு வரு கிறது.

பல் மருத்துவ ஆசிரியர்கள், அப் போதைக்கப்போது வெளிநாடு சென்று அங்குள்ள கருத்தரங்குகளில் பங்கு கொள்கிறார்கள். அதனால் அவர்களு டைய அறிவு விரிவடைகின்றது. மேலும், வெளிநாட்டு நிபுணர்களுடன் கலந்தாலோசிக்கும்போது, நிறைவான அறிவு பெறமுடிகிறது. மற்ற நாட்டின ரும் நமது நிபுணர்களுடன் கலந்து கருத்துப்பரிமாற விழைகின்றார்கள். இதற்கு நமது அரசும் வழிவகை செய் துள்ளது. சாதாரணமாக, அரசு மருத்து வர் வெளிநாட்டுக் கருத்தரங்குகளில் பங்கு கொள்ள விரும்பினால், தமிழக அரசு 50% பயணச் செலவும், பல் கலைக்கழக மானியக்குழு 50% பய ணச் செலவும் அளித்து வருகிறார்கள். இந்தச் சலுகை முன்னர் மூன்றாண்டு களுக்கு ஒருமுறை அளிக்கப்பட்டு வந் துள்ளது. ஆனால், சமீப காலத்தில், தமிழக அரசு அலுவலர் ஆயுள் காலத் தில் ஒரே ஒருமுறைதான் இச்சலுகை பெறமுடியும் என்று ஆணை பிறப்பிக் கப்பட்டுள்ளது. முந்திய முறையே நடை முறைப் படுத்தப்பட்டால் நமது நாட்டு நிபுணர்கள் வெளிநாட்டுக் கருத்தரங் கில் அடிக்கடி கலந்து கொண்டு, நல்ல அனுபவத்தைப் பெற்று, தாய்நாட்டில் தங்களது திறமையை நல்லமுறையில் செயல் படுத்தயியலும்.

ஒவ்வொரு ஜப்பானியரும் வெளி நாடு செல்லும்போது, தான் பெற்ற




ஆஸ்திரேலியாவில் அடிலெய்டு பல் மருத்துவக் கல்லூரியில் பேராசிரியர் திரு. கே.ஏ. பிரௌன் அவர்களுடன் பேராசிரியர் ஜே.ஜி. கண்ணப்பன். (நடுவில் உள்ள புகைப்படத்தில் இருப்பவர்: இன்று இந்தியாவில் கடைப்பிடித்து வரும் நிரந்தர பற்சீரமைப்புக் கருவியினைக் கண்டு பிடித்தவரான டாக்டர் பி.ஆர். பெக்)

அனுபவங்களைக் குறிப்பெடுத்துத் தனது அலுவலகத்திற்கு ஓர் அறிக்கை சமர்ப் பிக்க வேண்டும் என்ற விதி அந் நாட்டில் உள்ளது. அதனால் அலு வலகக் காரியங்களைச் சிறப்பாகப் படைக்க முடிகிறது. அவ்விதமான முறையில் நமது நாட்டில் ஒவ்வொரு வரும், பணிசெய்தால் நமது நாடும் முன்னேறும்.

ஆராய்ச்சியைப் பெருக்கும் வகை யில் வெளிநாடுகளில் அரசு பெரிய அளவில் மானியம் வழங்குகிறது. இந் தியாவிலும், தமிழக அரசு, ஆராய்ச்சி செய்பவர்களுக்கும் மானியம் வழங்கி ஊக்குவித்து வருகிறது. மேலும் மத்திய அரசு சார்பில் இயங்கும் U.G.C. மற்றும் வேறு பல இயக்கங்கள் மானியம் வழங்கி ஆராய்ச்சியாளர்களை ஊக்கு விக்கிறார்கள்.

ஆராய்ச்சியின் மூலம் உருவா கும் புதிய கண்டுபிடிப்புகள்தான் ஒரு நாட்டின் பெயரை நிலை நிறுத்தும்.

இந்த நிலை நமது நாட்டில் வெகு வாகக் காண்கிறோம். பல துறைகளில் நமது நாடு முன்னேற்றம் அடைந் துள்ளது என்றால் அதற்குக் காரணம் ஊக்குவிக்கப்பட்ட ஆராய்ச்சிதான். இந்த வகையில், பல் மருத்துவத்துறை யும் பெரிய அளவில் நமது நாட்டில் முன்னேறியுள்ளது. தாழ்த்தப்பட் டோரும் பல் மருத்துவக் கல்வி பெற அரசு வாய்ப்பு அளித்துள்ளது. மேலும், வசதி படைத்தோர், தனியார் பல் மருத்துவக் கல்லூரிகளில் பயில வும் வாய்ப்பு உள்ளது.

மற்ற நாடுகளை ஒப்பிட்டுப்பார்க் கும் போது, நமது நாடு பல் மருத்துவத் துறையிலும் வெகு வேகமாக முன் னேற்றம் அடைந்துள்ளது.

அதாவது,

கல்வி மற்றும் இளநிலைப்பட்டம் முதுநிலைப்பட்டம் பெற வாய்ப்புகள் உண்டு.

மருத்துவப் பணிபுரிய அரசு மூலமும் தனிப்பட்ட முறையிலும் பணிபுரிய இயலும்.

மக்கள் பல்நலம் பேண அக்கறை கொண்டு இருப்பதால், மருத்துவர் களை அணுகி வேண்டிய தற்காப்பு அனுசரணைகளை நாடு முழுதும் உள்ள பல் மருத்துவர்கள் மூலம் பெற முடிகிறது.

இன்றைய பல்மருத்துவர்கள் நாடெங் கும் பரவி, தங்கள் சேவையை நல்கு கிறார்கள். நாடு முழுவதும் நடை பெறும் பல் மருத்துவம், பல் மருத்துவச் சிகிச்சை முகாம்கள், இதற்கு எடுத்துக் காட்டுகள்.

பல் மருத்துவர்கள் வேண்டுகின்ற பல் மருத்துவச் சாதனங்களை இந்தியாவி லேயே பெற முடிகிறது. இச்சாதனங் கள் நமது நாட்டிலேயே உற்பத்தி செய் யப்படுகின்றன.

புதிய நவீன ஆயுதங்கள், பொருட்கள், கருவிகள் ஆகியவற்றை வெளிநாட்டி லிருந்து இலகுவில் தருவிக்க அரசு அனுமதி உண்டு.

மொத்தமாகக் கூறவேண்டுமேயா னால் இந்தியாவில் பல் மருத்துவம்-சுதந்திரம் பெற்று, கடந்த 43 ஆண்டு களில், முன்னேற்றமடைந்த நாடு களைப் போல் அறிவியல் சார்ந்து, தரம் பெற்றுள்ளது. வெளிநாட்டினரும் நமது நாட்டுக்கு வந்து பல் மருத்துவம் பெற்றுச்செல்ல விழைகின்றார்கள். நமது பல் மருத்துவர்களின் சொற் பொழிவினை விரும்பிக் கேட்கிறார்கள்.

நமது நாட்டின் பல் மருத்துவ முன்னேற்றத்தை வியந்து புகழ்கின் றார்கள். இஃது ஒரு பெருமையல்லவோ!

அண்ணா ஒருமுறை கூறினார்கள்- ''நாடு சிறக்க வேண்டுமானால், நாட் டில் படித்தவர்கள் வேண்டும். அவர் கள் தருணம் கிடைத்தால் கடினமான பணியையும் ஏற்றுக் கொண்டு நாட்டிற்குப் பணிபுரியத் தயங்கமாட்டார்கள்.

அதுபோல நமது எதிர்கால இளை ஞர்கள் பல் மருத்துவத்துறையின் மூலம் நாட்டிற்குப் பணிபுரியலாம்! பெருமை பெறலாம்!

## அருந்தமிழ்த் தொண்டு செய்த அரசு அலுவலர்

# ஆனந்தரங்கப் பிள்ளை



டாக்டர் மா. சேசையா

தமிழில் நாட்குறிப்பு இல்லாத குறையைப் போக்கியவர் அருந்தமிழ்த் தொண்டர் ஆனந்தரங்கப் பிள்ளை அவர்கள். இவர் *30-3-1709* ஆம் நாள் பிறந்தார்.

ஆனந்தரங்கப் பிள்ளையின் பெற்றோர் திருவேங்கடப்பிள்ளை, லட்சுமி அம்மாள் ஆவர். இவருக்கு திருவேங்கடம் என்ற ஒரு தம்பியும் உண்டு. பிள்ளையவர்கள் சென்னை பூந்தமல்லியைச் சேர்ந்தவர் என்றாலும், இவர் *1749* ஆம் ஆண்டு பாண்டிச்சேரியில் இருந்த கவர்னர் துய்ப்ளே அவர்களால் அரசாங்க துவிபாஷி (Translator) யாகப் பதவி பெற்றார்.

பிள்ளையவர்கள் தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம், தெலுங்கு, போர்த்துகீசு ஆகிய பல மொழிகளை ஐயந்திரிபறக் கற்ற பேரறிஞர். அதோடு காலம் கருதி இடத்தால் செய்யும் நுண்மாண் நுழைபுலம் உள்ளவராகவும் திகழ்ந்தார்.

அவர் தொட்டது துலங்கிற்று. வெற்றித் திருமகள் அவரிடம் எப்போதும் இருந்து அவருக்கு உறுதுணை புரிந்தாள். இதனால் தானோ என்னவோ அவர் தந்தையார் அவரை விஜய ஆனந்தரங்கன் என்றே பெயரிட்டு அழைத்தார். பிள்ளை அவர்கள் *6.9.1736* முதல், நாட்குறிப்பு எழுதத் தொடங்கி, இறக்கும் வரை *(12.1.1761)* சரியாக *25* ஆண்டுகட்கு நாட்குறிப்பு எழுதி உள்ளார்.

ஆம்! தமிழில் உரைநடை இலக்கியம், நாடக, கவிதை இலக்கியங்கள் ஏராளம் உள்ளன. ஆனால் நாட்குறிப்பு (Diary Literature) இலக்கியம் *17*-ஆம் நூற்றாண்டு வரை இல்லை. இக்குறையை *18*-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தீர்த்து வைத்த பெருமை நம் ஆனந்தரங்கப் பிள்ளைக்கு உண்டு.

தமிழில் *17* பாகங்களாக உள்ள நாட்குறிப்பு, ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டு *(12* பாகங்களாக) உள்ளது. சொல்லப்போனால் இந்திய வரலாறு முழுமையாக, செழுமை யாக எழுதப்படுவதற்கு ''ஆனந்தரங்கப் பிள்ளையர்களின் சொந்த லிகித தினப்படி சேதி குறிப்பு'' (இது தான் அந்நாட்குறிப்பின் பெயர்) பெரிதும் துணை செய்கிறது.

பிள்ளையவர்கள் பிரெஞ்சு அரசாங்கத்தின் அரசு செயலாளர் அந்தஸ்தில் ஓர் அரசாங்க அதிகாரியாக இருந்தாலும், ஆங்கிலேயர்க்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் போர் ஏற்பட நேருமாயின், தன் தாயகத்து நன்மையை முதன்மையாகக் கொண்டு, தன் நுண்மாண் நுழை புலத்தால், அரசியல் சதுரங்கக் காய்களை நகர்த்தி, தாயகத்துக்கு நன்மை செய்தார் என்பதை அவர் எழுதிய 'தினப்படி சேதி' *1-5* பாகங்கள் நமக்குத் தெளிவாகக் கூறி நிற்கின்றன. *2*-ஆம் பாகம் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்று இதனைப் பதிப்பித்தஞானுதியாகு குறிப்பிடுகின்றார்.

பிள்ளையவர்கள் சேஷாத்திரி என்பவரின் மகளான மங்கா என்ற எழில் நங்கையை மணந்தார். தனது நாட்குறிப்பில் சிற்சில இடங்களில் செல்லமாகத் தன் மனைவியை மங்காத்தாயி என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு முழுவதும் *18*-ஆம் நூற்றாண்டின் பாண்டிச்சேரியின் கொச்சைத் தமிழில் எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. *18*-ஆம் நூற்றாண்டின் தமிழ் மக்கள் பேச்சுத் தமிழைக் காப்பாற்றி வைத்திருக்கும் பெருமை பெற்றது பிள்ளையவர்களின் 'தினப்படி சேதி'.

நாளெல்லாம் அரசாங்க அலுவல் செய்த ஆனந்தரங்கப்பிள்ளை வீடு வந்ததும், தன் எழுத்தரிடம் (Scribe) நாள், ஆண்டு, மாதம் முதலியவற்றைச் சொல்லி, அன்று துய்ப்ளேயின் அரண்மனையில் நடந்த செய்திகள், ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் உள்ள நட்பு, பகைமை, தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள், நாகரிகம், தனது நாட்டுப்பற்று ஆகியவற்றையும், புலப்படச் சொல்லி, எழுதி வைத்தார். எனவே ஆனந்தரங்கப் பிள்ளையின் 'தினப்படி சேதி' ஆங்கில இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள சாமுவேல் பெப்பிஸ் *(23.2.1633 - 26.5.1703)* அவர்கள் எழுதி வைத்துள்ள நாட்குறிப்பிற்கு இணையானது. இவரும் ஆங்கிலேய அரசாங்கத்தில் கப்பல் துறை அதிகாரியாக இருந்தவர். இவர் "Memoirs of the Royal Navy'' *(1690)* என்ற நூலையும் எழுதி உள்ளார். ஆனாலும் இவர் எழுதிய நாட்குறிப்பு (Diary) *(1.1.1660* முதல் *31.5.1669* வரை) தான் ஆங்கில நாட்குறிப்பு இலக்கியத்தில் தலை சிறந்தது. இந்நாட்குறிப்பும் அரசாங்க நடவடிக்கைகளையும், சமுதாயப் பழக்க வழக்கங்களையும் நன்கு எடுத்து விளக்குகிறது. ஆனால் *1669*-க்குப்பின் பெப்பிஸ் பார்வை இழந்த காரணத்தால் தொடர்ந்து எழுதவில்லை. ஆனால் நம்முடைய ஆனந்தரங்கப்பிள்ளையோ, கால் நூற்றாண்டளவிற்கு மிகப் பெரிய *(17* பாகங்கள்) நாட்குறிப்பு எழுதி வைத்துள்ளது நாம் அறிந்து மகிழ்தற்குரியது.

எத்தனையோ அரசாங்க அலுவல்களுக்கிடையே நம் பிள்ளையவர்கள் தந்த 'தினப்படி சேதி' என்ற இந்த நாட்குறிப்பு இலக்கியம் பல்வேறு சிறப்புக்களை (அரசியல், வரலாறு, தமிழர் பண்பாடு, பழக்க வழக்கம், மொழியியல்) தம்முள் கொண்டு திகழ்கிறது.

பிள்ளை அவர்கள் வெறும் மொழி பெயர்ப்பாளராக (துவிபாஷி) மட்டும் துய்ப்ளேயிடம் பணியாற்றவில்லை. அரசு தூதுவராக பிரெஞ்சு அரசுக்கும் இந்திய மன்னர்களுக்கும் இடையே போரும் பூசலும் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொண்ட பாதுகாவலராகவும் திகழ்ந்தார். ஆம்! அவர் ஒரு ராஜதந்திரியாகவும் இருந்தார்.

எனவே பிரெஞ்சு அரசு அவருக்கு, பல்லக்கு, உடைவாள் முதலிய அரசு சின்னங்களை அளித்துப் பெருமைப்படுத்தியது.

பிள்ளை அவர்களுக்குக் குடும்பத் தொல்லையும் இருந்தது. ஆம்! அவருடைய மூத்த மகள் பாப்பாளுக்கு *1.7.1747*-இல் கோலா

கலமாகத் திருமணம் நடந்த போது, அத் திருமண நாளிலேயே மணமகள் மரித்துப் போனது, தந்தைக்குப் பேரிடியாக இருந்தது. அதோடு அரச காரியங்களைக் கவனித்து வந்தார். இச்செய்தியை நாட்குறிப்பு முதல் பாகம் பக்கம் 256-இல் (ஆங்கிலப்பதிப்பு) குறிப்பிட்டுள்ளார்.

பிள்ளையவர்கட்கு 4 பெண்களும், இரு மகன்களும் உண்டு.

ஆனந்தரங்கப் பிள்ளை நாட்குறிப்பின் மொழி நடைபற்றி அறிய ஒரு சிறு பகுதியைக் கீழே தருகிறோம்.

"1941வ பிப்ரவரி மீ 21.உக்கு சௌத்திரி வ மாசி மீ 14உ செவ்வாய்க்கிழமை நாள் சாயங்காலம் மூன்று மணிக்கு பட்டணத்திலே தமுக்குப் போட்டார்கள். அதென்னவென்றால் கூலி வேலை செய்கிற பேர் ஊரிலே எங்கேயும் வேலைக்குப் போகத் தேவையில்லை. சகலமான கூலிக்காரரும் ஐந்து மணிக்கு, கும்பெனி வேலைக்கு வருகிறது. வராமல் ஊரிலே வேலை செய்த பேருக்கு ஆக்கினையும் அபராதமுமென்று தமுக்கு போட்டார்கள்".

அரசு சிப்பந்தி வேலைக்கு ஆள்சேர்க்க தமுக்கு போட்ட செய்தி ஆனந்தரங்கப் பிள்ளை வார்த்தைகளில் எத்தனை அழகாக அமைந்துள்ளது. கூடுமானவரை இலக்கணத் தமிழில் எழுதி உள்ளார். 'தமுக்குப் போட்டாங்க' என்று சொல்லாமல் 'தமுக்குப் போட்டார்கள்' என்றே எழுதி உள்ளார்.

இப்படிப்பட்ட பெருந்தகை, தான் ஈட்டிய பொருளைப் பல தமிழ்க் கவிஞர்கட்கு வழங்கி, இலக்கியம் வளர உதவி செய்தார். சவ்வாதுப் புலவருக்கு இவர் பெரிதும் உதவி செய்தார். எனவே இவர்.

பானுகி ரணம் பார்க்கும் பங்கே ருகநிலவு
தானும்வரப் பார்க்கும் சகோரங்கள் வான்அமரும்
மையைப் பார்க்கும் மயில்கள் மாஇசை ஆனந்தரங்கன்
கையைப் பார்க் கும்புலவோர் கண்.

(பானு - சூரியன்; பங்கேருகம் - தாமரை; சகோரம் - நிலவொளி உண்ணும் பறவை; மை - மேகம்; மாஇசை - பெரும்புகழ்)

தாமரை சூரியனைப் பார்க்கும்; சகோரப் பறவை நிலவைப் பார்க்கும்; மயில் மேகத்தைப் பார்க்கும்; புலவர்கள் ஆனந்தரங்கனின் கொடைக்கரம் பார்ப்பர்.

மதுர கவிராயரும் இவரால் ஆதரிக்கப் பெற்ற தமிழ்ப்புலவரே. இவரால் ஆதரிக்கப் பெற்ற சீனிவாச கவி 'ஆனந்தரங்க விஜய சம்பு' என்ற ஒரு வடமொழிக் காவியமே 1752-இல் பாடினார்.

இன்னும் வள்ளல் ஆனந்தரங்கப் பிள்ளையால் புரக்கப்பட்ட தெலுங்குக்கவி கஸ்தூரி ரங்கய்யா என்ற புலவர் தெலுங்கில் 'ஆனந்தரங்க ராட்சதமு' என்ற காவியமும், தமிழில் சதாசிவ தேசிகர் என்ற புலவர் ஆனந்தரங்கக் கோவையும் பாடிப்பரவினர்.

## கட்சிச்சார்பற்ற நிர்வாகம்

பதவியேற்ற பத்து தினங்களுக்குள் முதல்வர் கலைஞர் செய்த அறிவிப்புகளில் எல்லோரது வரவேற்பையும் பெற்ற குறிப்பிடத்தக்க அறிவிப்பு,

அரசு சார்பான வாரியங்கள், குழுக்கள் ஆகியவற்றில்-ஓரிரண்டு நிறுவனங்களைத் தவிர—அனைத்து அமைப்புகளும் இனி அதிகாரிகள் தலைமையிலேயே செயல்படும். கட்சிக்காரர்கள் நியமிக்கப்படமாட்டார்கள் என்பதாகும்.

பொதுத்துறையைச் சார்ந்த 11 வாரியங்களும் குழுக்களும் அவைகள் தேவையற்றவை என்பதைக் கண்டறிந்து கலைக்கப்பட்டன. கடந்த காலத்தில் அதிகாரிகள் அல்லாதவர்கள் நிர்வாகத் தலைவர்களாக 41 பதவிகளில் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்தப் பதவிகள் அனைத்தையும் நீக்கியதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 45 லட்சம் ரூபாய் மிச்சமாயிற்று.

## வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்றன

தேர்தல் அறிக்கையிலும்—பத்திரிகைப் பேட்டிகளிலும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசு இந்த நூறு நாட்களில் தீவிரமாகச் செயல்பட்டிருக்கிறது.

தேர்தல் அறிக்கையில் தெரிவித்து நிறைவேற்றிய முக்கியமான வாக்குறுதிகளில் சில இதோ:

சட்டமன்ற மேலவையை மீண்டும் ஏற்படுத்த நடவடிக்கை.

உள்ளாட்சிகளுக்குக் கூடுதல் அதிகாரம்.

விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம்.

அரசுப்பணிகளில் 30 சதவிகித இடங்கள் மகளிருக்காக ஒதுக்கீடு. இது தவிர, மகளிர் நலனுக்கான கல்வி, திருமண உதவி போன்ற நல்வாழ்வுத் திட்டங்கள்.

குடிநீர் வசதிக்காகவும், ஆதிதிராவிடர் வீட்டு வசதிக்காகவும், மீனவர் குடியிருப்புதிட்டத்துக்காகவும், நகர்ப்புற மேம்பாட்டுக்காகவும், வேலை வாய்ப்புத் திட்டங்களுக்காகவும் கூடுதல் நிதி.

பல்வேறு மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடுகள்.

அரசுப் பணிகளில் சேருவதற்கான வயது வரம்பு 30 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு பட்டப்படிப்பு வரையில் கல்வி இலவசம்.

அரசு மானியமாக 2 கோடி ரூபாய் தரப்பட்டு, வணிகர் நல நிதி ஏற்படுத்துதல்,

சைக்கிள் ரிக்‌ஷாக்களுக்கு மோட்டார் பொருத்தவும், மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்‌ஷா, ஆட்டோ ரிக்‌ஷா, டாக்சி ஓட்டுநர்கள் வண்டிகளைத் தமக்கே உரியதாக்கிக் கொள்ளவும் நிதி உதவி.



# மதுரமான பால் வழங்கும் மதுரைநகர் பால்பண்ணை

மதுரைப் பால்பண்ணையில் பதப்படுத்தி நிலைப்படுத்தும் திறன் நாளொன்றுக்குச் சுமார் 1.5 இலட்சம் லிட்டர் ஆகும். மதுரை மாவட்டத்தில் உற்பத்தியாகும் பாலைக் கொள்முதல் செய்வதோடு, திண்டுக்கல் காயிதே மில்லத், பசும்பொன் தேவர் திருமகன், இராமநாதபுரம், காமராஜர், நெல்லை கட்டபொம்மன், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் ஒன்றியங்களின் மூலமாகக் கொள்முதல் செய்யப்பட்டு உபரியாக உள்ள பாலையும் ஏற்று நாளொன்றுக்கு சுமார் இரண்டு இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தப்பட்டு வருகிறது.

சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு தினசரி பால் கொள்முதல் மதுரை மாவட்டத்தில் சுமார் 40 ஆயிரம் லிட்டர் அளவிற்கு அதிகரித்துள்ளது. அதேபோல் பால் விற்பனையிலும் இவ்வாண்டில் தினசரி 4 ஆயிரம் லிட்டர் அதிகரித்துள்ளது.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலமாக இம் மாவட்டத்தில் சுமார் 6 ஆயிரம் ஆதி திராவிடர்களுக்கு தாட்கோ திட்டத்தில் மானியத் தொகையுடன் கடன் உதவி செய்து, கறவை மாடுகள் வாங்கிப் பால் உற்பத்தி அதிகமாக்கப்பட்டுள்ளது. இதனால் சென்ற ஆண்டு 200 மெட்ரிக் டன் விற்பனையான கால்நடைத் தீவனம் தற்போது சுமார் 500 மெட்ரிக் டன் விற்பனையாகும் அளவிற்கு உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு மதுரையில் உற்பத்தி செய்யப்பட்ட பால் பவுடரின் பெரும் பாலான பகுதியை வெளிச்சந்தையில் விற்பனை செய்ததால் பால் வற்றும் காலத்தில் பால் பற்றாக்குறை ஏற்பட்டது. பொதுமக்களுக்குப் பால் விநியோகம் சரிவரச் செய்ய முடியாத நிலையைத் தவிர்க்கவே இந்த ஆண்டு வெளிச்சந்தையில் பால் பவுடரை விற்பனை செய்யாமல் மொத்தமாகச் சேமித்து வைக்க முடிவு செய்யப்பட்டு கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு பால் பவுடர் தயாரிக்கும் இயந்திரம் அதிகத் திறமையுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு சுமார் 70,000 லிட்டர் கொழுப்புச் சத்து நீக்கிய பால் பவுடராக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு சுமார் 90,000 லிட்டர் கொழுப்புச் சத்து நீக்கிய பால், பவுடராக மாற்றப்படுகிறது. அதிகமாக உள்ள உபரிப்பாலை, பவுடராக மாற்றுவதால் வெளி மாநிலங்களிலிருந்து நாம் பவுடர் வாங்கவேண்டிய நிலை ஏற்படாது. 1-10-88 முதல் 6-4-89 வரை சுமார் 1,100 டன் பவுடர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

மதுரையில் பால் பண்ணையில் 1988 அக்டோபர் முதல் 1989 ஏப்ரல் முடிய சுமார் 820 மெட்ரிக் டன் வெண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இங்கு உள்ள ஆழ்உறைவு(deep Freeze) இடத்தில் 250 டன் வெண்ணெய் மட்டும்தான் கெடாமல் பாதுகாக்க முடியும். எனவே 500 டன் வெண்ணெய், விற்பனைக்காகச் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், தினமும் 2 அல்லது 3 டேங்கர்கள் மூலமாக 2,500 லிட்டர் பால் சென்னைக்குத் தானியங்கி நிலையங்களின் விநியோகத்திற்காக அனுப்பப்படுகிறது.

எதிர்காலத் தேவையை முன்னிட்டு கையிருப்பில் பவுடர், வெண்ணெய், இருப்பதாலும் பால் உற்பத்தியாளர்களுக்கு 10 நாட்களுக்கு ஒருமுறை பணம் பட்டுவாடா செய்ய வேண்டியுள்ளதாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலமாகவும், தேசிய பால் வளர்ச்சிக் கழகம் மூலமாகவும் கடன் வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இதுநாள் வரை கடன் வசதியைப் பயன்படுத்தாமலே நிதி நிலைமை சமாளித்து வரப்படுகிறது.

1988 நவம்பர் முதல், பால் உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கொடுத்து இருந்தாலும், பொது மக்களின் நலன்கருதி, வெண்ணெய், நெய், பவுடர் போன்றவற்றின் விலையை உயர்த்தவில்லை. மேலும் கிராமங்களிலிருந்து பால் சேமிப்புச் செலவு, பால் விநியோகச் செலவு, டீசல், பெட்ரோல், மின்சாரம், இயந்திரக்கருவிகள், இரசாயனப் பொருட்கள், நிர்வாகச் செலவு, ஆகியவை அண்மைக் காலங்களில் கணிசமாக அதிகரித்த போதிலும், பொதுமக்கள் மேல் இதை விதிக்காமல் பால் பண்ணையே இந்தக் கூடுதல் செலவினங்களை ஏற்றுக் கொள்கிறது. இலாபம் பெறுவது மட்டுமே குறிக்கோள் என்றில்லாமல் மதுரை நகர் மக்களுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் பால் வழங்கும் பணியை மேற்கொண்டிருப்பது போற்றுதலுக்குரியது.

**வே. இராமநாதன்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை மாவட்டம்.



ரம்சான் பண்டிகையை யொட்டி 12.5.89 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் ரம்சான் விழாகுறித்த சிறு புத்தகத்தின் முதல் பிரதியை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் ஆற்காடு திரு. நா. வீராசாமி அவர்கள் வெளியிட, மாண்புமிகு முதல்வர் கலைஞர் பெற்றுக் கொண்டார்.

# படமும் செய்தியும்



ஐந்தாவது ஊதியக் குழுவின் அறிக்கையை, குழுவின் தலைவர் நீதிபதி ஜி. ராமானுஜம் அவர்கள் 16.5.89 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் அளித்தார்.



கோவையில் அரசின் நல வாழ்வுத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவையொட்டி (22.5.89) ஏழைப் பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கினார் மாண்பு மிகு முதல்வர் கலைஞர். மாண்பு மிகு சட்டத்துறை அமைச்சர் திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா, மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன், மாண்பு மிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.





மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் ஆற்காடு திரு. வீராசாமி அவர்களின் முன்னிலையில் மாண்புமிகு செய்தி - தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்து ராமலிங்கம் அவர்கள் கோவையில் அரசுப் பொருட்காட்சியை 1.5.89 அன்று துவக்கி வைத்தார்.



சென்னை பெண்கள் தையல் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் 11.5.89 அன்று மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர சைக்கிள்களும் நலிவுற்ற மகளிருக்குத் தையல் இயந்திரங்களும் வழங்கினார்.




தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் செய்தி மலரை தலைமைச் செயலர் திரு. எம்.எம். இராஜேந்திரன், இ.ஆ.ப, சென்னையில் 19.5.89 அன்று வெளியிட, முதல் மலரை அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தர் திரு. வி.சி. குழந்தை சாமி பெற்றுக் கொண்டார்.

# வன வளர்ச்சியில் பூஞ்சை வேர்களின் பங்கு

டாக்டர் ந. இராமன்

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு வன வளம் பெரிதும் முக்கியமானது. இந்தியாவின் பரப்பளவில் 10 சதவீதம் பரப்பளவில்மட்டும் காடுகள் உள்ளன. ஒவ்வோர் ஆண்டும் கிட்டத் தட்ட 15 இலட்சம் எக்டேர் வனப்பகுதி அழிக்கப்பட்டு வருகிறது. இந்தியா சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்று வரை இந்நாடு 450 இலட்சம் எக்டேர் காடுகளை இழந்திருக்கிறது. இதில் 60 இலட்சம் எக்டேர் பரப்பளவில் மட்டும் மரக்கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன. இவைகளில் எவ்வளவு பிழைத்திருக்கின்றன என்பதற்குப் புள்ளி விவரங்கள் இல்லை.

சிக்கிம் மற்றும் அருணாசல மாநிலங்களைத் தவிர கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களிலும் வன அளவு குறைந்து கொண்டே வருகிறது. இதற்கு முக்கியக் காரணங்கள் அதிகமான மனித இனப் பெருக்கத்தால் விறகு மற்றும் கட்டடங்களுக்குத் தேவைப்படும் மரங்களின் தேவை அதிகரித்துக் கொண்டே போவதும், நகரமயமாக்குதல், தொழிற்சாலைமயமாக்குதல், வேளாண்மைமயமாக்குதல் போன்றவற்றைச் செய்யும் பொழுது வனப்பாதுகாப்பில்குறைந்த முன்னுரிமை அளிப்பதுமே ஆகும்.

இப்படி வனவளம் குறைந்து வருவதைத் தடுத்து நிறுத்தி, காடுகளை அதிகரிக்க, தனியார் அல்லது அரசாங்கத்தில் கிடைக்கக்கூடிய நிலங்களில் மரங்களைத் தீவிரமாக நடுவதை மேற்கொள்ளலாம். இயற்கைக் காடுகளை அழித்து யூகலிப்டஸ் போன்ற மரங்களை நடுவதற்குப் பதிலாக, இயற்கைக் காடுகளின் எல்லைப் பகுதிகளில் இவைகளை நட்டு வனப்பரப்பை அதிகரிக்கலாம். இப்படி மரங்களை நடும்பொழுது சூழலுக்கு ஒவ்வா அயல் நாட்டு மர இனங்களைத் தவிர்க்க வேண்டும். கிராமப் புறங்களில் கூட்டுறவு முறையில் காடுகளை வளர்க்கும் முறை ஊக்குவிக்கப்பட வேண்டும்.

சமூகக் காடுகள் தனியார் நிலங்களில் நன்கு வளர்க்கப்படுவதைப் போல் அரசாங்க நிலங்களில் தனி மனிதர்கள் காடுகள் வளர்ப்பதை ஊக்குவிக்கலாம். ஆனால் காடுகள் வளர்ப்பவருக்கு மரம் தான் சொந்தம்; நிலம் அல்ல என்றிருக்க வேண்டும். மரங்களை நடுவதுடன் விட்டு விடாமல் அவற்றைப் பராமரிப்பதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். நம் நாட்டில் கிட்டத் தட்ட 1,750 இலட்சம் எக்டேர் தரிசு நிலமுள்ளது. இந்நிலங்களைக் கண்டறிந்து இவைகளில் காடுகளை வளர்த்து, மரப்பொருட்களைக் கச்சா பொருளாக உபயோகிக்கும் தொழிற்சாலைகளை அவைகளுக்கிடையிலே நிறுவலாம்.

இப்படிப் பயனற்ற தரிசு நிங்களிலும் மரங்களை வளர்க்கப் பெரிதும் உதவியாக இருப்பது 'மைகோரைசா' எனப்படும் ஒரு வகை பூஞ்சையாகும்.

மைகோரைசா என்பது சில வகை பூஞ்சைகளுக்கும் உயர் தாவரங்களின் வேர்களுக்கும் இடையில் உள்ள பயனளிக்கக் கூடிய இணை வாழ்வுத் திறமுடைய கூட்டைக் குறிப்பதாகும். 'மைகோ' என்றால் 'பூஞ்சை' என்றும். 'ரைசா' என்றால் 'வேர்' என்றும் பொருள்படும். ஆக, நாம் 'பூஞ்சை வேர்கள்' அல்லது வேர்ப் பூஞ்சைகள்' என்று இதனைக் குறிப்பிடலாம்.

இந்த வேர்ப் பூஞ்சை கள் தாவரங்களுக்குத் தேவையான வெடியம் (நைட்ரஜன்), எரியும் (பாஸ்பரஸ்), சாம்பரம் (பொட்டாசியம்), சுண்ணகம் (கால்சியம்), கந்தகம் (சல்பர்), துத்தநாகம் (ஸிங்க்) மற்றும் தாமிரம் (காப்பர்) போன்ற தாதுப் பொருட்களையும், நீரையும் நிலத்திலிருந்து உறிஞ்சுவதிலும், சேமிப்பதிலும் மற்றும் கடத்துவதிலும் பெரும்பங்கு ஆற்றுகின்றன. ஆக, இந்தப் பூஞ்சைகள் மிகவும் திறமையுள்ள ஓர் வேர் அமைப்பின் நீட்டிப்பு ஆகும். 4 செ.மீ. தூரத்திற்குள் உள்ள தாதுப் பொருட்களைத்தான் வேர்கள் உறிஞ்ச முடியும். ஆனால், இந்தப் பூஞ்சைகளின் பூசணவலை 4 செ. மீ. தூரத்திற்கும் மேற்பட்ட இடங்களிலிருந்தும் தாதுப் பொருளை உறிஞ்சி இந்தப் பூஞ்சைகளை ஆதரிக்கும் வேர்களுக்குச் செலுத்துகின்றன. இவை சல்லி வேர்களின் அளவையும், நீடு வாழ்கின்ற தன்மையையும் அதிகரிக்கக் கூடிய செரிமானப் பொருள்கள் (என்ஸைம்ஸ்), ஊட்டச் சத்துகள் (வைட்டமின்கள்), வளர்ச்சியைப் பெருக்கக் கூடிய இயக்கு நீர்கள் (ஹார்மோன்ஸ்) மற்றும் இதர பொருட்களை உருவாக்குகின்றன.

நோய் தோற்றுவிக்கிற நுண்ணுயிர்களிலிருந்து சல்லி வேர்களை இப்பூஞ்சைகள் பாதுகாக்கின்றன. இவ்வகைப் பூஞ்சைகளில் சில நோய் தோற்றுவிக்கிற நுண்ணுயிர்கள் வேர் அமைப்பை நெருங்குவதைத் தடை செய்யக்கூடிய பொருட்களை உருவாக்குகின்றன. எனவே இந்தப் பூஞ்சைகள் உணவூட்டச் சுழற்சியிலும், ஆக்கிப்படைக்

## விருது பெற்ற விஞ்ஞானி

சென்னைப் பல்கலைக் கழகத் தாவரவியல் துறையைச் சார்ந்த டாக்டர் ந. இராமன் என்ற விரிவுரையாளருக்கு, செயல்முறை சார்ந்த நுண்ணுயிரியல் (Applied Microbiology) மற்றும் உயிர்த் தொழில் நுட்பவியல் (Bio technology) ஆகியவற்றில் இவர் ஆற்றிய சிறப்பான பணியைப் பாராட்டி 'யுனெஸ்கோ நிறுவனம் 1988-ஆம் ஆண்டுக்கான இளம் விஞ்ஞானி விருதை அளித்திருக்கிறது. அயல் நாட்டிலுள்ள ஒரு சிறந்த ஆராய்ச்சி மையத்திற்கு இவர் செல்ல ஆகும் செலவை யுனெஸ்கோ நிறுவனம் ஏற்றுக் கொள்கிறது.

இவரது பி.எச்.டி. பட்டத்திற்கான, காளானைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை, மேற்கு ஜெர்மெனியிலிருந்து புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது. 'மைகோரைசா' எனப்படும் பயிர்கள் மற்றும் மரங்களுக்குப் பயனளிக்கக்கூடிய நுண்ணுயிர்களைப் பற்றிய இவரது பயிற்சி முறைத் தொகுப்பு குறிப்பிடத்தக்க சிறப்புடையது.



தற்போது இவர் மைகோரைசாவின் உயிர்த்தொழில் நுட்ப ஆராய்ச்சியிலும் மைகோரைசாவை எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப்பில் ஆராயும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ளார். 33 வயதான இந்த இளம் விஞ்ஞானியின் கருத்துப்படி மைகோரைசா பூஞ்சைகளைப் பயன்படுத்தி மரங்களின் வளர்ச்சியை அதிகப்படுத்துவதுடன், மோசமான நிலங்களிலும் மரங்களை வளர்க்க முடியும். இவரது மைகோரைசா ஆராய்ச்சிக்கு இந்திய அரசின் வன ஆராய்ச்சி அமைப்பு ரூபாய் 4,36,000 மும், பல்கலைக் கழக மானியக் குழு ரூ.1,32,000 மும், நிதி உதவி செய்திருக்கின்றன.



செல்புறப் பூஞ்சை வேர் - வேரில் போர்வை போன்று பூஞ்சை படர்ந்திருப்பதைக் காணலாம்.

கும் ஆற்றலைப் பெருக்குவதிலும் பெரும்பங்கு ஆற்றுகின்றன. இதற்குக் கைமாறாக, இவ்வகைப்பூஞ்சைகள் தங்களுக்குத் தேவைப்படும் பொருட்களை, பொதுவாக சர்க்கரைப் பொருட்களை, தங்களை ஆதரிக்கும் தாவரங்களிலிருந்து எடுத்து உயிர் வாழ்கின்றன.

பூஞ்சை வேர்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். செல்புறப் பூஞ்சை வேர்கள் (என்டோமைக் கோரிஸாக்): இதில் பூஞ்சை தனது ஆதரவான தாவர சல்லி வேர்களின் மேல் ஒரு போர்வை (மேன்டில்) போன்று வளர்ந்திருக்கும். மேலும் உள் மரப் பட்டைப் (கார்டெக்ஸ்) பகுதியில் செல்லிடை வெளிகளில் இப்பூஞ்சைகள் காணப்படும். இவ்வித அமைப்பிற்கு 'ஆர்டிக் வலை' (ஹார்டிக்நெட்) என்று பெயர். செல்லகப் பூஞ்சை வேர்கள் (என்டோமைக்கோரிஸாக்):பூஞ்சைகள் ஆதார தாவரத்தின் வேரில் உள்மரப்பட்டைப் பகுதியிலுள்ள செல்களுக்குள் புகுந்து செயலாற்றுகின்றன. போர்வை, ஆர்டிக்-வலை அமைப்பை இங்கு காணமுடியாது.

செவ்வகப் பூஞ்சை வேர் - செல்லிற்குள் பூஞ்சையின்வேர் சிறுகுமிழ் இருப்பதைக் காணலாம்.



இவ்விருவகைகளும் வன வளர்ச்சியில் பங்கு கொண்டாலும் செல்புறப் பூஞ்சை வேர்கள் சிறப்பாகப் பங்காற்றுகின்றன. குறிப்பாக, செல்புற பூஞ்சை வேர்கள்-ஊசியிலை வகையைச் சார்ந்த பைன்னேசி மற்றும் பூக்கும் தாவர குடும்பங்களான பேகேசி, பேட்டுலேசி, தூக்லாண்டேசி, மிரிட்டேசி மரங்களில் காணப்படுகின்றன. பொதுவாக பெசிடியோமைசிட்டுகள் மற்றும் அஸ்கோமைசிட்டுகள் வகுப்பைச் சார்ந்த பூஞ்சைகள் செல்புறப் பூஞ்சை வேர்களை உருவாக்குகின்றன. பூஞ்சைகளில் கிட்டத்தட்ட 5,000 சிற்றினங்கள், 2000 மரச் சிற்றினங்களுடன் சேர்ந்து செல்புற பூஞ்சை வேர்களை உண்டாக்குகின்றன.

நிறைய மரங்கள், குறிப்பாக பைன் மரங்கள் பூஞ்சை வேர்கள் இல்லாமல் வளரா. பூஞ்சை வேர்கள் உள்ள மரங்கள் அவை இல்லாதவைகளைக் காட்டிலும் வேகமாக வளருகின்றன. பூஞ்சை-வேர்களுடன் கூடிய மரக்-கன்றுகள் வறட்சியையும் தாங்குவதுடன், அவைகளின் உயிர்வாழும் திறன் அதிகமாகக் காணப்படும்.

இவ்வித, பயனுள்ள பூஞ்சைகளை நாற்றங்காலில் புகுத்தி மரக் கன்றுகளின் வளர்ச்சியைப் பெருக்கி நாட்டின் வளத்தை மேம்படுத்தலாம். இந்த முறையில் அமெரிக்காவில் பெரும் பகுதி காடுகள் வளர்க்கப் பட்டுள்ளன. நாட்டிலுள்ள பூஞ்சைவேர்களிலிருந்து சிறந்த பூஞ்சைகளைத் தேர்ந்தெடுத்து, அவைகளைப் பெரும் அளவில் பெருக்கி, நாற்றங்காலில் புகுத்தி, அவைகளின் பயனை இந்நாடு பெறும் வகையில் ஆராய்ச்சிகள் சென்னைப் பல்கலைக் கழக தாவரவியல் உயர் ஆராய்ச்சி மையத்தில் நடந்தேறி வருகின்றன.

**கா. சுப்பிரமணிய பிள்ளையின் வாழ்வும் தமிழ்த் தொண்டும்**

ஆசிரியர்: சு.செயராசு நத்தானியல்
வெளியீடு: தமிழ்க் காசு நினைவு இலக்கியக் குழு, ஈசுவர வடிவு அகம், குழித்தலை-638104
விலை: ரூ.10 பக்கம்: 136

தமிழ் வளர்த்த பெரியார்களில் குறிப்பிடத்தக்கவரான கா.சு. பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு இந்நூலில் சுவையோடு எழுதப்பட்டுள்ளது. அவரது பேராற்றல்-பெருந்தொண்டு - அருங்குணம் ஆகியவையும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

கா.சு. பிள்ளை பத்திரிகை ஆசிரியராகப் பணி ஆற்றிய வரலாறு விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது இந்நூலில்.

சமயச் செய்திகள், சமுதாயச் செய்திகள், அரசியல் செய்திகள் ஆகியவை கா.சு. பிள்ளை அவர்களால் தக்க வகையில் எடுத்துச் சொல்லப்பட்ட செய்தியையும் நூலாசிரியர் விவரித்துள்ளார்.

கா.சு. பிள்ளை அவர்களின் தனித்தமிழ் ஆர்வமும், அவர் கையாண்ட தமிழ்ச் சொற்களும் தக்க வகையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

பாரதியைத் தமிழ்ப் புலவர் ஏற்றுக்கொள்ள மறுத்த காலத்திலேயே அவர் ஒரு மகா கவிஞர் என்று 1930இல் தமது இலக்கிய வரலாற்று நூலில் குறிப்பிட்டார். கா.சு. பிள்ளை என்னும் செய்தியைப்படிக்கும்போது அவர் எவ்வளவு தொலை நோக்கு உணர்வுடன் திகழ்ந்தார் என்பது தெளிவாகிறது. சுவையான எளிய நடை நூலுக்குப் பெருமை சேர்க்கிறது.

— தமிழ்ப்பித்தன்

**தேம்பாவணித் திறன்**

ஆசிரியர்: பேராசிரியர் பா.வளன் அரசு
வெளியீடு: கதிரவன் பதிப்பகம், 1-அ, நெல்லை நாயனார் தெரு, பாளையங்கோட்டை-627002
விலை: ரூ. 50 பக்கம்:399

கிறித்தவத் தமிழ்த் தொண்டராகத் தமிழகம் வந்து, தமிழ் கற்று, பன்மொழிப் புலவராகப் பேர் பெற்று, 'சதுரகராதி' கண்ட வீரமாமுனிவர் எழுதிய 'தேம்பாவணி' பற்றியதே இந்நூல்.

தேம்பாவணிக் காப்பியம், நாட்டுப்படலம் முதல், முடி சூட்டுப் படலம் வரை முப்பத்தாறு படலங்களைக் கொண்டுள்ளது. வீரமாமுனிவர், தண்டியலங்கார நூலில் காணப்படும் பல்வேறு அணிகளையும் அழகாகக் காப்பியத்துவபடைத்துள்ளார் என்பதனைத் தக்க சான்றுகளோடு எடுத்துக் கூறுகிறார் நூலாசிரியர்.

''தேம்பாவணியில் கருத்து, உணர்ச்சி, கற்பனை, வடிவம் ஆகிய சீருயர்ந்த இலக்கியக் கூறுகள் இடம் பெற்றுள்ளன. அணி வளத்துடன் திகழும் இக்காப்பியத்தில் சொல் லாப்பு, சித்திரம், பிறிதுமொழி, வினாவில் விடை ஆகிய நால்வகு அணிகள் வீரமாமுனிவரால் புத்தணிகளாக வழங்கப்பட்டுள்ளன.

''திறக்குறளின் மணமும், சிலப்பதிகாரத்தின் சிந்தனை வளமும், மணிமேகலையின் புனைதிறனும், தேவாரத்தின் பக்திச் சுவையும், கம்பரின் பாத்திறனும், பிற நூல்களின் தாக்கமும், மேனாட்டு இலக்கியச் சாயலும் கொண்டு தேம்பாவணி சிறந்து விளங்குகிறது'' (பக். 172) என்று நூலாசிரியர் அதனைப் படம்பிடித்துக் காட்டி, அது ஓர் உலக இலக்கியம் என்பதையும் நிறுவுகிறார்.




படிக்கப் படிக்க இன்பச் சுவை தரும் வகையிலே, தம் புலமை எனும் ஏர் கொண்டு ஆழ உழுதுள்ளார் ஆசிரியர். இலக்கிய நயம் மிகுந்த இந்நூல், ஆராய்ச்சி மாணவர்க்கு மட்டுமல்ல - தமிழ் ஆர்வலர்க்கு மட்டுமல்ல-எல்லாத் திறத்தாருமே படித்துச் சுவைத்துப் பயன்பெற வேண்டிய பெட்டகம்.

—பி.வி.ஜி.

**நம் நாட்டுக் கீரை வகைகள் இரண்டாம் பாகம்**

ஆசிரியர்கள்: கே.பாலசுப்பிரமணியன், கே. நீலகண்டன்,
வெளியிட்டோர்: நியுசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41, பி சிட்கோ எஸ்டேட், சென்னை-600098.
பக்கம் :171 விலை ரூ.22.00

கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் முக்கியப் பொறுப்பு வகிப்பவர்கள் இந்த நூலின் ஆசிரியர்கள். எனவே ,தலைப்புக்கேற்ப மிகச் செம்மையாக உருவாக்கப்பட்டுள்ளது நூல்.

உடல் உணவுக் கீரை, கிழங்கினக் கீரைகள், பொது இனக் கீரைகள், மனையியலில் கீரைகள், என்கிற நான்கு பகுதிகளாகக் கீரைகள் இந்நூலில் ஆராயப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கீரையையும் உணவாகப் பயன்படுத்தும் முறை, அதில் இருக்கின்ற ஊட்டச் சத்து, அதனால் உண்டாகும் மருத்துவப் பயன்கள், தொழில் ரீதியாக அது பயன்படும் விதம், கீரைகளைப் பயிரிடும் முறை ஆகியவைகள் மிகவும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

கீரையை நமக்குத் தெரியும். ஆனால் அதன் தன்மைகள் பற்றி அவ்வளவாகத் தெரியாத காரணத்தாலேயே அலட்சியம் செய்கிறோம். ஆனால், ஊட்டச்சத்து குறையாமல் சமைக்கப்படும் கீரைகளால் உடல் நலம் காக்கப்படும் என்ற பேருண்மையை இந்த நூலின் மூலம் படித்தறியும் யாரும், எந்தக் கீரையையும் அலட்சியப்படுத்தமாட்டார்கள்.

**நாளை நான் பிறக்கப்போகிறேன்**

ஆசிரியர்: மல்லிகைக் கண்ணன்
வெளியிட்டோர்: சந்தோஷ் பதிப்பகம், 25, வடக்குக் கவரைத் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600033
பக்கம்: 80 விலை: ரூ. 10.00

இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழிலும் நூல் ஆசிரியரால் எழுதப்பட்ட 3 எழுத்தோவியங்கள் தொகுத்து வழங்கப் பட்டிருக்கின்றன.

''கருவில் இருக்கும் குழந்தை, சனியன், பெண்ணாகப் பிறந்து தொலைக்கப்போகிறது' என்று வெளியே இருப்பவர்கள் எரிச்சலோடு பேசுவதைக்கேட்டு மனம் வெதும்பிவிடுகிறது. தானும் பெண்ணாகவே இருக்கவே, பிறக்குமுன்பே தானாகவே இறக்கிறது.

புத்தகப் பெயரில் உள்ள புதுக் கவிதையின் கருப்பொருள் இதுதான்.

இது போலவே ஒவ்வோர் எழுத்தோவியமும் புதுப்புதுக் கோணத்தில் படைக்கப்பட்டிருக்கின்றது.

—'சோழராஜா'

# அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் புதியவரவுகள்

**வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் அண்மையில் இனப்பெருக்கம் செய்துள்ள சில அரிய விலங்குகளைப் பற்றிய விவரங்கள் இங்கே இடம் பெறுகின்றன:**

## கழுதைப் புலி

கழுதைப் புலி இனம் ஆப்பிரிக்கா மற்றும் இந்தியாவின் பல்வேறு காட்டுப் பகுதிகளில் காணப்படுகிறது. இவை காடுகளில் இறந்து அழுகிய விலங்குகளின் மாமிசத்தைச் சாப்பிடுவதின் மூலம் காட்டின் சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சுத்தமாக்குகிறது. இது ஓர் அரிய விலங்காகக் கருதப்படுகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் (27-7-87) ஒரு ஜோடி கழுதைப் புலிகள் பம்பாய் உயிரியல் பூங்காவில் இருந்து பெறப்பட்டன. இவை தற்பொழுது இனப்பெருக்கம் செய்து வருகின்றன. 19-2-89 அன்று இவை இரண்டு குட்டிகள் ஈன்றுள்ளன. இந்த ஜோடிக்கு இது இரண்டாவது பிரசவமாகும். முதலில் ஈன்ற இரண்டு பெண் குட்டிகள் தற்பொழுது பெரிதாக வளர்ந்துள்ளன. (ஒரு வயது). இவை, இதற்கெனப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட திறந்த வெளி இருப்பிடத்தில் வாழ்கின்றன.

## மஃப்லான் ஐரோப்பியக் காட்டு ஆடு

''மஃப்லான்'' என அழைக்கப்படும் இந்த ஆடு ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள மலைக்காடுகளில் காணப்படுகிறது. காட்டு ஆடு வகைகளில் இதுவே மிகச் சிறிய இனம் எனக் கருதப்படுகிறது. (உயரம் 70 செ.மீ) இந்த ஆட்டின் ஆண் இனம், பின் நோக்கி வளைந்த, தடித்த கொம்புடன் அழகான தோற்றத்தில் காணப்படும். இந்த இனத்தில் இருந்துதான் நாம் வளர்த்து வரும் ஆடுகளின் இனம் வந்ததென ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

இந்த இனத்திலிருந்து இரண்டு ஜோடிகள், இரண்டு ஆண்டுகளுக்கு முன் யூகோஸ்லோவேகியா நாட்டில் இருந்து விலங்குப் பரிமாற்ற அடிப்படையில் பெறப்பட்டன. இங்கு இவை பிரத்தியேகமாகக் கட்டப்பட்ட திறந்த வெளி இருப்பிடத்தில் வாழ்கின்றன. ஒரு பெண் ஆடு 18-2-89 அன்று ஒரு ஆண் குட்டி போட்டுள்ளது. மற்றொன்று குட்டி ஈனும் நிலையிலுள்ளது.

இந்தியாவில் தமிழ்நாட்டிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் தான் இந்த அரிய ஆடுகள் கொண்டு வரப்பட்டு வளர்க்கப்படுகின்றன.





## ''சாம்பல் நிறக் கங்காரு''

கங்காரு இனம் ஆஸ்திரேலியா நாட்டைச் சார்ந்தது. பாலூட்டி விலங்கு வகைகளில் இது ஓர் அதிசய இனமாகும். இது தன் வயிற்றில் உள்ள பையில் குட்டியை வளர்க்கும். சாம்பல் நிறக் கங்காரு இனம், பெரிய கங்காரு வகைகளில் ஒன்று.

சமீபத்தில் (30-10-87) இவ்வுயிரியல் பூங்காவிற்கு இந்தக் கங்காருகள் (1 ஆண், 2 பெண்) ஆஸ்திரேலியாவில் இருந்து சுமார் ரூ. 30,000 செலவில் விலைக்கு வாங்கப்பட்டன. தற்பொழுது இவை குட்டி ஈன்று தமது பையில் வைத்துப் பாதுகாத்து வருகின்றன. இவ்வுயிரியல் பூங்காவில் சிறு கங்காரு இனம் (வல்லவி கங்காரு) ஒன்றும் இனவிருத்தி செய்து வருகிறது.

# வெண்பாப் போட்டி

## பெண்ணினம் பெற்றதே பேறு

எட்டாம் வகுப்புப் படித்திட்ட ஏழைப்பெண்
விட்ட திருமணம் வெற்றிபெறத் - திட்டமொன்று
பண்ணினார், பைந்தமிழ்ப் பண்பாளர்; என்னென்பேன்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-மா. ஆறுமுகம், மலைப்பட்டு.

கர்ப்பிணிப் பெண்டிர்க்கும் கைம்மை அடைந்தார்க்கும்
பொற்குவியல் தந்தன்பாய்ப் போற்றியும் - நற்பணியில்
அன்னார்க்குப் ஐயாறு பங்களித்தார் நம்கலைஞர்;
பெண்ணினம் பெற்றதே பேறு.

-கு. பரமசிவம், இராசபாளையம்.

நூற்றுக்கு முப்பதுபேர் பெண்களாக வேலைவாய்ப்பு
ஏற்றிடத்தான் நற்கலைஞர் சட்டமிட்டார் - போற்றவரும்
பெண்களை நன்குயர்த்திப் பேசும் முதல்வரால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-த. பாண்டியன், குமாரகுப்பம்.

தண்ணார் திருக்குவளை தன்னில் பிறந்துதமிழ்
மண்ணாள் கலைஞர் மதிநலத்தால் - பெண்டிர்க்கு
எண்ணரிய திட்டங்கள் இந்நாள் வகுத்தளித்தார்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-கு. பிச்சைமுத்து, எரசினம்பாளையம்.

நல்ல நளாயினி நாப்புகழ் மாதவி
வல்ல புனிதவதி வான்புகழ் - கண்ணகி
மண்ணினில் தோன்றினர் மாட்சிமை பெற்றனர்
பெண்ணினம் பெற்றதே பேறு.

— அரி.செல்வராசு, திருச்சி.

மண்ணும் மரமுமல்ல மாதர்; இழிவாக
எண்ணாமல் போற்றுவீர், என்றுரைத்துத் — திண்ணியராய்.
பெண்ணுரிமை பேணிய பேரறிஞர் அண்ணாவால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

—ப.அ. இசுமாயில், மேலப்பாளையம்.

முப்பால் சிறப்பிக்கும் முத்தமிழ்ப் பெண்ணினம்
முப்பது வீதத்தால் சீருறும் — இப்புவி
தன்னிலே கன்னித் தமிழாட்சி வந்தால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-கு. கலியமூர்த்தி, மல்லசமுத்திரம்.

பாட்டிற் கொருபுலவன் பாரதியின் நற்கனவை
நாட்டில் நனவாக்கித் தான்மகிழ்ந்தான் — வாட்டமிலாய்!
பெண்ணலத்தை நாடும் பெருந்தகையாம் மு.க.வை
பெண்ணினம் பெற்றதே பேறு.

—சொக்கு. சுப்பிரமணியன், போளூர்.

தஞ்சைத் தரணி தருமுதல்வர் நம்கலைஞர்
கொஞ்சுமொழி நங்கையர்க்குக் கொள்கையொடு—வஞ்சியே!
மின்னும் பணிநூறில் முப்பது தந்ததனால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

—செ. வரதராசன். கள்ளக்குறிச்சி.

சாதிப் பெயராலே சங்கங்கள் கூட்டுவது
போதை புகையென்று பொல்லாத - பாதைகளில்
எந்நாளும் செல்லா இயல்புடைய இந்நாட்டுப்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-மு. கோபால், பழையூர்.

மண்ணில்நல் வண்ணமாய் வாழ்ந்திடும் வாழ்க்கையும்
எண்ணில்நல் செய்கையும் ஏற்றிட - நண்ணிடும்
கண்ணியம் அன்பு கனிவு நிறைந்திடப்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-கு. பொற்கொடி, பாண்டிச்சேரி.

கண்ணினும் மேலான காவலே செய்வதனால்
பெண்ணுலகு பெற்றதே பேரின்பம் - மண்ணுலகின்
தண்ணார் தமிழுலகில் தன்னிறைவு ஆட்சியினால்
பெண்ணினம் பெற்றதே பேறு.

-புலவர் வெ.சோமசுந்தரம், கிடாரிப்பட்டி.

## திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்

# வேளாண்மைப் பொறியியல் துறையின் வளர்ச்சிப் பணிகள்

வேளாண்மைப் பொறியியல் துறையினரால் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள், நில மேம்பாட்டுத்திட்டப் பணிகள், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டப் பணிகள், காற்றரிப்புத் தடுப்புத் திட்டப் பணிகள், எரிபொருள் தாவர வளர்ச்சிப் பணிகள், சிறுபாசனத் திட்டப் பணிகள், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கும் பணிகள் முதலானவை செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கடந்த 1988-89-ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 23.18 இலட்சம் செலவிடப்பட்டு உள்ளது. இதன் பயனாக சுமார் 250 எக்டேர் பரப்பு பயனடைந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், சம உயரக் கற்சுவர் அமைத்தல், மரங்கள் நடுதல், தடுப் பணைகள் அமைத்தல், குளங்கள் அமைத்தல் போன்ற பணிகள் செய்யப் பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டிலும் ரூபாய் 23 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படவிருக்கிறது.

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழும் சம உயர வரப்புகள் அமைத்தல், நிலத்தைச் சமன் செய்தல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், கோடை உழவு செய்தல், முதலான மண்வளப் பாதுகாப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த நிதி ஆண்டில் அதாவது 1988-89-இல் ரூபாய் 12.17 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டது. நடப்பு நிதி ஆண்டிலும் ரூபாய் 12.50 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் பயனடையும் அனைத்து விவசாயிகளுக்கும் 25 சதவிகித மானியமும், இந்து ஆதி திராவிடர்களுக்கு 50 சதவிகித மானியமும் வழங்கப்படுகிறது.

### எரிபொருள் தாவர வளர்ச்சித் திட்டம்

பாழ் நிலங்களில் மரங்களை வளர்த்து எரிபொருள் தேவையினைப் பூர்த்தி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் சங்கரன்-கோவில் வட்டத்தில் தேவர்குளம், முத்தம்மாள்புரம் ஆகிய இரு கிராமங்களில் 1988-89 முதல் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், ரூபாய் 52.30 இலட்சம் செலவில் 523 எக்டேர் நிலம் பயன்பெற இருக்கிறது. நான்கு ஆண்டுகளில் முடிக்கப்பட வேண்டிய இத்திட்டத்தின் கீழ் 1988-89 ஆண்டில் ரூபாய் 25.53 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூபாய் 25.00 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம்



1988-89 ஆம் ஆண்டில் ரூபாய் 18.31 இலட்சம் செலவில் 20 கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கப்பட்டு, ஒரு இலட்சத்து இரண்டாயிரம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன.

நடப்பு ஆண்டிலும் 20 கசிவு நீர்க் குட்டைகளை ரூபாய் 21.00 இலட்சம் செலவில் கட்டத் திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### நிலமேம்பாட்டுத் திட்டம்

நிலமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு நிலத்தினை மேம்படுத்த மண் தள்ளும் இயந்திரங்களும் மற்றும் உழுவைகள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு வாடகையில் 50 சதவிகித மான்யம் வழங்கப்படுகிறது.

நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த நிதி ஆண்டில், சமன் செய்யப் பட்ட 300 எக்டேர் நிலமும், உழவு செய்யப்பட்ட 400 எக்டேர் நிலமும் புதியதாகப் பயிர் செய்யத் தயார் செய்யப்பட்டது.

### சிறு பாசனத் திட்டம்

விவசாயிகளுக்குப் புதிய குழாய்க் கிணறுகள் அமைக்கவும், திறந்தவெளிக் கிணறுகள் ஆழப்படுத்தவும், விவசாயக் கருவிகள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1988-89 ஆம் ஆண்டில் புதியதாக 292 எக்டேர் நிலம் பாசனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் கிணறுகள் ஆழப்படுத்தப் பட்டதன் மூலமாக 173 எக்டேர் பரப்பிற்குப் பாசன வசதி நிரந்தரப்படுத்தப் பட்டுள்ளது.

### புதிய திட்டம்

நடப்பு 1989-90 ஆம் ஆண்டு முதல் தென்காசி, இராதாபுரம் ஆகிய வட்டங்களில் சுமார் 15,000 எக்டேர் நிலம் பயனடையும் விதமாக பாழ்நிலச் சீர்திருத்தத் திட்டம் ஒன்று டென்மார்க் நாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப் பட இருக்கிறது. 12 முதல் 15 வருடங்கள் வரை நீடிக்க இருக்கின்ற இத் திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக மூன்றரை ஆண்டுக் காலத்தில் ரூபாய் 500 கோடி செலவிடத் திட்டமிடப் பட்டு உள்ளது.



# பொதுப்பணித்துறையின் பங்கு

ஒவ்வொரு மாவட்டத்தின் வளர்ச்சிப் பாதையிலும் பொதுப் பணித்துறை மிக முக்கிய பங்கினை ஆற்றி வருகிறது. திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்டத்தின் தனிச்சிறப்பு தாமிரபரணி ஆறு இம்மாவட்டத்தில் உற்பத்தியாவது ஆகும். இவ்வாற்றின் இரு மருங்கும் பரந்து விரிந்து பசுமைப் புரட்சி செய்யும் நெல் விளையும் பூமி யின் காரணமாகத்தான் இம்மாவட்டத் திற்கு இப்பெயர் ஏற்பட்டது. இவ்வாற் றின் குறுக்கே நாடு விடுதலை அடையும் முன்பே பாபநாசம் நீர்த்தேக்கம் கட்டப் பட்டு, பாசன வசதி விரிவாக்கப் பட்டதுடன் மின் சக்தியும் உற்பத்தி யாகிறது. இதன்பின் 5 ஆண்டுத் திட் டங்களினால் மணிமுத்தாறு, இராமநதி, கடனா நதி, குண்டாறு, கருப்பா நதி ஆகிய நீர்த்தேக்கத் திட்டங்கள் தாமிர பரணி உபநதிகளில் கட்டப்பட்டு, பாசன வசதி பெருக்கப்பட்டுள்ளது. சித்தாறு பட்டணங்கால் திட்டத்தின் கீழ் இராதாபுரம் கால்வாய் உருவானது. இது தவிர சிறுபாசனத் திட்டங்களாகிய ஜம்புநதி அணைக்கட்டுத் திட்டம், சீவலப்பேரி குளம் தூர் வாருதல், பராக்கிரம பாண்டியன் குளத்திலிருந்து உபரி நீரைச் சீவலப்பேரிக் குளத்திற்குக் கொண்டு செல்லும் திட்டம் ஆகிய பணிகள் தொடங்ககப்பட்டு வேலைகள் முன்னேற்றத்திலுள்ளன.

தற்பொழுது தேசிய நீர்ப்பாசன மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தாமிர-பரணி மேம்பாட்டுத் திட்டம் ரூபாய் 977 இலட்சம் செலவில் துவங்கப்பட் டுள்ளது. இது தவிர நம்பியாற்றின் குறுக்கே ரூபாய் 1113 இலட்சம் செல வில் ஒரு நீர்த்தேக்கத் திட்டம் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இதனால் 1744 ஏக்கர் நிலம் பயன் அடையும்.

மேலும் ரூபாய் 1196 இலட்சம் செலவில் துவக்கப்பட்டுள்ள பொய்கை ஆறு நீர்த்தேக்கத் திட்டத்திலும் இம் மாவட்டத்தின் ஒரு பகுதியான இராதா புரம் வட்டாரம் பயன்பெறுகிறது.

கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம், பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு அரசின் ஆணையை எதிர்நோக்கித் துவக்கப் படும் நிலையில் உள்ளது. உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டம், வரட்டாறு நீர்த் தேக்கத் திட்டம் கோரையாறுநீர்த்தேக்கத் திட்டம், கடனா நீர்த்தேக்கத்தை நீட்டிப் பது, ஜம்புநதி நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் பல திட்டங்கள் ஆய்வில் உள்ளன. இத்திட்டங்களினால் இம் மாவட்டம் மேலும் வளர்ச்சி பெறும் என்பதில் ஐயமில்லை.

அண்மை ஆண்டுகளில் மத்திய நிதி உதவியுடன் நடந்து வரும் ஊரக நிலமற் றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத் தின் கீழ் இம்மாவட்டத்தில இத்துறை யின் மூலம் 13 சிறிய நீர்ப்பாசனப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ. 31.66 இலட்சம் செலவிடப்பட்டு 1,18,000 வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளோருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கு மலைத் தொடர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 8 சிறிய நீர்ப் பாசனப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு இதுகாறும் ரூபாய் 14.72 இலட் சம் செலவிடப்பட்டுள்ளது. இதனால் பாசன வசதி மேலும் வளர்ச்சி பெற் றுள்ளது.

இது மட்டுமின்றி அரசுக் கட்ட டங்கள் அனைத்தும் இத்துறையினரால் கட்டப்பட்டு வருகின்றன. பாளையங் கோட்டையிலுள்ள மருத்துவக் கல்லூரி, சித்தா மருத்துவக் கல்லூரி, பொறி யியல் கல்லூரி மற்றும் நீதிமன்றக் கட்ட டங்கள், மருத்துவ நிலையங்கள், குடி யிருப்புகள், காவல்துறைக் கட்ட டங்கள், ஆகியவையும் மிகச் சிறப்பாக இத்துறையினரால் கட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு நெல்லை மாவட்டத்தின் வளர்ச்சிப் பாதையில் பொதுப் பணித் துறை பீடு நடைபோடுகிறது.

தொகுப்பு:
**வை. புண்ணியமூர்த்தி,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்**

# அரும்பு

## முதல்வர் கலைஞர்



திருக்குவளைக் கிராமத்திற்கே இந்தக் கல்யாணம் மிக மிகப் புதிது''. பழமையிலே ஊறிப் போனவர்கள் ஏராளம் இங்கே. அறிவுப் பாதையிலே நடைபோட வேண்டுமென்ற ஆசை ஒரு பக்கம் இழுத்தாலும், இறந்த காலக் கொள்கைகளை விடாப்பிடியாகப் பிடித் துக்கொண்டிருப்பவர்கள் அதிகம் நிறைந்த அழகான சிற்றூர். அடிக்கடி ஒலித்துக் கொண்டிருக்கும் ஆலயத்து மணி-வான் முட்டும் கோபுரம் - எதிரே சிங்காரத்திருக்குளம் கரையிலே தென்னைகளும், திண்ணையுள்ள வீடுகளும், தென்றலுக்கு ஏற்றவகையில் தெற்கு நோக்கியமைந்த 'அக்கிரகாரம்'. இப்படியெல்லாம் கலை அழகோடு ஆரியக் களையும் சேர்ந்த திருமணத்தை நான் செய்து கொள்ளப்போகிறேன். நண்பா, சென்னையிலேயிருந்து இந்த ஊர் அதிக தூரம்தான்', ஆயினும் நாமிருவரும் மிக நெருங்கியவர்களாயிற்றே, எப்படியும் அலுவலகத்தில் 'லீவு' பெற்றுக்கொண்டு நீ வந்தே தீரவேண்டும் - இது அன்பின் ஆணை', என்று கடிதத்தை முடித்திருந்தான் ரத்தினம். கோகுலுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. நாலைந்து வருடங்களாக அவன் எந்தத் திருமண விழாக்களுக்கும் போனதே கிடையாது.

> ஜூன் 3 ஆம் நாள். தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஆகும். அதனையொட்டி பல்லாண்டுகளுக்கு முன்னர் கலைஞர் அவர்கள் எழுதிய சிறுகதையை வெளியிட்டுப் பெருமை கொள்கிறது 'தமிழரசு'

மகிழ்ச்சி பொங்கிடும் அந்த விழாக்களிலே, தான் போய் சோகத்தின் உருவமாக உட்கார்ந்திருக்க அவனுக்கு விருப்பமில்லை. திரும்ண இதழ்களைக் கண்டே 'திக்பிரமை' கண்டவன்போல் உட்கார்ந்திருக்கும் அவனுக்கு - திருமணத்தையும் நேரில் பார்த்துவிட்டால் எப்படியிருக்கும்? அவனுக்கு நடைபெற்ற திருமணம் - அப்போது முழங்கிய மேள ஒலி! மண மேடையில் இருந்தவாறே மனைவியிடம் காட்டிய குறும்பு; அவள் அதை ரசித்து மகிழ்ந்த மென்மை. தொடர்ந்து துவங்கிய இன்பபுரிப் பயணம். பின்னர் வந்த அன்புச்சின்னம்; தேனுக்கும் கற்கண்டுக்குமிடையே அவன், திடீரென வாழ்விலே வீசிவிட்ட புயல்; நீங்காத நித்திரைக்கு ஆளாகிவிட்ட அவன் துணைவி; அம்மாவை யிழந்த அருமை மகன்; இந்த நிகழ்ச்சிகளும், காட்சிகளும் அவன் மனக் கண்முன்னே படையெடுத்துவரும். அதற்காகவே திருமணங்களுக்குப் போகிற வேலையை நிறுத்திக் கொண்டான். இப்போதோ தட்ட முடியாத அழைப்பு வந்துவிட்டது. ரத்தினமும் அவனும் இணைபிரியாத நண்பர்கள். அவன் மணத்திற்குப் போகவில்லையென்றால் - கோகுலுக்கு அதை நினைக்கவும் இயலவில்லை. இரண்டொரு நாட்கள் குழப்பத்திற்குப் பிறகு, ரத்தினத்தின் கலியாணத்திற்குப் போவது என்று முடிவு செய்தான்.

ரத்தினத்தின் திருமணம் புதுமை முறையிலே நடைபெற்றது. அந்த வட்டாரத்திலேயே மிகப் புதிய கல்யாணம் என்று அவன் கோகுலுக்கு எழுதியிருந்தது உண்மைதான். ஊர் மக்கள் எல்லாம் - அழைப்பில்லாதவர்கள் கூட அந்த அதிசயக் கல்யாணத்தைப் பார்க்கக் கூடியிருந்தார்கள்.

புரோகிதர் - ஓமகுண்டம்-அம்மி-அரசாணி எதற்கும் வேலையில்லாமல் வந்திருப்போரின் அன்பை, சாட்சியாக வைத்து அறிவு முறையிலே திருமணம் நடைபெற்றது. கோகுல், மாப்பிள்ளைக் கோலத்திலே தன் நண்பனைக் கண்டான். அடக்கி வைத்திருந்த துக்கம் அணையுடைத்துக் கிளம்ப முயன்றது. சமாளித்துக் கொண்டான். நண்பனது வாழ்க்கை ஒப்பந்த விழா! அதிலே தான் இப்படி நடந்து கொள்வது சரியல்ல என்று அவனுக்குத் தெரியாமலில்லை! தலைவரின் முன்னுரைக்குப் பிறகு அனைவரின் வாழ்த்துரைகளோடு, மணமகனும், மணமகளும் மாலை சூட்டிக் கொண்டார்கள். கோகுலின் திருமணம் இப்படி நடக்கவில்லை.

அக்கினி அருந்ததி சாட்சியாக நடைபெற்றது. அந்தத் தெய்வீகத் திருமணத்தையும் - தன் மனைவியின் உயிரைப் பிடித்துக் கொள்ளத் திராணியற்ற அந்தத் தெய்வங்களையும் நினைத்துக் கொண்டான். அவனாகவே சிரித்துக் கொண்டான் திருமணம் முடிந்து, விருந்து முதலிய நிகழ்ச்சிகளும் நல்ல முறையில் நடந்தேறின. கோகுல் நண்பனிடம் விடை பெற்றுக் கொண்டு சென்னைக்குத் திரும்ப ஆயத்தமானான். விடையளித்து வழியனுப்பும்போது ரத்தினம் அவனைப் பார்த்து - 'கோகுல்' எத்தனை நாளைக்கு இப்படியே இருந்துவிட எண்ணுகிறாய். சென்றதை மறந்துவிட்டு, இன்னொரு திருமணத்தை ஏற்பாடு செய்! நீ என்ன இப்போது கிழவனாகவா ஆகிவிட்டாய்! என்று உபதேசம் செய்ய ஆரம்பித்தான்.

''கிழவனாகவும் ஆகிவிடவில்லை. கல்யாணம் இனி வேண்டாமென்னும் ஞானியாகவும் மாறிவிடவில்லை. ஆனால் .... குழந்தை குமார் இருக்கிறான் ... வரப்போகும் புதிய தாயார் அவனுக்கு ஒரு 'கிரகண' மாகிவிட்டால் என்னப்பா செய்வது? என்றபடி கண்ணீர் வடித்தான் கோகுல். நீண்ட நேரம் உரையாடலுக்குப் பிறகு எந்த முடிவுமில்லாமலே இருவரும் பிரிந்தனர்.

திருக்குவளைக்கு அருகே ஆறு மைலுக்கு அப்பால் அம்மனூர் சென்றால் புகைவண்டியில் செல்ல வசதியாயிருக்கும் என்று கூறி, கோகுலை ஒரு இரட்டைமாட்டு வண்டியிலேற்றி விட்டிருந்தான் ரத்தினம். ரயில் வருவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாகவே

ரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்தான் கோகுல். வந்த வண்டிக்காரனும் திரும்பிப் போய்விட்டான். அந்தச் சிறிய ரயிலடியில் பேச்சுத் துணைக்குக் கூட அவனுக்கு ஆள் கிடைக்கவில்லை. அங்குமிங்கும் உலாவிக்கொண்டே இருந்தான். தனிமையில் தோழனாக சிகரெட்டையாவது தேடுவோமென்று பக்கத்திலே விசாரித்தான். அதோ என்று கைகாட்டி விட்டுப் போனார்கள்.

இருட்டிலே மினுக் மினுக்கென்று வெளிச்சம் காட்டிக் கொண்டிருக்கும் அந்தச் சிறிய கடையை நோக்கி அவன் போனான். கடையிருந்தது. ஆனால் வியாபாரம் செய்யும் ஆள் யாரையுங் காணோம். ஒரு சிறிய வீட்டுத் திண்ணையிலே அந்தக் கடையிருந்த காரணத்தால் கடைக்காரர் உள்ளேயிருப்பார் என்று நினைத்து ''யார் கடையிலே'' என்று கூப்பிட்டுப் பார்த்தான்.

''யாரது... என்ன வேணும்? என்று கேட்டபடி ஒரு அழகான யுவதி வெளியே வந்தாள். மங்கலான வெளிச்சத்திலும் அவள் முகத்தை அவனால் பார்க்க முடிந்தது. அப்படிப் பார்ப்பது முறையல்ல என்ற திடீர் உபதேசம் அவன் உள்ளத்திலே கிளம்பவே, ''சிகரெட் வேணும்'' என்று தயங்கிய குரலில் கேட்டான். அவள் சிகரெட்டைத் தேட ஆரம்பித்தாள்.

தேடுவதற்காக அவள் எடுத்துக் கொண்ட முயற்சியின்போது, அவளின் தேகத்திலே ஏற்பட்ட லாகவமான வளைவுகளை அவனால் பார்க்காமல் இருக்க முடியவில்லை. பட்டணத்துப் பெண்கள் நட்டுவனார் வைத்துப் பாடம் கேட்டும் கற்றுக் கொள்ளாத அபிநய அசைவுகளை அவள் இயற்கையாகவே பெற்றிருந்தாள். அதைக் காணும் கோகுலுக்கு அதிசயமாகவே இருந்தது. மங்கை, சிகரெட்டைத் தேடி எடுத்தாகவில்லை. அதற்குள் உள்ளே பயங்கரமான இருமல் சத்தம் கேட்டது. அவள் சிறிது தயங்கி உள்ளே திரும்பினாள். மீண்டும் இருமல் பலமாகக் கேட்டது. சிகரெட்டைத் தேட அவளால் இயலவில்லை. கோகுலைப் பார்த்து ''தயவு செய்து நீங்களே சிகரெட்டைத் தேடி எடுத்துக்கொண்டு, காசைப் பெட்டியிலே போட்டுவிடுங்கள்'' என்று கூறிவிட்டு அவன் பதிலுக்கும் காத்திராமல் உள்ளே ஓடிவிட்டாள். கோகுல் ஆச்சரியத்தால் மரம் போல் நின்றுவிட்டான். மேல்நாடுகளிலே இதுபோன்ற முறையைக் கேள்விப்பட்டிருக்கிறான் அவன். தினசரி பத்திரிகையும் ஒரு காசுக் கிண்ணமும் சாலையோரத்திலே வைக்கப்பட்டிருக்குமாம். தேவையானவர்கள் காசைப் போட்டுவிட்டு பத்திரிகை எடுத்துப் போவார்கள். இங்கே நம் நாட்டில், பூட்டப்பட்டுப் புதைக்கப்பட்ட சாமி உண்டியல்களையே பெயர்க்காமல் இருந்தால் போதாதா? பட்டணவாசிகளும் கற்றுக்கொள்ளாத நாகரிகத்தை இந்தப் பட்டிக்காட்டு மங்கை எப்படித்தான் ஆசிரியரின்றிக் கற்றுக்கொண்டாளோ தெரியவில்லை என்று சிந்தித்தபடி நின்றான் கோகுல். கையிலிருந்த ஒரு ரூபாய் நாணயத்தை பெட்டியிலே போட்டுவிட்டு, ஒரு ஒடிந்து போன சிகரெட்டைத் தேடி எடுத்து அதை அந்தச் சிறு விளக்கிலே பற்ற வைத்தபடி திரும்பினான் ரயிலடி நோக்கி! அவன் ஒரு அடிகூட எடுத்து வைத்திருக்க மாட்டான். அதற்குள் அந்தக் குடிசைக்குள்ளிருந்து 'அய்யோ அப்பா' 'அப்பா' என்று சப்தம் வந்தது. சப்தம் போட்டது அவளாகத்தானிருக்க வேண்டும். அவள் குரல்தான் அது! கோகுல் தன்னை மறந்தவனாய் உள்ளே ஓடினான்.

வயூதான கிழவர் படுக்கையிலே பிரக்ஞையற்றுக் கிடக்கிறார். அவர் மார்பிலே தலையைச் சாய்த்துக்கொண்டு அந்தப் பெண் அலறுகிறாள். ''ஓகோ செத்துவிட்டார் போலும்'' என நினைத்துக் கோகுல் அருகே போனான். அவளோ, ''அய்யோ அப்பா! அப்பா என அலறிக் கொண்டேயிருந்தாள். கோகுல் கிழவரின் முகத்திலே கையை வைத்துப் பார்த்தான். அவர் சாகவில்லை என்பதைப் புரிந்துகொண்டான். உடனே அவளைப் பார்த்து, பயப்படாதே யம்மா! உன் அப்பா சாகவில்லை, மயக்கம் தான்'' என்று ஆறுதல் கூறினான். அவளுக்குச் சிறிது நம்பிக்கை ஏற்பட்டது. தந்தையைத் தொட்டுப் பார்த்தாள். அவன் கூறியது உண்மைதான்.

"அய்யா, கொஞ்ச நேரம் அப்பாவைப் பார்த்துக்கொள்ளுங்கள். நான் ஒரே ஓட்டமாக ஓடி, வைத்தியரை அழைத்து வந்து விடுகிறேன்,'' என்று கெஞ்சினாள் அவள். கோகுல், முடியாது என்று சொல்லமுடியுமா? மிகமிக



நெருக்கடியான சூழ்நிலை! ரயில் நிலையத்திலே ரயில் வரப்போகிறது என அறிவிக்கும் மணி ஒலிப்பது அவன் காதிலே விழுந்தது. இருந்தாலும் அவளுடைய வேண்டுகோளை அவனால் மறுக்க முடியவில்லை. சரியென்று தலையசைத்தான். அவள் ஓடினாள், சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் வைத்தியருடன் ஓடிவந்தாள். வைத்தியர் கிழவருக்கு ஏதேதோ சிகிச்சைகள் செய்து, மயக்கத்தைத் தெளிவித்தார். கிழவரும் மெதுவாகக் கண் விழித்து, ''கோமதி'' என அழைத்தார். அவளும் அப்பா எனத் தாவினாள் கிழவரின் படுக்கையிடம். கோகுலின் உதடுகள் அந்தப் பெயரை உச்சரித்துப் பார்த்துக் கொண்டன. வைத்தியர் போய்விட்டார். கோமதி நன்றி யொழுகும் கண்களால் கோகுலைப் பார்த்தாள். கோகுல் அந்த ஏழைக் குடும்பத்தின் இளஞ்சிட்டை இருதய பூர்வமாக வாழ்த்திவிட்டு, ''நான் வருகிறேனம்மா' என்றான். படுக்கையிலிருந்த தந்தை, ''யார் கோமதி, அது?'' என்று ஈனசுரத்தில் கேட்டார், ''யாரோ வழிப்போக்கர் அப்பா! ரொம்ப நல்லவர், நான் வைத்தியரை அழைத்து வரும்வரையில் அவர்தான் உங்களுக்குக் காவல் இருந்தார் என்று கூறிக் கொண்டே, கோமதி, கோகுலுக்கு மீண்டும் பார்வையினால் நன்றி செலுத்தினாள். விசாரித்துவிட்ட பிறகு கிழவரிடம் பேசாமல் போகக்கூடாதே யென்ற நிலையில் கோகுல் அவரிடம், 'என்ன பெரியவரே' எப்படியிருக்கிறது உடம்பு?'' என்று கேட்டான். எப்படியிருக்கு? இப்பவா கொஞ்ச நாளியான்னுதான் இருக்கு''.

''பயப்படாதீங்க; சரியாய்ப்போய் விடும். ரயிலுக்கு நேரமாவுது, நான் வர்ரேன்''

இதைக்கூறிவிட்டு, கோமதியையும் பார்த்தபடி அவன் வெளியே வந்தான். ரயிலை எப்படியும் பிடித்து விட வேண்டுமென்று, ரயில் நிலையத்தை அங்கிருந்தபடியே நோக்கினான். அப்போதுதான் ரயில் நிலையத்தைவிட்டுப்

புறப்பட்டுக் கொண்டிருந்தது. இனி ரயிலைப் பிடிக்க முடியாது என்ற ஏமாற்றத்தோடு திகைத்து நின்றான். கடையோரத்தில் அவள் நின்று கொண்டு, "எங்களால் தான் உங்களுக்கு இப்படி யாகிவிட்டது" என்று அனுதாபம் தெரிவித்தாள். கோகுலுக்கு, ரயில் தவறியதுகூட மறந்துவிட்டது. அந்த அனுதாபச் சொற்கள் அவன் இருதயத்தை ஊடுருவிப் பாய்ந்தன.

"பரவாயில்லை, அதனால் என்ன... வருகிறேன்" என்று கூறிவிட்டு, பதிலை எதிர்பார்த்தான்.

"ஏன், இங்கு திண்ணையிலேயே படுங்களேன். காலையிலேதானே ரயில்' என்றாள் அவள்.

"காலை ரயிலில் போயும் பிரயோசனமில்லை. மாயவரத்திலே மதறாஸ் மெயிலைப் பிடிக்கவேண்டுமானால் - நாளை இரவு ரயிலில்தான் போயாக வேண்டும். காலையில் போனால் எங்காவது காத்திருக்க வேண்டியதுதான்" என்றபடி கோகுல் திண்ணையில் வந்து உட்கார்ந்தான்.

உள்ளேயிருந்து இருமல் ஒலி கேட்கவே, கோமதி ஓடினாள். கோகுலும் பின்னால் சென்று கவனித்தான். கிழவர், கோகுலைப் பார்த்து, "நீ போகவில்லையா தம்பி?" என்று பரிவோடு கேட்டார். "அவருக்கு நம் மாலே ரயில் தவறிவிட்டதப்பா! இனி மேல் நாளை ரயில்தான், பாவம்" என்றாள் கோமதி. "அப்படியா? அய்யோ பாவம்" என்று அருகே உட்காரச்சொன்னார் அவனை.

கோகுலுக்குத் தூக்கம் வரவில்லை. கிழவர் இருமிக் கொண்டே, இவனைப் பற்றிய விபரங்களை அறிந்து கொண்டார். கோமதியை நினைத்தால்தான் தனக்குப் பயமாக இருக்கிறதென்றும், ஓநாய்களுக்கிடையே மான்குட்டியை வைத்துக் காப்பாற்றுவதுபோல அவளைக் காப்பாற்ற வேண்டியதிருக்கிறதென்றும் சொல்லி அழுதார். "தாயை இழந்த கோமதியை இத்தனை நாள் பாதுகாப்பாக வளர்த்துவிட்டேன். அவளை ஒரு நல்ல பையன் கையிலே பிடித்துக் கொடுக்காமல் போறேனே; அதுதான் எனக்குக் கவலை" என்று கண்ணீர் வடித்தார்.

வெகுநேரத்திற்குப் பிறகு கோகுல் திண்ணையிலே போய்ப் படுத்துக் கொண்டான். தூக்கமே வரவில்லை அவனுக்கு! ஏதேதோ எண்ணச் சுழற்சிகள்! குழந்தை குமார்-கோமதி இருவரும் அவன் கண் முன்னே மாறி மாறி வரவேண்டிய காரணம் என்ன? விடியற்காலையில் தான் தூக்கம் அவன் கண்களைத் தழுவ ஆரம்பித்தது. ஆனால் திடீரென்று கேட்ட கோமதியின் அலறல் அவனைத் திடுக்கிட்டு எழச் செய்தது. கதவைத் தட்டினான். கதவைத் திறந்துவிட்டு, "அப்பா, அப்பா," எனக் கதறினாள். கோகுல் கிழவரிடம் ஓடிப் பார்த்தான். உடல் ஜில்லிட்டுப் போயிற்று. கிழவர் போய் விட்டார். எதிர்பாராத ஒரு சுமை, கோகுலுக்கு! நல்லவேளை ரயில் மாலையில் தானே! கிழவரை அடக்கம் செய்யவேண்டிய காரியங்களைக் கவனித்தான். அவனது பேருதவியுடன் கோமதியின் தந்தை அடக்கம் செய்யப் பட்டார். ஊர் மக்கள் சிலர் வந்து கோமதிக்குநேராக ஒப்பாரி வைத்து விட்டுப் போய்விட்டனர். தந்தையின் பிரிவால் கோமதி, தணற் புழுவாகத் துடித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு இருந்த ஒரே துணை - அதுவும் போய் விட்டது.

இரவு வந்தது! திண்ணையிலேயே பொழுதெல்லாம் உட்கார்ந்திருந்த கோகுல் எழுந்து உள்ளே வந்தான். கோமதி அழுதுகொண்டிருப்பதைப் பார்த்தான். "கோமதி" என்றான் குரல் கம்மிய நிலையில்!

அப்போதுதான் அவளுக்குக் கோகுலைப் பற்றிய நினைவு வந்தது. "அய்யோ, யாரோ ஒரு பரோபகாரி, இவ்வளவு உதவி செய்திருக்கிறார். அவருக்கு ஒருவேளை சாப்பாடு கூடப் போடவில்லை! சாப்பிடுகிறீர்களா என்று கேட்கவில்லையே என அவள் மனச்சாட்சி பேசிற்று. எழுந்து நின்றாள், கண்ணீர் வடித்தபடி! "நான் வரட்டுமா கோமதி?" கோகுல் முடிக்கவில்லை; அதற்குள் அவன் கால்களிலே விழுந்துவிட்டாள் அவள்.

"இன்னும் இரண்டு நாளைக்கு இருங்கள் - எனக்கு சிறு ஆறுதலாகவாவது இருக்கும்".

கோகுல் மௌனமாகிவிட்டான். அசைவற்றுப் போனான். திருக்குவளை நண்பன் ரத்தினம் நூறு தடவை சொன்னான். இரண்டு நாள் இருந்துவிட்டுப் போ என்று! அதைக் கேட்கவில்லை; மறுத்துவிட்டான். இப்போது அசைவற்று நிற்கிறான். அவன் யார்? எங்கிருந்து வந்தான்! கொதிக்கும் நெருப்புக் குண்டத்தின் ஓரத்திலே தூக்கி எறியப்பட்டான் அவன்... அதே நெருப்புச் ஜுவாலைக்கருகில், கருகிக் கொண்டிருக்கும் மலராகக் கோமதி இருந்தாள். சந்தர்ப்பம் - இப்படி ஒரு சூழ்நிலையைப் படைப்பித்து கைதட்டி ஆரவாரம் செய்தது, அவன் கண் எதிரே குமார் வந்து வந்து போனான்.

"ஏன் பேசாமலிருக்கிறீர்கள்... நீங்கள் நேற்று இரவு முதல் செய்த உதவிகள் பெரிதல்ல. அனாதையாகப் போய்விட்ட எனக்கு... எனக்கு... எனக்கு..."

கோமதி விக்கி விக்கி அழுதாளே தவிர பேச்சை முடிக்கவில்லை. சாகப் போகும் நேரத்தில் தன் அருமை மகளைப்பற்றி அந்தக் கிழவர் கூறிய வார்த்தைகள் அவன் நெஞ்சைக் குடைந்து கொண்டேயிருந்தன.



"அழாதே கோமதி' நான் இரண்டு நாட்கள் இருக்கிறேன்," என்று அவளைத் தூக்கி நிறுத்தினான். வழிந்து கொண்டேயிருந்த கண்ணீரைத் துடைத்தான். அப்போது அவன் கைகள் நடுங்கின. கண் எதிரே குமார் வந்து நின்று, "அப்பா, என்று கூப்பிடுவது போல் இருந்தது.

சென்னையிலே கோகுல் வீட்டு மெத்தையிலே குமார் தூங்கிக் கொண்டிருக்கிறான்...

கனவு! குழந்தையின் கனவு எதுவாக இருக்கும்? எந்த அப்பாவியை அடித்து, யாரை மோசம் செய்து, லட்சாதிபதியாகலாம் என்று கனவு காணப் போகிறதா? அல்லது பதவி தேடுவதற்காக எப்படி யெப்படிக் கொள்கைகளைக் காற்றிலே பறக்க விடலாம், யார் யாரைக் 'காக்கா' பிடிக்கலாம், என்று கனவு காணப் போகிறதா? குழந்தையின் கனவுகள் முள்ளிலேயிருக்கும் ரோஜாவைப் பறிப்பது போலிருக்குமே தவிர, தேன் பூச்சிகளை அழித்துவிட்டு, தேனடையை எடுத்துக் கசக்கிப் பிழிவதைப் போலிருக்காது.

அதுவும் தாயை இழந்த ஒரு குழந்தையின் கனவு எப்படியிருக்கும்? மிக மிக மென்மையான கனவு! ரோஜாக்களைப் பறிப்பதுபோலக்கூட இல்லாமல் ரோஜா மலரே குழந்தையின்



கன்னத்தில் வந்து விழுந்துவிடுவது போன்ற கனவு ! ஆம் குமாரின் தாயார் அவனைத் தூக்கி முத்தமிட்டு மார் போடணைத்துக் கொஞ்சுகிறாள்... 'ஆரோரோ' பாடுகிறாள், அவனோ தூங்க மறுக்கிறான்... காலை நேரம், தலைவாரி உடையலங்காரம் செய்து அவனைப் பள்ளிக்கூடம் அனுப்பு கிறாள். அவன் போகும்போது பின் னழகைப் பார்த்தபடி வாயிற்படியிலே நிற்கிறாள்... பள்ளியிலிருந்து திரும்பி வருகிறான் ... எதிர்கொண்டழைத்து உச்சி முகந்து முத்தமிட்டு விளையாட அழைத்துச் செல்கிறாள்.

குமார் விழித்துக்கொள்ளுகிறான். கனவு ! தாயாரைக் காணவில்லை. ரோஜா மறைந்து விட்டது. படுக்கை முழுவதும் முள்ளாகக் குத்துகிறது பிஞ்சு மனம் ! அரும்பு உள்ளம் ! 'அம்மா 'அம்மா' என அலறுகிறது.

சுவரிலே தாயின் படம்! ஆம்! பட மாகிவிட்டாள் அவன் தாயார். அந்தப் படத்தை எடுத்து மார்போடு அணைத் துக் கொள்ளுகிறான். கண்ணீர்! பசுந்தரையிலிருந்து ஊற்றெடுத்துக் கிளம்பி வரும் அருவி! படத்தை அணைத்தபடி படுக்கையில் சாய் கிறான். மறுபடியும் அம்மா கனவிலே வரமாட்டாளா என்ற ஆசையோடு கண்ணை மூடிக் கொள்ளுகிறான். தூங்கி விடுகிறான். விடிந்து விடுகிறது. வேலைக்காரனும் வேலைக்காரியும் இந் தக் காட்சியைப் பார்த்துவிட்டார்கள். பிள்ளை, அம்மாவை நினைத்து நினைத்து ஏங்கி விடும் போலிருக்கிறதே யென்று தூங்கும் அரும்பின் கையிலிருந்த அம்மா படத்தை மெதுவாக எடுத்து ஒளித்துவிட்டார்கள். குமார் எழுந் தான். கையிலேயிருந்த அம்மா எங்கே? விழித்தான் ! யார் தூக்கிக் கொண்டு போயிருப்பார்கள்? ஒருவேளை கனவு உலகத்திலே போட்டுவிட்டு வந்து விட் டோமா? இப்படி நினைத்தான் ! பர வாயில்லை - இன்றிரவு, கனவு லோகத் துக்குப் போகும்போது எடுத்துக் கொள்ளலாம்-இப்படி ஆறுதல் அந்தக் குழந்தைக்கு'.

அம்மனூரில் இரண்டொரு நாட்கள் கழிந்து விட்டன, கோகுலுக்கு! கோமதியும் தந்தையின் பிரிவை கோகு லின் உறவால் ஒருவாறு ஆற்றிக் கொண்டாள். எதையோ எண்ணி ஏங் கியவாறு கடையிலே அமர்ந்து வியா பாரத்தைக் கவனிக்கும் கோமதியின் முகத்திலே அவன் கற்பனை செய்ய முடியாத அழகையும், அந்த அழகிலே மறைந்து கிடக்கும் அமைதியையும், அந்த அமைதியோடு குழைந்து நிற்கும் அன்பையும் அவன் ரசித்துக் கொண்டே யிருந்தான். கடைக்குத் தின்பண்டங்கள் வாங்க வருகிற குழந்தைகளுக்கு அவள் காட்டுகிற அன்பை அவன் உன்னிப் பாகக் கவனித்தான். வரண்ட தலை யோடு வரும் குழந்தைகளுக்கு எண் ணெய் தடவி சீவி விடுவாள்; நன் றாகப் படிக்க வேண்டுமென்று உப தேசம் செய்து அனுப்புவாள். இதெல் லாம் கோமதியின் பால் கோகுலுக்குப் புதிய அபிப்ராயத்தை வளர்த்தது. அதோடு கோமதி தனியாக இருந்தால், அந்த ஊரில் திரிகிற ரௌடிக் கும்பல் அவளைச் சும்மா விடாது என்பதையும் புரிந்து கொண்டான்.

வாலிபன்! அதனால்! காதல் பொங்குகிறது.

தகப்பன்! அதனால்! குழந்தை குமார் எதிரே நிற்கிறான்.

நல்ல மனிதன்! அதனால்! ஓர் அபலையைக் காப்பாற்ற வேண்டு மென்ற கடமை யுணர்ச்சி எழுகிறது.

கடைசியில் கடமை யுணர்ச்சியின் பெயரால் காதல் வென்றுவிடுகிறது. அவனுக்கு ஒரே நம்பிக்கை, குமாரின் தராசு சாய்ந்துவிடாது என்பதுதான். காதலின் வெற்றிக்கு அந்த நம்பிக்கை யும் ஒரு காரணமே. கடைக்கு வரும் குழந்தைகளிடம் கோமதி காட்டிய பாசம் குமாரைப் பற்றிய பயத் திரையை கோகுலுக்கு விலக்கிவிட்டது.

கிழவர் செத்துவிட்ட துக்கம் விசா ரிக்க, அயலூரிலிருந்து ஒரு பாட்டி வந்திருந்தாள். கோமதிக்கு அவள் தூரத்து உறவு. அவள் கேட்டாள் ''இந்தப் பிள்ளையாண்டான் யார்?'' என்று கோகுலைக்காட்டி.'

தூரத்து உறவு பாட்டி! அண்ணன் முறை' என்று சொல்லிவிடலாமோ என எண்ணினாள் கோமதி ! ஏனோ அப்படிச் சொல்ல அவள் மனம் இடந் தரவில்லை.

''பட்டணத்திலிருந்து வந்திருக்கிறார். எங்க அத்தை மகன்'' என்று கோமதி, பாட்டியிடம் சொல்லியதை திண்ணை யிலிருந்தபடியே கோகுல் கேட்டு, தனக் குத்தானே மகிழ்ந்து கொண்டான். பாட்டி ஊருக்குப் போய்விட்டாள். ''அத்தை மகன்''- கோகுலுக்கு அந்த வார்த்தைகள் எத்தனையோ இன்பக் கதைகளைச் சொல்லத் துவங்கின. கோமதியும் கோகுலும் சேர்ந்து சென் னைக்குப் புறப்படுகிற வரையிலே அந் தக் கதைகள் நீண்டன. கோகுல், அவ ளுக்கு அத்தைமகனாகவே ஆகிவிடத் தீர்மானித்து விட்டான். தனியாக வந்த கோகுல் கோமதியுடன் சென்னைப் பயணத்தைத் துவங்கினான். இருவரின் வாழ்க்கைப் பயணமும் ஆரம்பமாயிற்று.

இருவரும் வண்டியிலிருந்து இறங்கு வதை வேலைக்காரனும் வேலைக்காரி யும் பார்த்துவிட்டு, ஒருவர் முகத்தை ஒருவர் வியந்து நோக்கிக் கொண் டனர். கோமதியை அவர்களுக்கு அறி முகம் செய்து வைத்தான் கோகுல். அவர்களுக்கு உள்ளூர மகிழ்ச்சிதான். ''குமார், எங்கே?'' என்று கேட்டபடி கோகுல் உள்ளே நுழைந்தான். ''இப்ப தான் பள்ளிக்கூடம் போச்சு'' என்றாள் வேலைக்காரி... சுவரிலே மாட்டப்பட் டிருக்கும் தன் மூத்த மனைவியின் படத்தை அண்ணாந்து பார்த்தான், கோகுல். அங்கே படமில்லை. தூக்கி வாரிப்போட்டது அவனுக்கு.

''படம் என்ன ஆயிற்று?''

வேலைக்காரன் சொன்னான், ''குழந்தை படத்தைப் பார்த்து அழுவது அதிகமாயிடுச்சுங்க. அதனால் அதை மறைச்சு விட்டேங்க'' என்று.

கோகுலின் கண்களில் நீர் ததும் பிற்று'. ''என்ன படம்'' என்று கேட் டாள் கோமதி. ''உங்க அக்கா படம்'' என்றான் அவன். வேலைக்காரனிடம் கேட்டு அந்தப் படத்தை வாங்கிப் பார்த்தாள் கோமதி. அவள் கண்களும் கலங்கின. ''பூவோடும் பொட்டோடும், மஞ்சளோடும், மாங்கல்யத்தோடும், போய்ட்டாங்க எங்க அம்மணி' என்று அழுதாள் வேலைக்காரி.

''நீங்க வந்திருக்கீங்க தாயே' நீங் களும் மகாலட்சுமி மாதிரி இருக்கீங்க... எங்க சின்ன எசமானை... அய்யா வோட செல்லக்குழந்தையை எங்க அம்

மணியோட வயிற்றில் வந்த வைரத்தை... ஒரு குறையும் இல்லாம காப்பாத்துங்க அம்மா?'' என்று கோகுல் கூறவேண்டியதை வேலைக்காரனே கூறிமுடித்தான். கோமதியிடம் விடைபெற்றுக்கொண்டு, கோகுல், பத்திரிகை அலுவலகத்திற்கு புறப்பட்டான்.

அன்றைய தினம் ஆசிரியர் கோகுல் எழுதிய கட்டுரைகள் அத்தனையும் சுவை மிகுந்தவை! தலையங்கம் புது முறுக்கோடு காணப்பட்டது! நண்பர்கள் காரணம் விசாரிக்க ஆரம்பித்தனர். காரணத்தைக் கேட்டு அனைவருமே மகிழ்ந்தனர். ஆசிரியர் அறைக்கு ஏறிச் செல்ல வேண்டிய ஐம்பது மாடிப்படிகளையும் அன்றைய தினம் அனாயசமாகக் கடந்தான். வாழ்க்கையின் முதல் படியிலே வழுக்கி விழுந்து, விழுந்த இடத்திலே 'குமார்' என்னும் கோமேதகக் கல்லை எடுத்தபிறகு, இத்தனை நாள் கழித்து, இப்போதுதானே, அடுத்த படியில் கால் வைக்கத் துணிந்திருக்கின்றான். முதல்தாரத்துக்குக் குழந்தை இருக்கும்போது, இரண்டாந்தாரமாக ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொள்வது சரியா தவறா என்ற கேள்வியைத் தன் நண்பர்களிடமெல்லாம் கேட்டான். அவரவர்களின் அனுபவங்களை எல்லாம் பொறுக்கிச் சேர்த்தான். அவனுக்குச் சாதகமான பதிலும், கிடைத்தது; பாதகமான பதிலும் கிடைத்தது.

பள்ளிக்கூடத்திலே குழந்தை குமார் ஒரு மூலையிலே உட்கார்ந்துகொண்டு எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தான். எதைச் சிந்திக்கப் போகிறான்; அவன் தகப்பனைப் போல அகில உலக யுத்தத்தைப் பற்றி, என்ன தலையங்கம் எழுதலாமென்றா? அவன் சிந்தனை முழுதும் தாயாரைப் பற்றியது தான்'

விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்கள் அவனைப் பார்த்துக் கேலி புரிந்தனர்.

''பாருடா, கௌதம புத்தர்-சிந்தனையில் ஈடுபட்டிருக்கிறார்'' என்று அன்றைக்குப் படித்த பாடத்தை ஒப்புவித்தான் ஒரு குறும்புக்கார சிறுவன்.

கௌதம புத்தர் என்றாலே, என்னவென்று தெரியாத பிஞ்சு, குமார். அவன் படிக்கும் வகுப்பே வேறு.'

பள்ளி முடிந்து, பசலைகள் அனைவரும் கூட்டம் கூட்டமாக கும்மாளம் அடித்தபடி வீடு நோக்கி ஓடுகிறார்கள். குமார் மட்டும் தன்னந்தனியாக வந்து கொண்டிருக்கிறான். வீட்டுக்குத் திரும்பும் குழந்தைகளை அவர்களது தாய்கள் வாயிலில் நின்று எதிர் கொண்டழைத்துத் தூக்கி முத்தமிடுகிறார்கள். குமார் அவைகளைக் கவனிக்கிறான். அந்த அரும்பின் நடையிலே ஒரு தளர்ச்சி! கண்களிலே கலக்கம்! இருதயத்திலே புயல்! தாங்குமா அந்த இளந்தங்கம் அந்தக் கொடு நெருப்பை! உருகி ஓடிற்று. ''தனக்கு ஒரு அம்மா இருந்தால் தன்னையும் இப்படித் தூக்கி முத்தமிட்டு எதிர்கொண்டு அழைப்பார்களே.'

இப்படித்தான் விம்மியதுபோலும், அந்தப் பிறைநிலவு.'

எல்லாப் பிள்ளைகளும் அவரவர்கள் வீட்டுக்குப் போய் விட்டார்கள். குமார் மட்டும் வீடு நோக்கி வந்து கொண்டிருக்கிறான். அதோ, அவன் வீடு! வீட்டு வாயிலிலே யார் அந்தப் புது உருவம்? ஒருவேளை; அம்மாவா?.. வாயிற்படியிலே அடியெடுத்து வைத்த அவனை வாரியெடுத்துத் தூக்கினாள் கோமதி. எதிர்பாராத ஒரு உணர்ச்சி குமாரின் உள்ளத்தை உலுக்கிவிட்டது போலும்? அவன் கண்கள் தாரை தாரையாக நீரைப் பொழிந்தன. கோமதிக்கு நடுக்கம் பிறந்தது. தன்னைக் குமார் ஏற்றுக் கொள்ளவில்லை யெனக் கருதினாள். அவள் உள்ளம் போர்களமாயிற்று' அரும்பு பொதிய விழாச்செடி இந்தக் குடும்பம்' அதன் வேரிலே ஊற்றப்படும் வெந்நீராகத்தான் ஆகிவிட்டோமா எனப் பயந்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் குமாரின் உடல் கொதிக்க ஆரம்பித்தது. கோமதி அழுதே விட்டாள். அலுவலகத்திலிருந்து குழந்தைக்குத் தின்பண்டங்கள் வாங்கி வந்த கோகுல், இந்தக் காட்சியைப் பார்த்துக் கலங்கினான். ''அம்மா, பாருடா கண்ணா'' என்று கோமதியைக் காட்டினான்.

''எனக்குப் பொய் அம்மா வேணாம்'' நிஜ அம்மாதான் வேணும்' என்று புலம்பினான் குமார். அந்த வார்த்தைகள் வெடிமருந்துச் சாலையில் கிளம்பும் தீப்பொறிகள் போல இருந்தன கோமதிக்கு. குமாரின் காய்ச்சல் அதிகமாயிற்று. கோமதிக்கு குழந்தையுடன் இணைபிரியாதிருக்க ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்த சந்தர்ப்பம் குழந்தைக்கும் அவளுக்கும் தணியாத பாசத்தைத் தோற்றுவிக்க உதவிற்று. ஆபத்து நேரங்களில்தான் நட்பு, காதல், பாசம் இவைகளின் 'மீட்டரே' அதிகமாகிறது-ஏன், சில இடங்களில் ஆரம்பமாகிறது என்றுகூடச் சொல்லலாம்-அதற்கு உதாரணந்தானே, கோகுல், கோமதி இருவரின் காதல்'. குமார் சிறிது சிறிதாக உடல் நலம் பெற்றான். அவன் உடல் நலம் பெற்று எழும்போது கோமதியை 'அம்மா' என்று வாயார அழைக்கும் புதிய குமாராக இருந்தான். கோமதிக்குக் கொண்டாட்டம் தாங்கவில்லை. கோகுல்கூட சலித்துக் கொள்கிற அளவுக்கு அவள் குழந்தையைப் பராமரிக்க ஆரம்பித்துவிட்டாள். குமாருக்கு ஒரு அம்மா கிடைத்து விட்டாள், பள்ளிக்கூடம் அனுப்ப பள்ளிக்கூடத்திலிருந்து எதிர்கொண்டழைக்க, ஒரு அருமையான அம்மா கிடைத்துவிட்டாள். இப்போது குமார் பள்ளிக்கூடத்தில் பால புத்தரைப் போல் உட்கார்ந்திருப்பதில்லை-வீர நெப்போலியனைப் போல்விஷமங்கள் செய்கிறான்.

வீடு திரும்பும்போது, சிறுவர்களை அவர்கள் தாயார் உபசரித்து வரவேற்பதை இப்போதெல்லாம் குமார் வெகு அலட்சியத்தோடு பார்த்துவிட்டு, கம்பீரமாக நடக்கிறான்.

முன்பெல்லாம் குமார் ஒரு இலை; ஒரு மொட்டு-இப்போது இரு இலை; ஒரு மொட்டாக ஆகிவிட்டான்.

இரவுவெகுநேரம் வரையில் கோமதியின் வருகைக்காக கோகுல் விழித்திருக்க வேண்டியிருந்தது, படுக்கையறையில்! காரணம் குமாரையும் கதை சொல்லி பாட்டுப்பாடி தூங்க வைத்துவிட்டுத்தான் அவள் கோகுலிடம் வருவாள்-கோகுலுக்கு அதில் கொஞ்சம் வருத்தங்கூட! ஆனாலும் வீட்டிலே குமாருடன் விளையாடுவதற்கு ஒரு பாப்பா வரப்போவதாக வேலைக்காரனும் வேலைக்காரியும் குமாரிடம் அடிக்கடி அறிவித்து வந்தார்கள்.

அந்தப்பாப்பா எங்கிருந்துவரும்? எப்படி வரும்? அது எப்படியிருக்கும்? என்கிற ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அதன் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தான் குமார்.



ஒருநாள், கோகுல் அலுவலகத்திற்கு லீவு போட்டுவிட்டு வீட்டிலேயே தங்கிவிட்டான். கோமதிக்கு அன்று பிரசவ வேதனை அதிகமாகிவிட்டது. குமாருக்கு ஒன்றும் புரியவில்லை. ''அம்மா ஏன் இப்படிக் கத்துகிறது?'' அப்பாவைக் கேட்டான். வேலைக்காரர்களைக் கேட்டான். பெரிய சாக்ரடீசாக இருந்தால் தானென்ன; குழந்தையின் தர்க்கவாதக் கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட முடியுமா என்ன? குமாருக்குச் செயல்மூலம் பதில் சொல்லி கோமதி ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகிவிட்டாள். குமார் எதிர்பார்த்த பாப்பா வந்துவிட்டது.

''அம்மா, அம்மா' பாப்பாவை என்னோட பள்ளிக்கூடம் அழைச்சுக்கிட்டுப் போகலாமா?''

குமாரை முத்தமிட்டுக்கொண்டே கோமதி, ''இப்போது வேண்டாண்டா ராஜா'' என்று தழுவிக்கொண்டாள். அந்த அன்பு ஸ்பரிசத்திலே அந்த அரும்பு மெய்மறந்து போயிற்று.

ஒருவருக்கொருவர் சமமாக, பலமும், வளமும் இருக்கும்போதே, பொறாமை உணர்ச்சி தலை காட்டுகிற இந்த உலகில், குமாரைவிடத் தன் குழந்தை பலஹீனமாகவும், வளமற்றும் இருப்பதைக் காணும் கோமதிக்கு அதுபோன்ற பொறாமைக் கனல் அவளையுமறியாமல் மூண்டதில் ஆச்சரியமில்லைதான்.

பாப்பா பிறந்தது முதல் அதற்கு நீங்காத நோய்தான்! அதைக் கவனிப்பதிலேயே அவளுக்கு நேரம் முழுவதும் செலவாயிற்று! தன் குழந்தையின் நோய் நீங்க, கோகுல் நல்ல டாக்டரிடம் காட்டவில்லை என்ற வருத்தம் வேறு அவளுக்கு! என் குழந்தைன்னா உங்களுக்குத் தள்ளுபடி! என்று ஒரு நாள் அவள் கோபமாகப் பேசிவிட்டாள் கணவனிடம். ''என் குழந்தை'' இந்த வேறுபாடான வார்த்தை கோகுல் உள்ளத்திலே சம்மட்டி அடிபோல் விழுந்தது; பெண்கள் தனக்கொரு குழந்தை பிறக்கும் வரையில்தான் மற்ற குழந்தைகளிடம் அன்பாக இருக்கிறார்கள். அப்படி அன்பாக இருந்தால்தான் தனக்குக் குழந்தை பிறக்கும் என்ற பழைய நம்பிக்கைதான் அதற்குக் கூடக் காரணம் போலும். எல்லாக் குழந்தைகளிடமும் எப்போதும் அன்பாயிருக்கவேண்டும் என்ற புதிய எண்ணம் பெண்கள் உள்ளத்திலே வளராதா?

இப்படிப் பெண்கள் சமுதாயத்தைப்பற்றியே மொத்தமாக ஒரு கணக்குப் போட்டுக்கொண்டு சிந்தனையிலாழ்ந்தான் கோகுல். என் குழந்தை - உன் குழந்தை எனப்பிரித்துப் பேசுகிற அளவுக்கு வந்துவிடுவாள் கோமதி, என அவன் நினைத்தானில்லை. அம்மனூர் கோமதி எங்கேயோ போய்விட்டாள்.



அம்மா ஸ்தானத்தில் வைத்துக் குமார் மகிழ்ந்த அந்தக் கோமதி ஏன் மறைந்து விட்டாள்? கோகுல் குமுறும் கடலானான். பாப்பா வந்துவிட்டதால் குமாரிடம் கோமதி காட்டுகிற அன்பு குறைந்திருக்கத் தேவையில்லைதான்! ஆனாலும் பாப்பாவின் உடல்நிலை கோமதியை அந்த நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டது.

ஒருநாள் படுத்திருந்தபாப்பாவை, குமார் மிகவும் சிரமப்பட்டுத் தூக்கிக் கொண்டு தெருப்பக்கம் போனான். அதைப் பார்த்த கோமதிக்குக் கோபம் வந்துவிட்டது. ''டே மூதேவி-ஏண்டா குழந்தையைத் தூக்கிவிட்டுப் போயி கொல்லப்போறெ'' என்று அலறியபடி குழந்தையைப் பிடுங்கிக் கொண்டு உள்ளே வந்ததை, பலகணி வழியே பார்த்தான். ''ஏதோ தப்பு செய்துவிட்டோம் போலிருக்கிறது, அதுதான் அம்மா திட்டுகிறார்கள்'' என்று குமார் நினைத்துக்கொண்டு, இளம் வாய்ச் சிரிப்பை காட்ட, இருவிழியும் நீரைக் கொட்ட, அப்படியே நின்றுவிட்டான். 'மூதேவி' என்பதற்குப் பொருள் அந்த மொட்டுக்கு என்ன தெரியும்?

கோமதிக்குத் தன் குழந்தையைப் பற்றிய ஏக்கம் அதிகமாகிவிட்டது. நாளுக்கு நாள் அது உடல் மெலிவதை அவளால் சகிக்கமுடியவில்லை. ஒரு நாள் – குழந்தைக்குக் கடுமையான காய்ச்சல் கண்டது. மனங் கொதித்த கோமதி, நல்ல டாக்டர் யாரையாவது அழைத்துவரக்கூடாதா என்று கணவனைக் கடிந்து கொண்டிருக்கிறாள், அப்போது எதிரே ஒரு டாக்டர் வந்து நிற்கிறார்.

''யார் சார் உங்களைக் கூப்பிட்டு வந்தது?'' என்ற வியப்போடு கேட்கிறான் கோகுல்.

''இதோ இவன்தான்'' என்று குமாரைக் காட்டுகிறார் டாக்டர்.

உடனே கோகுல் மகனை அள்ளி எடுத்து அணைத்து முத்தமாரி பொழிகிறான்.

ஆனால், குமார் எதிர்பார்த்தபடி அவன் அம்மாவிடமிருந்து ஒரு முத்தத் துளிகூடக் கிடைக்கவில்லை! காரணம் என்ன? குமார் யோசித்தான்... இளம் நெஞ்சம் இதுபோன்ற பெரிய யோசனையில் ஈடுபடலாமா? ''எனக்கு நிஜ அம்மா இல்லே, இது போலி அம்மா'' இப்படி ஒரு முடிவுதான் அவன் மனதில் உதயமாகியிருக்கவேண்டும் - புத்தகங்களை எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடம் போய்விட்டான். வேலைக்காரி அவனை வழியனுப்பி வைத்தாள். குழந்தையைப் பரிசோதித்த டாக்டர் மருந்து கொடுத்துவிட்டு ''கொஞ்சம் ஆபத்தான நோய்தான்; பனிக்காற்றுப் படாமல் கவனித்துக் கொள்ளுங்கள், பார்ப்போம் பிறகு என்று சொல்லிப் போய்விட்டார். கோமதியின் துயரம் பன்மடங்காயிற்று. இதுவரையில் சரியாகக் கவனிக்காததால் இப்படியாகிவிட்டது என்குழந்தை என்று கணவரிடம் சீறினாள். அவன் குழம்பியிருந்தான். தாழை மடலை மேலேயிருந்து தடவினால் முள் குத்தாது-எதிர்ப்புறமிருந்து தடவினால் கை ரணமாகிவிடும். கோகுல் கோமதியிடம் எதிர்நீச்சல் போட்டு, இருதயத்தை இன்னும் ரணமாக்கிக் கொள்ள விரும்பவில்லை! ஒரு சாதாரணப் பெண்ணுக்குரிய மனக்குமுறல் அது. அதைத் தனது அமைதியினாலேயே அடக்கிவிட முடியுமென நம்பியிருந்தான் அவன்.

பள்ளிக்கூடம் முடிந்து குமார் வீடு திரும்பினான். கொஞ்ச நாட்களாக வேலைக்காரிதான் அவனை எதிர்வந்து அழைத்துப் போகிறாள். இரவு உணவுக்குப் பிறகு அனைவரும் படுக்கைக்குப் போயினர். கோமதியும் குழந்தையும் ஒரு படுக்கையில். கோகுல் நாற்காலியில் படுத்தபடி தூங்கினான். தூங்காமல் புரண்டுகொண்டிருந்த குமார் மெதுவாக எழுந்தான். அறையின் மூலைகளையெல்லாம் தேடினான். என்ன தேடுகிறான், இந்த இருட்டில்? அறையில் அவன் தேடியது கிடைக்கவில்லை. வீட்டின் கீழ்ப்பக்கம் போனான் மெதுவாக' அங்கும் தேடினான். உயரமான பீரோ, அதன்மீது ஒரு நாற்காலியைப் போட்டு ஏறினான், ஆ' அதோ அவன் தேடியது கிடைத்து விட்டது. அவனது அம்மா படம். அதை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டான். படுக்கைக்கு வந்தான் படத்தோடு' அம்மா படத்தின் பக்கத்திலே படுத்துக்கொண்டான். ''அந்தக் கட்டிலிலே பாப்பாவும் அதன் அம்மாவும். நானும் என்- ''அய்யோ'' இப்படி ஒரு வித்தியாச விஷத்தை அந்த அரும்பின் உள்ளத்திலே தெளிப்பதற்குக் காரணமாயிருந்தது கோமதிதான்.

இல்லை' இல்லை' நோய் வடிவான அவள் பிள்ளைதான்.

கோமதியின் அருகே கிடந்த பாப்பா அழுதது. கோமதி நன்றாக தூங்கிக் கொண்டிருந்தாள். பலநாள் கண் விழித்திருந்த களைப்பு அவளுக்கு' குமார் எழுந்து பார்த்தான். ஜன்னல் எல்லாம் மூடிக் கிடந்தது.



''பாப்பாவுக்குக் காற்றில்லை. அதனால் அழுகிறது'' இது அவன் எண்ணம். ஜன்னல் கதவுகளை நன்றாகத் திறந்தான்.

அய்யோ! யார் ஜன்னலைத் திறந்தது?'' என்று கத்தினாள். கோகுல் திடுக்கிட்டெழுந்தான்.

''நான்தாம்மா, பாப்பாவுக்குக் காற்று வேணும்னு திறந்தேன்'' என்று கூறியபடி எழுந்தோடி வந்தான் குமார்.

கோமதி குழந்தையைத் தொட்டுப் பார்த்தாள். குழந்தை விரைத்துக் கிடந்தது. அது இறந்து அதிக நேரமாகிறது. முதலில் ஒருமுறை அழுததே; அப்போதே அது போய்விட்டது. ஆனால் அந்தப்பழி குமாரின் தலையிலே விழுந்தது. அங்கிருந்த ஒரு கூஜாவை எடுத்துக் குமாரின் மீது வீசியெறிந்தாள் கோமதி! அய்யோ 'அம்மா' என அலறினான் குமார். கூஜா குறி தவறி அவன் படுக்கையிலிருந்த அம்மா படத்தின்மீது விழுந்து, படம் தூள்தூளாகப் போயிற்று. குமார் படத்தை எடுத்து முகத்தில் ஒத்திக் கொண்டு அழுதான். உடைந்த கண்ணாடித்துண்டுகள், அவன் அழகு முகமெங்கும் கீறி, ரத்தம் கசிந்தது. கோகுலுக்கு எதை நினைத்து அழுவது என்று புரியவில்லை.

குமார் இரண்டு மூன்று நாட்களாகச் சரியாகச் சாப்பிடவேயில்லை. பாப்பாவைக் குழியிலே வைத்துப் புதைத்ததற்கு அவனல்லவா காரணமாம்' அய்யோ அப்பா! பாப்பாவை நினைத்து அழுதுகொண்டே யிருக்கிறாளே; அதற்கும் அவன் தானே காரணம் கோகுல் எவ்வளவோ முயன்றும் அவனைச் சமாதானப்படுத்த முடியவில்லை.

''குழந்தை போய்விட்டது. அழுதால் வரப்போகிறதா கோமதி? குமாரைச் சமாதானப்படுத்து! அவன் அப்படியே ஏங்கி விட்டான்'' என்று தழுதழுத்த குரலிலே கோகுல், அவளிடம் வேண்டிக் கொண்டான். பயனில்லை. கோகுல் மனப்புயலைத் தணிக்கும் மார்க்கம் தெரியாமல் தத்தளித்தான். குமாரைக் கூப்பிட்டு, சாப்பிட வற்புறுத்தினான். அவன் மறுத்தான். மனைவியின் மீதுள்ள ஆத்திரத்தைக் குழந்தை மீது காட்ட வேண்டுமென்ற முறைப்படி, குமாரின் கன்னத்திலே ஓங்கி ஒரு அறை கொடுத்துவிட்டு விர்ரெனப் பறந்துவிட்டான், அலுவலகத்திற்கு.

''அப்பா, ஏன் என்னை அடிக்க வேண்டும்'' விடை காண முடியவில்லை அந்தப் பச்சைப் பாலகனால்! பேசாமல் எழுந்து பள்ளிக்கூடம் போய் விட்டான்.

பத்திரிகை ஆபிஸில் கோகுலுக்கு வேலை ஓடவில்லை. மாலை ஆறு மணிஆகியும் நினைத்த கட்டுரையை எழுதி முடிக்க இயலவில்லை. மன நிம்மதியல்லவா எழுத்தாளனுக்கு முக்கிய மூலதனம்; தொட்டுத் தொட்டு வளர்த்த தன் அருமைச் செல்வத்தை அறைந்துவிட்டதை நினைத்து நினைத்து வெதும்பினான். அவன் முதல் மனைவி அவனெதிரே வந்து காலைப் பிடித்துக் கொண்டு அழுது ''இனிமேலாவது நமது செல்வத்தை இப்படி அடிக்காதீர்கள்'' என்று கெஞ்சுவது போலிருந்தது. போனில் மணி அடித்தது. பேசினான். குமார் பள்ளிக்கூடத்திற்குப் போனவன் திரும்பவேயில்லை! பள்ளிக்கூடத்திலும் இல்லை! என்று வேலைக்காரன் தகவல் கொடுத்தான். கோகுலுக்குத் தலை சுழன்றது. ''குமார்' என்று கத்தியபடி மாடிப்படியிலே கால் வைத்தான். உலகமே இருண்டுவிட்டது போன்ற உணர்ச்சி! கண்களிலே பயங்கரமான சுழற்சி! கோகுல் கால்தவறியது! கடகடவெனப் படிகளிலே உருண்டான். மாடிப்படி முழுவதும் ரத்த வெள்ளம்'.

ஆஸ்பத்திரியிலே கவலைக்கிடமான நிலைமையிலே கோகுல்! இதைக்கேட்ட கோமதி அலறித்துடித்துக் கொண்டு ஓடிவந்தாள். அவளை யாரும் உள்ளே அனுமதிக்கவில்லை. வெளியிலேயே உட்காரவைத்து விட்டார்கள். பிரக்ஞையே வரவில்லை. இன்னும் பத்துநிமிடத்திலே பிரக்ஞை வந்தால்தான் பிழைப்பான். இல்லாவிட்டால் பிழைக்கமாட்டான். இப்படித் தகவல் தரப்பட்டது அவளுக்கு! தன்னாலேயே தன்னுடைய நடத்தையினாலேயே தன் கணவனுக்கு ஆபத்து வந்துவிட்டது என்பதை உணர்ந்தாள்.

அவளையறியாமல், கணவன் மீது அவளுக்கு அன்பு புதுப்பிக்கப்பட்டது.

அவள் அமர்ந்திருந்த இடத்திற்கு அருகேயுள்ள மரத்திலேயிருந்து தழைகள் உதிர்ந்தன. அது கண்டு அலறினான். அந்த மரக்கிளையில் அமர்ந்திருந்த இரு புறாக்களில் ஒரு புறா எழுந்து பறந்தது! அதைப் பார்த்து ஒவெனச் சப்தமிட்டாள்! அந்தநேரத்திலே, தன்னை அடித்ததற்குக் காரணம் கேட்க அப்பாவின் ஆபீஸுக்குப் போய், அங்கே சேதி கேள்விப்பட்டு, ஆபிஸ்பியூன் உதவியோடு ஆஸ்பத்திரிக்கு வந்த குமார், அம்மா அழுது கொண்டிருப்பதைப் பார்த்து அவளிடம் ஓடி வந்தான்.

''குமார்', அப்பா ஏமாற்றிவிடுவார் போலிருக்கடா'' என்று அவனை அணைத்துக்கொண்டு வீறிட்டுக் கதறினாள் கோமதி.

''அழாதேம்மா' என்று அவள் கண்களைத் தன் கொழுந்துக் கைகளால் துடைத்தான் அந்த அரும்பு.

''யாரடா ராஜா, நமக்கு இனிமேல் ஆதரவு?'' என்று விம்மினாள். அவள் மனக்கண் முன்னே, அம்மனூர் குடிசையிலே கோகுலின் காலைப் பிடித்துக் கொண்டு ஆதரவுகோரிய அந்தக் காட்சி தோன்றி மறைந்தது.

''பயப்படாதேம்மா' நான் பெரியவனா ஆகி உன்னைக் காப்பாத்துவேன் பயப்படாதேம்மா'' என்று அவளது முகவாய்க்கட்டையைப் பிடித்துக்கொண்டு குமார், தேம்பி அழுதான்.

அந்தப் பசலையின் ஆதரவு மொழி, அவள் குறுகிப் போன இருதயத்தை விசாலமாக்கிவிட்டது! தாய்மை உணர்ச்சி, பிள்ளையைப் பெற்றதால்தான் வர வேண்டுமா? தாய்மை உணர்ச்சி பெண் குலத்தின் சொத்தாயிற்றே! அந்த உணர்ச்சி கோமதியின் உள்ளத்திலேயிருந்து பீறிட்டுக்கிளம்பி, குமாரைத் தழுவிக் கொண்டது.

இருவரும் கன்னத்தோடு கன்னம் ஒட்டிக்கொண்டனர். அம்மாவின் படத்திலேயுள்ள கண்ணாடித்துண்டுகள் கிழிந்த கீரலின் தழும்புகளை கோமதியின் கண்ணீர் கழுவிக்கொண்டிருந்தது.

நர்ஸ் ஓடி வந்தாள்! கோமதி திடுக்கிட்டாள்.

கோகுல் பிழைத்துவிட்டான் என்று இன்பச் சேதி கிடைத்தது.

குமாரும் கோமதியும் உள்ளே ஓடினார்கள். கோகுல், கோமதியின் இடுப்பிலேயுள்ள குமாரைக் கண்டான். உண்மையாகவே இப்போது அவன் பிழைத்துவிட்டான்.

அரும்பைப் பாதுகாக்கும் இரு இலைகளும் உதிர்ந்து விடுமோ என்ற நிலையிருந்தது - இப்போது மீண்டும் இரு இலை ஒரு மொட்டு ஆகிவிட்டது; இந்தப் புதிய ஆரம்பம், இனி இரு இலை இரு மொட்டு என்று ஆவதற்கான இன்ப ஆரம்பமாகவும் இருந்தது!



# விதிக்குவிதி எழுதுகின்ற கலைஞர் வாழ்க!

-கவியரசர் இளந்தேவன்

காத்திருந்த கண்களுக்குக் களிப்பு! ஏங்கிக்
கவிந்திருந்த நெஞ்சுக்கு நிமிர்ச்சி! சோகம்
சேர்ந்திருந்த பஞ்சையர்க்கு மகிழ்ச்சி! உள்ளம்
சிதைந்திருந்த தமிழருக்குப் புதிய ஊக்கம்!
பூத்திருந்த பொற்காலம் மீண்டும் இங்கே!
புகழ்க்கலைஞர் தமிழாட்சி மலர்ந்த திங்கே!
பார்த்திருந்த தமிழன்னை பாடு கின்றாள்!
பாராட்டப் பாவலர்சொல் தேடு கின்றார்!

ஆண்டுக்கோர் ஐந்துமுறை அரிசி; ஏழை
ஆசையுடன் அணிவதற்கும் ஆடை; ஏழ்மைக்
கூண்டுக்குள் இருப்பவரை மீட்டுக் காக்கக்
கூடுதலாய் நிதியுதவி, வேலை வாய்ப்பு;
மூண்டுவரும் பசிதணிக்க மாண வர்க்கு
முட்டையுடன் சத்துணவு, ஆடை, நூற்கள்;
நீண்டுசெலும் வரலாற்றுப் பொன்னேட் டுக்குள்
நித்திலத்தில் தான்இவற்றைப் பதிக்க வேண்டும்!

கண்களெனப் பெண்களினைச் சொன்னோம்; ஆனால்
கடுகளவும் அவர்க்குரிமை நாம்தந் தோமா?
புண்களிலே புதுவேல்கள் பாய்ச்சி நின்றோம்!
பூரித்தோம்! மேடைகளில் வாழ்த்தி நின்றோம்!
பெண்களுக்குச் சொத்துரிமை, வேலை வாய்ப்பு,
பிள்ளைபெறும் காலத்தில் உதவி, ஏழைக்
கன்னியர்க்கு மணஉதவி, கல்வி எல்லாம்
கலைஞரெனும் தாய்தந்த சீத னங்கள்!

ஊழல்களின் ஊற்றுக்கண் அடைப்பு 'ஆட்சி
ஒழுங்குபெற வாரியங்கள் கலைப்பு' வேர்வை
வீழநிதம் உழைக்கின்ற உழைப்பா ளர்க்கு
விபத்தினிலே நிதியுதவி; ஓட்டு நர்க்கோ
வாழவகை செய்கின்ற வாக னங்கள்!
வரிச்சலுகை தொழில்களுக்கு வசதி வாய்ப்பு!
ஆளுகிறார் மக்கள்தமைத் தாமே இன்று!
அடையாளம்-உள்ளாட்சிச் சீர்திருத்தம்!

முடங்கிவிட்ட நிர்வாகத் தேரும் ஓடும்!
மூடிவைத்த திருவாரூர்த் தேரும் ஓடும்
ஒடுங்கிவிட்ட உழவர்களின் உள்ளம் பாடும்
ஒழிந்தவட்டிச் சுமையெண்ணிக் கூத்தும் ஆடும்!
தொடங்கிவிட்ட ஒதுக்கீட்டுத் திட்டம் தந்த
துணையில், மிகப் பிற்பட்டோர் துயரம் போகும்!
விடிந்துவிட்ட தமிழ்வானில் மகிழ்ச்சி வெள்ளம்
விதிக்குவிதி எழுதுகின்ற கலைஞர் வாழ்க!

# மக்கள் நலம் காக்கும் மாசு கட்டுப்பாடு வாரியம்

பி.எம். பெல்லியப்பா, இ.ஆ.ப.,
தலைவர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
சென்னை.



சுற்றுப்புறச் சூழலைக் காத்து மாசுத் தொல்லையைக் கட்டுப்படுத்துவதே இன்று நம்மை எதிர்நோக்கியுள்ள பெரும் பிரச்சினையாகும். இப்பிரச்சினையைக் கட்டுப்படுத்த பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

**மாசு கட்டுப்பாடு வாரியம்:**

1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் நீர் மாசுறுவதைக் கட்டுப்படுத்த வழி வகை செய்கிறது. இச்சட்டத்தை தமிழக அரசு ஏற்று, 19.2.82 அன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தைத் தோற்றுவித்தது. நீர், நிலம், காற்று ஆகியவை மாசுபடுவதைத் தடுப்பதும், கட்டுப்படுத்துவதும் இவ்வாரியத்தின் முக்கிய நோக்கங்களாகும். இவ்வாரியம் 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (1978-ஆம் ஆண்டு திருத்தம்), 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (1987-ஆம் ஆண்டு திருத்தம்), 1986-ஆம் ஆண்டு சுற்றுப்புறச் சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1977-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரிச் சட்டம் ஆகிய சட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது.

புதிய தொழிற்சாலைகள் மற்றும் ஏற்கனவே செயல்பட்டு வரும் தொழிற்சாலைகள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவை தங்களின் கழிவு நீரை ஆறு, நீரோடை, கிணறு, குளம், கடல், வடிகால், நிலம் ஆகியவற்றில் வெளியேற்ற, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் முன் அனுமதியைப் பெற வேண்டும். கழிவு நீர் வெளியேற்றத்திற்கு வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறினால் 1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு கட்டுப்பாடு) சட்டத்தின் 44-ஆம் பிரிவின்படி 6 திங்களுக்குக் குறையாமலும், 6 ஆண்டுகள் வரையிலும் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

தமிழகம் முழுவதையும் காற்று, மாசு கட்டுப்பாடு மண்டலமாக அரசு அறிவித்துள்ளது. காற்று மாசு கட்டுப்பாடு மண்டலத்தில் தொழிற்சாலைகளை இயக்க வாரியத்தின் அனுமதியைப் பெற வேண்டும். சுற்றுப்புறச் சூழலில் கழிவு நீரை வெளியிடவும், காற்று மண்டலத்தின் தன்மை மற்றும் சிமெண்ட், அனல்மின்நிலையம், உரத் தொழிற்சாலை போன்ற 13 வகைத் தொழிற்சாலைகள் வெளியிடும் வாயுக் கழிவுகளுக்கும் வாரியம் வரை முறைகளை வகுத்துள்ளது. 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு கட்டுப்பாடு) சட்டத்தின் 37-ஆம் பிரிவின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள வரை முறைகளைக் கடைப்பிடிக்கத் தவறினால் 1½ ஆண்டுகளுக்குக் குறையாமலும், 6 ஆண்டுகள் வரையிலும் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். தவறு தொடர்ந்தால் முதல் தவறுக்குத் தண்டனை அனுபவித்த நாளிலிருந்து ஒவ்வொரு நாளுக்கும் ரூ.5,000/- அபராதம் விதிக்கப்படும்.

**மாவட்ட அலுவலகங்கள்:**

தொழிற்சாலைகளின் மாசு கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்பார்வையிடவும், கண்காணிக்கவும் ஏதுவாக 1.12.88 முதல், வாரியத்தின் செயல் அமைப்பு மாற்றி அமைக்கப்பட்டுப் பரவலாக்கப்பட்டது. இதன்படி சென்னையில் தலைமையகத்தையும், சென்னை, செங்கை அண்ணா (வடக்கு), செங்கை அண்ணா (தெற்கு), கடலூர், தஞ்சாவூர், திருச்சி, வேலூர், ஈரோடு, சேலம், கோயமுத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மாவட்ட சுற்றுப்புறச் சூழல் நலப் பொறியாளர்களின் கீழ், மாவட்ட அலுவலகங்களையும் கொணடு வாரியம் செயல்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட அலுவலகம் அமைக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாரியம் தன்னுடைய பல்வேறு பணிகளை மாவட்ட அலுவலகங்களுக்கு பகிர்ந்தளித்துள்ளது. அதன்படி தொழில் முனைவோர், அனுமதிக்கான விண்ணப்பங்களை மாவட்ட சுற்றுப்புறச் சூழல் நலப் பொறியாளரிடமிருந்து பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் இருபடிகளை மாவட்ட அலுவலகத்திற்கும் மூன்றாம் படியினை சென்னை அலுவலகத்திற்கும் அனுப்ப வேண்டும். எல்லா விவரங்களுக்கும் தொழில் முனைவோர் மாவட்ட அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளலாம். சரிவரப் பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் கிடைத்த 45 நாட்களுக்குள் வாரியம் அனுமதி அளிக்க ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தக் காலவரையறைக்குள் அனுமதி கிடைக்காவிட்டால் வாரியத்தின் தலைவருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொழில் முனைவோரின் நலம் பேணுவதோடு வாரிய அலுவலர்களின் குறை தீர்க்க, அலுவலக "மேலாண்மைக் குழு" ஒன்றினையும் வாரியம் அமைத்துள்ளது. மேலும் பொது மக்களின் குறைகளைப் பெற்று அவற்றினைத் தீர்க்க ஒவ்வொரு திங்கட்கிழமை அன்றும் தலைமையகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களிலுள்ள வாரிய அலுவலர்கள் தங்களுடைய தலைமையகத்திலிருந்து குறைகளைப் பெறுகிறார்கள்.

**தோல் பதனிடும் ஆலைகளும் வாரியமும்:**

நம் நாட்டில் தோல் பதனிடும் தொழிலில் தமிழகம் சிறப்பிடம் வகிக்கிறது. சென்னை, செங்கை அண்ணா, வடார்க்காடு, பெரியார், காயிதே மில்லத், திருச்சி ஆகிய மாவட்டங்களில் இத்தொழில் அதிகம் நடைபெறுகிறது. தமிழ் நாட்டிலுள்ள 812 தோல் தொழிற்சாலைகளில் வடார்க்காடு மாவட்டத்தில் மட்டும் 516 தோல் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இத்தொழிற்சாலைகளின் கழிவு நீர் நச்சுத் தன்மை வாய்ந்தது என்பதால் இதனைக்கட்டுப்படுத்



தும் முயற்சியில் வாரியம் இறங்கியது. வாரியத்தின் முயற்சியால் 35 தோல் தொழிற்சாலைகளில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு விட்டன. மேலும் 129 தோல் தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவும் பணியைத் தொடங்கி விட்டன. விருப்பமுள்ள தோல் தொழிற்சாலை களை ஒருங்கிணைத்து, கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்கும் பணி தற்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகம் இதில் முக்கிய பங்காற்றுகிறது. வாணியம்பாடியில் 79 தோல் தொழிற்சாலைகளும், ஆம்பூரில் 59 தோல் தொழிற்சாலைகளும், பேரணாம்பட்டில் 66 தோல் தொழிற்சாலைகளும், இராணிப்பேட்டையில் 79 தோல் தொழிற்சாலைகளும், திண்டுக்கல்லில் 36 தோல் தொழிற்சாலைகளும் இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, பொதுக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க உள்ளன. தோல் தொழிற்சாலைக் கழிவு நீரை சுத்திகரிக்க வேண்டியதின் அவசியத்தை இத்தொழிற்சாலைகளுக்குத் தொடர்ந்து எடுத்துக்கூறி இது பற்றிய விழிப்புணர்ச்சியை வாரியம் அவர்களிடையே ஏற்படுத்தி வருகிறது.

### எரிசாராயத் தொழிற்சாலைகள்:

அதிகமான மாசுத்தன்மையுடைய கழிவு நீரை வெளிப்படுத்தும் மற்றொரு தொழிற்சாலை, எரிசாராயத் தொழிற்சாலையாகும். நம் மாநிலத்தில் 8 எரிசாராயத் தொழிற்சாலைகள் உள்ளன. வாரியத்தின் தொடர்ந்த முயற்சியால் தொழிற்சாலைகள் ரூ.1.5 கோடியிலிருந்து ரூ.2 கோடி வரையிலான செலவில் கழிவு நீர் சுத்தி கரிப்பு நிலையம் கட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டுவிட்டது. மற்றும் 5 தொழிற்சாலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

### தமிழ்நாடு மாநில சுற்றுச் சூழல் நலக்குழு:

பல்வேறு திட்டங்களினால் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பினைத் திட்டமிடல் கட்டத்திலேயே ஆய்ந்து சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பிற்கு வழி வகை செய்ய வேண்டியுள்ளது. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில் ஆலோசனை கூற ஓர் உயர் மட்டக்குழுவை அரசு ஏற்படுத்தியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் தலைவராகவும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகவும், அரசு சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறைச் செயலாளரை உறுப்பினர்-செயலராகவும் கொண்டு தமிழ்நாடு மாநில சுற்றுப்புறச் சூழல் நலக் குழு இயங்கி வருகிறது. ரூ.5 கோடிக்கு மேற்பட்ட மதிப்பீடுள்ள வளர்ச்சித் திட்டங்கள் இக்குழுவின் அனுமதி பெற வேண்டும். இதுவரை இக்குழுவின் பரிசீலனைக்குப்பிறகு 55 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்குழுவில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவரும், உறுப்பினர்-செயலரும் அங்கம் வகிக்கின்றனர்.

### ஆய்வகமும் தொடர்புடைய பிற்பணிகளும்:

சென்னையில் மத்திய ஆய்வகத்தையும், மதுரை, சேலம் ஆகிய இடங்களில் மண்டல ஆய்வகங்களையும் வாரியம் நிறுவியுள்ளது. இவற்றின் மூலம் நீர், தொழிற்சாலைக் கழிவுநீர் ஆகியவை பௌதீக, இரசாயன நுண்ணுயிர் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. மாசு கட்டுப்பாடு பணி தவிர, அப்பணியோடு தொடர்பு கொண்ட வேறு பணிகளிலும் வாரியம் ஈடுபட்டு வருகிறது. உலகச் சுகாதார நிறுவனம், உலக வானிலை நிறுவனம், ஐக்கிய நாட்டுக் கல்வி, விஞ்ஞான கலாச்சார நிறுவனம், உலக சுற்றுப்புறச் சூழல் திட்டம் ஆகிய நிறுவனங்கள் பங்கேற்கும் உலக சுற்றுப்புறச் சூழல் கண்காணிப்புத் திட்டத்தில் வாரியம் பங்கேற்றுள்ளது. இத்திட்டத்தில் காவிரி, தாமிரபரணி ஆகிய ஆறுகளிலிருந்து நீர் மாதிரிகள் ஒவ்வொரு மாதமும் எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் இணைந்து காற்று வெளியின் தன்மையைக் கண்காணிக்கும் திட்டத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஈடுபட்டுள்ளது. மேலும் காவிரி வடிநிலப்பகுதி ஆய்வுத்திட்டத்திலும் வாரியம் ஈடுபட்டுள்ளது.

தமிழ்நாடு கடலோர நீரின் தன்மையை கண்காணிக்கும் பொறுப்பினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் மத்திய அரசின் கடல் வளர்ச்சித்துறை ஒப்படைத்துள்ளது.

மத்திய வாரியத்துடன் கலந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தானியங்கி ஊர்திகளிலிருந்து வெளிவரும் புகை குறித்து சில வரைமுறைகளை வகுத்துள்ளது. இந்த வரைமுறைகளை உள்ளடக்கி மோட்டார் வாகன விதிகளை அரசு மாற்றியமைத்து உள்ளது.

### சுற்றுச் சூழல் கல்வி:

பொதுமக்களிடையேயும், தொழில் முனைவோர்களிடையேயும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாசு கட்டுப்பாடு மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றிய செய்திகளைப் பொதுமக்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் சுய தேவை நிறுவனங்களுக்கும் தெரியப்படுத்தும் வகையில் வாரியம் மாத செய்தி மலர் ஒன்றையும், வெளியிட்டு வருகிறது.

எத்தனை சட்ட வரம்புகள் இருந்தாலும், எத்தனை கட்டுப்பாடுகள் இருந்தாலும், எத்தனை நிறுவனங்கள் இப்பணியில் ஈடுபட்டு இருந்தாலும் பொது மக்களும், தொழிற்சாலைகளும் மாசைக்கட்டுப்படுத்தி, சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதைத் தங்கள் கடமை என உணர்ந்து, இதற்கான முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டால்தான் நம் இளைய தலைமுறையினர் வளமான வாழ்வினைப் பெற இயலும்.

(உலக சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு
நாளையொட்டி (5.6.1989)
இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.)

# வாழும் வர்ணனைகள்

## முதல்வர் கலைஞர்

### புகழ்

புகழே! நீ ஒரு சந்திரமண்டலம். உன்னை அடையும் முயற்சியில் பல மேதைகள் இன்னும் வெற்றிபெற முடியவில்லை.

புகழே! நீ இமயத்தின் உச்சி. இடைவிடா முயற்சியால் உன்னைச் சிலர் பிடித்து விடுவார்கள்.

புகழே! நீ ஒரு பனிக்கட்டி. உன்னைக் கைக்குள்ளேயே வைத்துக் கெட்டியாகப் பிடித்திருந்தாலும் நீராகக் கரைந்து மறைந்து விடுகிறாய்.

புகழே! நீ ஒரு புதிர்! உன்னைப்பற்றி விளக் கவே என்னால் முடியாது!

### மலையே வாழி

வைரமணி விளக்குகள் ஒளிவிடும் வானப் பந்தலின் கீழே அரியாசனம் வீற்றிருக்கும் பூமி அன்னையின் தலையை அலங்கரிக்கப் பொன்னாலும், பச்சையாலும் இழைக்கப்பட்ட மணிக்கிரீடம் என்பேன் உன்னை! எப்படியெப்படி யெல்லாமோ உன்னை வர்ணிக்கத் தோன்றுகிறது! அப்படியப்படி யெல்லாம் நீ காட்சி யளிக்கிறாய்.

விண்ணகத்து வெண் முகில்களெல்லாம் கீழே வீழ்ந்து கண்ணுக்கெட்டா உயரம் வளர்ந்தனவோ என்று திகைக்கிறேன், பனியால் நீ உடலை மூடிக் கொண்டிருக்கும்போது!

பொன்னும் பொருளும் தருவதால் பூமிக்கோர் வள்ளலாய் - உலகிற்கு உதவி செய்வதால் பொது நலத் தொண்டனாய் - புகழேந்தி நிற்கும் புவி மகுடமே! நீயோர் கலைஞனுங்கூட! நீ யில்லாவிட்டால் எகிப்து நாட்டுச் சிற்பங்கள் ஏது? எல்லோராக் குகை தான் ஏது? எழிலூட்டும் அஜந்தா உண்டா? சிற்றன்ன வாசலின் சிறப்பும், மாமல்லபுரத்து மகிமையும் காணவும் போமோ?



### தளிர்

அரும்பு பொதியவிழா மல்லிகையைப் பார்த் தால் - ஆகா - எத்துணை இன்பமாயிருக்கிறது. வயலிலே நாற்று! வண்ணப் பொய்கையிலே மீன் குஞ்சு! காட்டிலே மான் குட்டி - வீட்டிலே குழந்தை! குழந்தாய்! நீ ஈறுகாட்டி இளஞ்சிரிப்புக்காட்டும் இன் பப் புதையல்! ஜீவ ஆறு காட்டும் எழில்! தூண்டா விளக்கு! மூன்றாம் பிறை! செல்வத்துட் செல்வம்! செழும் பொன்! செந்தேன்! சங்கத் தமிழ்!

உதைத்த காலுக்கு முத்தமும், உமிழ்ந்த வாய்க்குச் சர்க்கரையும் உன்னைத் தவிர வேறு யாரால் பெற முடியும். சிரிப்பாய், அதன் விலை ஜெகம் பெறும். அழுவாய் - அதையடக்கக் கவிஞர்களின் எழுத்தாணி முனைகள் அள்ளிக்கொட்டியிருக்கும் காவியங்கள் - அப்பப்பா - உயிர் ஓவியங்கள்.

அண்ணன், தம்பி, அப்பா, அம்மா, ஆளன் அனைவரையும் வெறுத்து ஆயுளை முடித்துக்கொள்ள விரும்பிய எத்தனையோ பெண்மணிகளை, மடியி லிருந்து பார்த்தும், கருவிலிருந்து பேசியும், சாவி லிருந்து மீட்டிருக்கிறாய் நீ!

குழலையும் யாழையும் வெல்லுவாய் என்ற குறளையும் வெல்லும் உனது மழலை மொழி,

தென்றலிலே உன் அசைவைக் காண்பதோ - உன் அசைவில் தென்றலைக் காண்பதோ என்று கவி புனைவோர் தத்தளிப்பது எனக்குத் தெரிகிறது!

கொட்டும் வறுமை - குட்டும் அதிகாரம் - இவைகளால் கெட்டுப்போன குடும்பங்கள்கூட உன் பட்டுப்போன்ற பாதங்களைத் தொட்டுப் பரவசமடைவதை நான் கண்டதுண்டு.

இளங் குளிரே!

எழுங் கதிரே!

வளர் தளிரே!

நல்ல மனத்திற்கு, குழந்தை மனத்தைத் தான் ஒப்பிடுகிறார்கள், உன் மனம் உயர்வானது. மாசற்றது. அது மாணிக்கத்தின் ஜோதி. பேதங்களில்லை - பிரிவுகளில்லை - பிளவுகளில்லை - வளைவுகளில்லை - பாசி இல்லை - பயமுமில்லை.

## கடலே

கதிர் விழுங்கி - மதி உமிழும் கடலே! நில மடந்தைக் கெழிலூட்டும் நீல உடையே! ஜகப் பெண்ணாளின் சந்தன மேனியில் சலசல வெனப் பறந்தாடும் சல்லாத் துணி நீ! பச்சைச் சிசுவின் பவள உதட்டிலே வழிந்து நிற்கும் பால்! கூரையில் நீ உமிழும் நுரை! இரண்டும் ஒன்று! அசைந்தாடும் அழகு உதிர் அலைக் கரங்களால் அருமையான சங்குகளை நீ அள்ளி இறைப்பது? செங் கரும்புச் சிறு கைகளால் குழந்தைகள் செய்யும் இன்ப விஷமத்தை உணர்த்திக் காட்டுகிறது.

## விண் மீன்

முழு நிலவாம் வைரக்கட்டி, முகில் குன்றில் மோதுண்டு சிதறிவிட்ட ஒளித் துண்டோ தாரகையே நீதான்! பாய்ந்தெழுந்த மின்னலின் படைப்போ! சாய்ந்துவிட்ட மணி முடியின் மாணிக்கச் சிதறலோ! வேய்ந்து விட்டான் வானக் கூரையெல்லாம் இயற்கைக் கொத்தன் - இரத்தினத்தின் முத்துக்களால்! மண வாளன் வரவு பார்க்கும் நிலவு மங்கை, வான மஞ்சத்தில் பரப்பிவிட்ட மலர்க்குழுவோ நீங்கள் எல்லாம்!

## ஆறு

நதியே! நடனப் பெண்ணே! ஆட்டக் காரியின் அபிநயக் கரம் போல நெளிந்திடும் உன் அழகே அழகு. பெருகி வரும் நுரை வெள்ளமே! உருகி வரும் வெள்ளி ஒளியும் உனக்கீடாமோ! பண்ணமைக்கும் சிலம்பு நிகர் ஒலியும், வண்ணமெல்லாம் கூட்டி வரும் நடையும், உழவர் எண்ணமெல்லாம் களிப்பு செய்யும் உருவும் பொருந்திய பொன்னி மாதரசி! வாழி நீ வாழி!

## மு.கலைஞரின் முதல் கவிதை!

மாண்புமிகு கலைஞர் அவர்கள், கவியரங்குகள் பலவற்றிற்குத் தலைமை தாங்கிக் கற்கண்டுக் கவிதைகளைப் படித்ததுண்டு. அத்தகைய கவிதைத் தொண்டு, அவருடைய மாணவப் பருவத்திலேயே அரும்பிவிட்ட ஒன்றாகும். இன்று எண்ணிலாக் கவிதைகளை எழுதிப் பெருமைகொண்டிருக்கும் அவரெழுதிய முதல் கவிதை 'நியாயத் தராசு' என்பதாகும். அது இதுதான்:

'புண்ணுக்கு மருந்திட்டு
ஆற்ற வழி தேடிடுவாய்!
கண்ணுக்குள் பாவைபோல்
உருண்டிடும் உள்ளம் - கைம்
பெண்ணுக்கு இருப்பதையும்
உணர்ந்திடுவாய்!

'என்மனைவி இறந்திட்டாள்
வேறுமணம் வேண்டுமென்பாய்
பின் நீ சாவுமுனை அடைந்திட்டால்
உன் மனையாள் காவு கொடுக்க
வேண்டுமோ காதல்தனை?'

-மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் எழுதிய முதல் கவிதை இதுதான். மகளிர் நலத்தில் மங்காத ஆர்வம் இன்று நேற்றல்ல; மாணவப் பருவத்திலேயே அவருக்கு இருந்திருக்கிறது.

முற்றாத மழலைகளை வற்றாத கைநீட்டி வளர்த்திடும் தாயே! அன்புக் கரத்தின் அணைப்பினால் - ஆனிப்பொன் மேனி அசைந்தாட, மாணிக்கப் பல் காட்டிச் சிரிக்கும் செந்நெற் குழவிகளைப் பார்த்திடுவாய்! இயற்கை இன்பம் சேர்த்திடுவாய்! அருமைத் தாயே! ஆற்று மாதா! தெரிந்தோ தெரியாமலோ தீய களைகளுக்கும் பாலூட்டுகின்றாய் - இப்பிழையை உந்தன் திராவிட மாதாவிடம் கற்றனையோ! தொட்டிற் பழக்கமோ; அல்லது உன்னிடந் தான் அந்தத் தூயவளும் கற்றனளோ!

## தமிழே!

உன்னை - உளங் கவர் ஓவியமே!
உற்சாகக் காவியமே! ஓடை நறு மலரே!
ஒளியுமிழ்ப் புது நிலவே! அன்பே! அழகே!
அமுதே! உயிரே! இன்பமே! இனிய
தென்றலே! பனியே! கனியே! பசுந்தோகை
மயிலே! பழரசச் சுவையே! மரகத மணியே!
மாணிக்கச் சுடரே! மன்பதை விளக்கே! -
என்றெல்லாம் அழைத்திடத் தோன்றுகிறது.

ஆனாலும் தமிழே! உன்னைத் "தமிழே" என்று அழைப்பதிலே உள்ள இன்பம் வேறு எந்தச் சொல்லிலும் இல்லையென்பேன்.

தமிழே நீ வாழ்ந்திடு!

(திராவிடப் பண்ணை வெளியிட்ட முத்தாரம் என்னும் நூலிலிருந்து)

# ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல!



மின் உற்பத்திக்காக 1988-89ல் 350 கோடி ரூபாய்களாக இருந்த ஒதுக்கீடு 1989-90ல் 460 கோடி ரூபாய்களாக உயர்ந்துள்ளது. மின் விநியோகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையில், 40 ஆயிரம் குடிசைகளுக்குப் புதிதாக மின் இணைப்பும், 40 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு இணைப்பும் தரப்படும்.




1989-90 ஆம் ஆண்டில் 6 ஆயிரம் கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் குடி நீர் வழங்கப்படும்.




ஆதிதிராவிடர், பழங்குடியினர், மீனவர் முதலானோருக்கு 1989-90 ஆம் ஆண்டில் இலவசமாக 45 ஆயிரம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தருவதற்காக 49 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.




மாண்புமிகு முதல்வர் அவர்களே ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கான மக்களைச் சந்தித்து, அவர்கள் தரும் கோரிக்கை மனுக் களை நேரிலேயே பெற்றுக் கொள்கிறார். இதுவரை 3 இலட்சம் மனுக்களுக்கு மேல் உடனுக்குடன் பரிசீலிக்கப்பட்டுப் பரிகாரங்கள் காணப்பட்டுள்ளன.




ஆலைகள் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளிகள் அனைவருக்கும் இடைக் கால நிவாரணமாக ரூ.250 வழங்கி உதவப் பட்டது.




ஊராட்சி - உள்ளாட்சி அமைப்புகளிட மிருந்து முன்பு பறிமுதல் செய்யப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையும் திருப்பித் தருவதோடு, கூடுதலாக மேலும் பல புதிய அதிகாரங்களும் கூடுதல் நிதி வசதிகளும் வழங்கப்பட்டன.




85 இலட்சம் சிறார்களுக்குப் பயன்தரும் சத்துணவுத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப் படும். ஜூன் 3 ஆம் தேதி முதல் இரு வாரங்களுக்கு ஒருமுறை குழந்தைகளுக்கு முட்டையும் வழங்கப்படும்.




முதியோர், உடல் ஊனமுற்றோர், கைம் பெண்கள், அனாதைகள் முதலானோருக்குத் தரப்படும் உதவித்தொகை மாதம் ரூ.35 லிருந்து ரூ.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.




விபத்துக்களில் மரணமடைவோர் குடும்பங் களுக்கு ரூ.10 ஆயிரம் தர வகைசெய்யும் உதவித் திட்டத்தின் கீழ் - இனி, சைகிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா, டாக்சி, லாரி ஓட்டுநர்களும் கட்டடத் தொழிலாளர்களும் பயன்பெறுவார்கள்.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி :

அதி நவீன பட்டு வகைகள்




100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

# கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

- புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
- பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



உதகமண்டலத்தில் நடைபெற்ற மலர்க்கண்காட்சி நிறைவு விழாவில் (21.5.89) பங்கு கொண்ட